# பிறந்துவிட்ட புது யுகத்தில்

(உருப்பெறும் உணர்வுகள்)



–சந்திரா தனபாலசிங்கம்

# பிறந்துவிட்ட புதுயுகத்தில்

[உருப்பெறும் உணர்வுகள்]

(சிறுகதைத் தொகுப்பு)


சந்திரா தனபாலசிங்கம்

கரிகணன்,
யாழ்ப்பாணம்.

பிறந்துவிட்ட புதுயுகத்தில்
சிறுகதைகள்

©: சந்திரா தனபாலசிங்கம்
'சாயி இல்லம்'
மாப்பியன் மில் லேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2013 ஆவணி |
| பதிப்பு | : | கரிகணன், யாழ்ப்பாணம் |
| விலை | : | ரூபாய் 250/= |
| ISBN | : | 978-955-44401-0-4 |



சமர்ப்பணம்



# முன்னுரை

நான் சந்திரா தனபாலசிங்கம். என் இயற்பெயர் சந்திரலட்சுமி. என் அன்னை எனக்கிட்ட பெயர் யோகினி. தந்தை வெற்றி வேலாயுதர் நாகநாதன். தாயார் திருநேத்திரவல்லி. அக்கா ஆனந்தலட்சுமி. அண்ணன் வி.என். மதிஅழகன். தங்கை கலாவல்லி. நான் பிறந்த இடம் கல்வளை, சண்டிலிப்பாய். எங்கள் குலதெய்வம் கல்வளைப் பிள்ளையார். நான் கல்வி கற்ற பாடசாலைகள் சண்டிலிப்பாய் வாணி நிகேதன வித்தியாசாலை, மானிப்பாய் மகளிர் கல்லூரி. கல்வித்தகைமை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம்.

எனது பிறந்த தினம் 16.05.1953

அரசியலில் ஆர்வம் என் இயல்பு. எழுத்துலகில் எனக்கு மிக நீண்ட கால வரலாறு உண்டு. 1989. இதற்குப் பின்னரான என் எழுத்துக்கள் எல்லாமே யுத்தத்தின் கொடுமையான அநுபவங்களினால் வெளிவந்தவைதான்.

சில மனிதர்கள் - உருப்பெறும் உணர்வுகள் - சத்தியதரிசனம் - வைரப்பனைமரம் என்பன நான் இதுவரையும் எழுதி வெளிவந்த நூல்களாகும்.

2008 டிசெம்பர் மாதம் வைரப்பனைமரம் வெளியிடப்பட்டது.

மனிதர்களின் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டதே இறை சக்தியாகும். அதுவே சிவசக்தியாகும்.

இதுதான் வைரப்பனை மரத்தில் நான் கொடுத்த முக்கிய செய்தியாகும்.

நான் எழுதிய சிறுகதையான 'இது ஒரு தொடர்கதை' கொழும்பு தினக்குரல் புத்திரிகையில் வெளிவந்த தினம் எனது பிறந்த நாளான

மே மாதம் பதினாறாம் திகதியாகும். இலங்கையில் யுத்தம் முடிந்த தினமும் மே மாதம் பதினாறாம் திகதிதான். எனது போர்க்கால எழுத்துக்களுக்காக இறைவன் எனக்குத் தந்த பரிசு இது. இந்த அதிசயம் என்னால் உணரப்பட்டபோது நான் எழுதியவற்றையெல்லாம் மீண்டும் திரும்பிப் பார்த்தேன். அவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கதைகள்தான் பிறந்துவிட்ட புதுயுகத்தில் உருப்பெறும் உணர்வுளாக மாறி நம் கண்முன்னே திகழ்கின்றது.

இனி வரப்போகும் ஆண்டுகளில் வரும் மே மாதம் பதினாறாம் திகதிகள் எல்லாம் இலங்கையில் யுத்தம் முடிந்த நாளாகவே என்னால் நினைவு கொள்ளப் படும்.

தோற்றச் சுடரொளியாய், சொல்லாத நுண்ணுணர்வாய் என்னுள்ளே என்றென்றும் உறைந்திருப்பவர் எம்பெருமான் சிவன்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு".

என்பது குறள். 'அன்பே சிவம்' என்று வாழ்ந்திருந்த எனக்கு இறைவன் தந்த இந்தப் பரிசு மிக அற்புதமானது.

அவனே நடத்தினான்.

அவனே முடித்தும் வைத்தான்.

என் செயலாவது யாதொன்றுமில்லை.

நின் செயலேயென்று உணரப்பெற்றேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

இன்பமே சூழ்க!

எல்லோரும் வாழ்க!

இலங்கை என்பது நம் தாய்த்திருநாடு.

அன்புடன்

சந்திரா தனபாலசிங்கம்.



## உருப்பெறும் உணர்வுகள்

# எழுத்தும் வாழ்வும் - ஒரு நோக்கு

....... சந்திரா தனபாலசிங்கம் தன்னைப் பெண்ணிய சிந்தனைக்குள் மட்டும் மட்டுப்படுத்தாமல், சமூக ஒடுக்குமுறையினுள் அதற்கெதிராகப் போராடும் பாத்திரங்களை எம்முன் உலவவிட்டுள்ளார். அவரது ஆன்மீக தரிசனப் பார்வை எதிர்ப்பு இலக்கியப்படைப்புக்கு வழி சமைத்துள்ளதெனலாம்.

கொழும்புத் தமிழ்ச்சங்கத்திலே 2001 மார்ச் 08ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்திலே எழுத்தாளர் சந்திரா தனபாலசிங்கம் உரை நிகழ்த்தியபோது, "பல்வேறு துயர்களிடையே வாழும் போதும் யாழ்ப்பாண மக்கள் கண்ணீர் விடுவதில்லை. துணிவுடன் வாழ்கிறார்கள்" எனக் குறிப்பிட்டார்.

தலைமை வகித்த செல்வி சற்சொரூபவதி நாதன் கண்ணீர் விடுவதில்லை எனினும் உள்ளத்தால் உருகுவதை உணர முடிகிறது என சந்திராவின் பேச்சுப்பற்றிக் குறிப்பிட்டார்....

சோ.தேவராஜா,
தேசிய கலை இலக்கியப் பேரவை.



# அணிந்துரை

....... சந்திரா தனபாலசிங்கத்தின், 'உருப்பெறும் உணர்வுகள்' சிறுகதைத் தொகுதி ஒரு யுத்தகாலத்தின் அறுவடையாக வெளிவந்திருக்கின்றது. கலை இலக்கியம் என்பது, அறிவிப்பதற்கும் அப்பால், தான் எடுத்துச்சொல்ல விழையும் உணர்வினை, மனித மனங்களில் இயல்பாகத்தொற்ற வைப்பதே என்பதனை, இந்தச் சிறுகதைத் தொகுதி தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

இந்தத் தொகுதியின் அனைத்துக் கதைகளுமே யுத்தத்தின் கெடுபிடியையும், அதனால் சமுதாயத்தில் எழுகின்ற துன்பதுயரங் களையும், அவலங்களையும், சோகங்களையும் சித்திரிப்பனவையாக அமைந்துள்ளன. யுத்தத்தின் முதற்பலிக்கடாக்கள் பெண்களே என்பதையும், அவர்களே போர்க்காலச்சமுதாயத்தின் சுமைதாங்கிகள் என்பதையும் இந்தச் சிறுகதைகள் உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கின்றன.

யுத்தம் என்பது குடும்ப அமைப்பை மட்டுமன்றி, மனித இருப்பையே கேள்விக்குறியாக்கி விடுகின்றது. தமிழ்ச்சமூகத்தின் பிரதான வாழ்வியல் அம்சம் அதன் தனிச் சொத்துடைமையாகும். வடக்குக் கிழக்கிலே பாரம்பரியமாக நிலம், வீடு, உறவு என நிரந்தர சொத்துடைமையுடன் வசிக்கும் மக்கள் யுத்தத்தின் காரணமாக இந்த மண்ணிலிருந்தே வேருடன் பெயர்த்தெறியப்பட்ட அவலங்கள் சொல்லுந்தரமன்று.

வடக்குக் கிழக்கிலே இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த போது அப்பிரதேச மக்களின் வாழ்விலே இடப்பெயர்வு என்பது நாளாந்த நிகழ்ச்சியாகிப்போனது. 1995ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்தைவிட்டு, மக்கள், ஒட்டுமொத்தமாகப் புலம் பெயர்ந்து சென்றமை, மிகப்பெரும் அவலமாகும். உயிரினும் மேலாக மதிக்கும் தமது வீடு வாசல்களையும் ஏனைய உடைமைகளையும் அந்த மண்ணிலிருந்து பிரித்தெடுக்க முடியாத வயோதிபர்களையும் பிரிந்து, கொட்டும் மழையில் சோகத்தைச் சுமந்தபடி அவர்கள் அந்த மண்ணைவிட்டு வெளியேறிய அவலம் மறக்க முடியாதது. 'மூன்றாவது அதிசயம்', 'துன்பப்பட்டோர் பேறு பெற்றோர்' போன்ற சிறுகதைகள், இத்தகைய இடப்பெயர்வைச் சிறப்பாகச் சித்திரிக்கின்றன.

அநியாயங்களுக்கெதிராக போர்க்குரல் எழுப்பும் பெண்ணாக 'விதி வழிப்பயணங்களில்' கல்யாணி சித்திரிக்கப்பட்டிருக்கின்றாள். பெற்றோரின் நிர்ப்பந்தத்திற்காக, வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவனுக்குக் கழுத்து நீட்டும் கல்யாணி, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத் தோன்றுகின்றாள். ஆண்மைக்கும், அதிகாரத்துக்கும், அடக்குமுறைக்கும் எதிராக அவள் எழுப்பும் கேள்விகள் சுடுசரமாகச் சீறுகின்றன; துச்சாதனர்களைத் துகிலுரிந்து காட்டுகின்றன.

'நெருப்பாற்றினுள் வீழ்ந்த பின்னாலும், நீந்திக்கரைசேர தன் வாழ்வனு பவங்கள் தனக்குக் கை கொடுக்கும் என்றவள் நம்பினாள்'

என ஆசிரியர் கூறுவது இக்காலப் பெண்ணினத்துக்கான ஓர் ஆற்றுப்படை யாகும்.

சந்திரா தனபாலசிங்கத்தின் இந்த நூலிலுள்ள சிறுகதைகள் அனைத்தும், சிறுகதை இலக்கியத்துக்கான அனைத்து இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றன.

இழப்புக்களின் மத்தியிலும் வாழத்துடிக்கும் மனிதனின் இயல்பூக்கம் 'மூன்றாவது அதிசயத்தில்' படம் பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மண்ணிலே, வடக்கு வீதியிலே வைத்து, நல்லூர்க்கந்தனுக்கு ஹெலிக்கொப்டர் பூத்தூவுகின்றது. ஆச்சி துடிதுடித்துப் போகின்றாள். "கடவுளே! நல்லூர்க்கந்த சுவாமி யாரே! உம்மையும் தமதாக்கிப் போட்டி னமோ?" எனக்கதறியபடி மண்ணிலே சாய்ந்து உயிர் விடுகின்றாள் ஆச்சி. 'ஆச்சி நல்லூர் போகிறாள்' கதையின் ஆச்சி ஓர் அற்புதப்படைப்பு.

இந்தத் தொகுதியிலுள்ள அனைத்துக் கதைகளுமே புதிய தலைமுறையின் எழுச்சிக்குரலாகவும், பெண்ணினத்தின் உரிமைக்குரலாகவும் ஒலிக்கின்றன.

கலை இலக்கியத்திலே நிகழ்வுகள் காரணகாரியத் தொடர்பையும், உள்ளார்ந்த சூட்சுமங்களையும் வெளிக்கொணர்வதாக அமையவேண்டும்....

சி.வன்னியகுலம் எம்.ஏ.
இலங்கை வானொலியில் 2001 ஆம் ஆண்டு
உருப்பெறும் உணர்வுகள்
சிறுகதைத்தொகுதியை விமர்சனம் செய்திருந்த அப்போதைய
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின்
செய்தி நடப்பு விவகாரப் பணிப்பாளர்.

நன்றி

சி.வன்னியகுலம் அவர்களின்
புனைகதை இலக்கிய விமர்சனம்
நூலுக்கு.



# எழுத்தாளரின் ஏற்புரை

“....... சமூக அவலங்களைகலையழகுடன்வெளிப்படுத்தவேண்டும்என்ற கொள்கையினைவகுத்துக்கொண்டு அதன்படி எழுதுபவள்நான். முடியாமல் தொடரும் இந்த யுத்தத்தின் காரணமாக யாழ்ப்பாண மக்கள் படுகின்ற இன்னல்களைச் சிறுகதைகள் மூலம் எடுத்துச்சொல்லியிருக்கின்றேன். இறைவனே நீண்ட காலமாக நம் நாட்டில் நாம் அநுபவித்துவரும் இந்தக் கஷ்டங்களையெல்லாம் நீதான் நீக்க வேண்டும். இதுதான் என்பிரார்த்தனையாகும்.....

2001 ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி அன்று கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வைத்து இந்த எனது பிரார்த்தனை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. என் எழுத்துக்களைப் புரிந்துகொண்டு என்னை ஏற்றுக்கொண்டவர்களை இறைவனும் ஏற்றுக்கொண்டார்

இலங்கையில் யுத்தம் முடிந்தது!<br>
புதியதோர் உலகம் பிறந்தது!<br>
உலகத்தின் தூக்கம் கலைந்தது!<br>
உள்ளத்தின் ஏக்கம் தொலைந்தது!

ஈர்த்தென்னை ஆட்கொண்ட<br>
எந்தைபெருமானுக்கு<br>
என்றென்றும் நன்றியுடன்<br>
சந்திரா தனபாலசிங்கம்.

**தேசிய கலை இலக்கியப் பேரவையின்**

மாதாந்த புத்தகப் பண்பாட்டு நிகழ்வில்

**சந்திரா தனபாலசிங்கம்**

படைப்பில்

# "உருப்பெறும் உணர்வுகள்"

(சிறுகதைத் தொகுதி)

## நூல் வெளியீட்டு விழா

**இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபம்**

**(2001-04-07)**

**ஏப்ரல் 7 சனி 5.00 மணிக்கு**

**திரு. சோ. தேவராஜா**

தலைமையில் நடைபெறும்

நிகழ்வுகள்:

***********

வாழ்த்துப்பா:

திருமதி. நேசபூபதி நாகராஜன்

வரவேற்புரை:

திரு. க. ஆனந்த குமாரசாமி

தலைமையுரை:

திரு. சோ. தேவராஜா

நூல் ஆய்வுரை:

திரு. எஸ். சக்திதரன்

திரு. சி. வன்னியகுலம்

(பணிப்பாளர் ரூபவாஹினி கூட்டுத்தாபனம்)

திரு. கே. விஜயன்

(எழுத்தாளர், பத்திரிகையாளர்)

ஏற்புரை:

சந்திரா தனபாலசிங்கம்

நன்றியுரை :

மாவை வரோதயன்

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1) | பிறந்துவிட்ட புதுயுகத்தில் | 01 |
| 2) | உருப்பெறும் உணர்வுகள் | 08 |
| 3) | சிலமனிதர்கள் | 13 |
| 4) | விதி வழிப் பயணங்களில் | 20 |
| 5) | மூன்றாவது அதிசயம் | 27 |
| 6) | துன்பப்பட்டோர் பேறுபெற்றோர் | 34 |
| 7) | கிழக்கு வெளுக்கும் | 39 |
| 8) | மதுர பாவ விந்தைகள் | 44 |
| 9) | ஆச்சி நல்லூர் போகிறாள் | 50 |
| 10) | சங்கரியப்பா | 57 |
| 11) | யாவும் கற்பனையல்ல | 64 |
| 12) | இது ஒரு தொடர்கதை | 73 |
| 13) | திறந்தாய் வாழி | 81 |
| 14) | யோசிக்க வேண்டியுள்ளது | 85 |
| 15) | யோகினி | 92 |
| 16) | ஞானோதயம் | 95 |
| 17) | கல்லும் கதை சொல்லும் | 98 |
| 18) | யுக அவதாரன் | 101 |
| 19) | அணில் முதுகில் கோடுகள் | 106 |

# 1

## பிறந்துவிட்ட புதுயுகத்தில்!

மாலை வெய்யில் மயக்கத்திலே, தாய்மையின் பூரிப்பிலே, இளந்தென்றலின் தாலாட்டிலே, தலையசைத்து நின்றிருந்தன நெற்பயிர்களெல்லாம். பொன்னே போல் பொலிந்திருந்த நெற்கதிர்களை பெருமையுடன் பார்த்து நின்றான் சரவணை.

இத்தனை விளைச்சலும் அவனது உழைப்பின் சின்னமல்லவா...

முறை தவறாது பெய்து தந்த பருவ மழையை வாழ்த்தி நின்றது அந்த ஏழை நெஞ்சம். வானத்தைப் பார்த்து இரு கை சேர்த்து வணங்கித்தொழுதான் அவன்.

எத்தனையோ வருடங்களின் பின் இந்தத் தடவைதான் இந்த அமோக விளைச்சல். எப்படியும் ஒரு இருநூறு புசலாவது தேறும். முதலில் ஒரு பகுதியை விற்று வரும் பணத்தில் குத்தகைக்காசைக்கொடுத்து, சில்லறைக்கடன்களையும் அடைத்துவிடவேண்டும். மூத்தவள் பொன்னியையும் எப்பிடியும் இந்த வருசம் ஒருத்தன்ரை கையிலை பிடிச்சுக் கொடுத்துவிடவேணும்... இப்படி இன்னும் ஏதேதோ கற்பனைகளில் மூழ்கி மகிழ்ந்து கொண்டிருந்தான் சரவணை.

தன் சிறுவயதுப் பராயத்திலேயே பெற்ற தாயை இழந்து விட்டவன் சரவணை. அப்போதிருந்து

வாலிபனாகும் வரை விதானையார் கனகரத்தினம் வீட்டில்தான் வளர்ந்து வந்தான். விதானையார் அவனை 'உள்வேலைகள்' செய்ய அனுமதிக்காது விட்டாலும் தனக்கு எடுபிடிவேலை செய்யவும், தன் மகனுக்கு விளையாட்டுத்தோழனாக இருக்கவும் அனுமதித்திருந்தார்.

சும்மா சொல்லக்கூடாது. அந்தக் காலத்தில் சரவணை ஐந்தாம் வகுப்புவரை படித்திருந்தான் என்றால் அது விதானையாரின் தயவினால்தான்.

'உவனையும் உன்ரை மகனோடை சேர்த்துப்படிப்பிச்சு பெரிய மனுசனாக்கப் போகிறாயோ?'' என்று அவரது உறவினர்கள் அவரின் மேல் பாய்ந்தாலும் அவர் அதைப்பொருட்படுத்திப் பதில் சொன்னவரில்லை. தன் மகனுக்குப் பள்ளிக்கூடம் போய்வர ஒரு நல்ல துணையாக சரவணையை அவர் நினைத்தாரே தவிர அவன் படித்து முன்னேற வேண்டும் என்றவர் தன் கனவில்கூட நினைத்தவரில்லை.

தன் மகன் ஆறாம் வகுப்புக்கு வந்ததும் இனி அவனுக்குத் துணை தேவையில்லை என்று நினைத்தாரோ என்னவோ சரவணையைத் தன் வீட்டோடு வைத்துக்கொண்டார். சரவணைக்கென்னவோ தானும் மேலே படிக்க வேண்டும் என்றுதான் ஆசை. ஆனால் ஏழைகளின் ஆசைகள் எல்லாமே நிறைவேறிவிடுமா என்ன? ஆயினும் அந்தக் காலத்துப் படிப்பு. சரவணை சாடையாக ஆங்கிலம்கூடப் பேசுவான் என்றால் இந்தக்காலம் யாருமே நம்பமாட்டார்கள்.

விதானையாரின் ஒரே மகன் சண்முகசுந்தரத்தின்மேல் "தம்பி... தம்பி" என்று சொல்லி தன் உயிரையே வைத்திருந்தான் சரவணை. இருவருக்கும் சமவயதுதான். அதற்காக, 'வாடா மச்சான்" என்று கூப்பிட்டுவிட முடியுமா என்ன?

சண்முகம்தான் விபரம் புரியாமல் அவனோடு கட்டிப்புரண்டு விளையாடுவான். தன்னோடுதான் அவன் சாப்பிட வேண்டுமென்றும், தனக்கு வாங்கப்படும் ஆடைகள் போலவே அவனுக்கும் வாங்கவேண்டும் என்றும் அடம்பிடிப்பான். சண்முகத்தின் கள்ளமில்லாத அந்த அன்புதான் சரவணையை அந்நேரம் அந்த வீட்டோடு கட்டிப்போட்டிருந்தது.

வயது வந்ததும் சண்முகசுந்தரம் வியாபாரம் என்றும் வர்த்தகம் என்றும் சொல்லிக்கொண்டு கொழும்புப்பக்கம் போய்விட்டார். அங்கே அவரது தாய்மாமன் இருந்தார். அவர் அழகுமகள் இவருக்குத்தான் என்பது பிறந்த வீட்டுக்குள்ளேயே நடந்த ஒப்பந்தமாம்.

இந்த நேரத்தில் விதானையாரோடு கூடவே இருந்து வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தவன் சரவணைதான்.

முதன் முதலாக சண்முகம் பயணத்தால் ஊருக்கு வந்திருந்தபோது சரவணை வழக்கம்போலவே, "தம்பி... தம்பி" என்று உற்சாகமாகப் பேசத்தொடங்கினான். ஆனால் அவரோ, "சரவணை எங்கடை இந்த அண்ணன் தம்பி உறவெல்லாம் சின்ன வயசோடை முடிஞ்சு போச்சுது. இனியும் இப்பிடிக்கதைச்சாயெண்டால் என்ரை இன சனங்கள் என்னை மதிக்காதுகள். இனி ஒருதரம் கூட என்னை நீ அப்பிடிக் கூப்பிடக்கூடாது" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அவரது வார்த்தைகள் அவன் நெஞ்சில் கூர் ஈட்டியெனப் பாய்ந்தது. ஆயினும் அவரை எதிர்த்துப்பேச அவனுக்கு என்னதான் தகுதியுண்டு? அன்று தொடங்கி அவர் அவனுக்கு 'ஐயா' வாகிப்போனார்.

என்னதான் சண்முகம் மாறிப்போய்விட்டிருந்தாலும் அவனிடம் வைத்திருந்த அந்தப் பழைய அன்பை மட்டும் அவர் மறந்துபோய்விட வில்லை. இல்லையென்றால் விதானையாரின் மறைவுக்குப்பின்னால் தமது பரம்பரைச் சொத்தில் ஒரு பகுதியான இரண்டு ஏக்கர் வயல் காணியை குறைந்தளவு குத்தகைப் பணத்துக்காக அவனுக்குக் குத்தகைக்குக் கொடுத்திருக்கமாட்டார்.

வானம் பார்த்தபூமி அது. மாரி மழை பெய்தால்தான் நெல் விளையும். ஆனால் மழை பெய்ததோ இல்லையோ; நெல் விளைந்ததோ இல்லையோ குத்தகைக்காசை மட்டும் தவறாமல் அவருக்குக் கொடுத்து விடுவான். கோடையில் எள், பயறு என்று சிறுதானியப்பயிர்ச்செய்கை மூலம் இந்தப் பணப்பிரச்சினையைச் சரிக்கட்டிவிடுவான் சரவணை. அத்துடன் வயல் ஒன்றில் இருந்த கிணற்றின் நீர்கொண்டு காய்கறித்தோட்டமும் போடுவான்.

சண்முகசுந்தரம் கொழும்பில் வியாபாரத்தில் கொடிகட்டிப்பறந்து கொண்டிருந்தார். தேயிலைத்தூளில் மரத்தூளைக்கலந்து விற்பது, அரிசி பருப்பில் மண்கல்லைக்கலந்து கட்டுவது, அவசரத்திற்கு உதவுவதுபோல் நடித்து பணம் கடன் கொடுத்து அநியாயமாய் பிறர் சொத்துக்களை அபகரித்துக்கொள்வது, எங்கேயாவது அகப்பட்டுக்கொண்டால் அதற்கென்று தன்னிடம் வைத்திருக்கும் ஒரு நபரை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பது, பின்னர் தானே அபராதம் கட்டி அவரை விடுவித்து வருவது என்று சம்பாத்தியத்தில் பெரும் பணமுதலையாக மாறிக்கொண்டுமிருந்தார்.

"அப்பா... அப்பா... உன்னைத்தேடிக் கொண்டு விதானையார் வீட்டு ஐயா வாறார்" என்று கத்திக்கொண்டே அரக்கப்பரக்க ஓடி வந்தான் சரவணையின் இளைய மகன் மார்க்கண்டன்.

உண்மைதான், சண்முகம் ஐயாதான். வந்து கொண்டிருந்தார்தான். தன் பருத்த தொந்தியை தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு, வெள்ளை வேட்டியும் அள்ளு சால்வையும் காற்றில் படபடக்க, கையில் குடைபிடித்து வந்து கொண்டிருந்தார் ஐயா.

சடக்கென்று தன் தோளில் இருந்த துண்டை எடுத்துஇடுப்பில் கட்டிக்கொண்டான் சரவணை.

'ஐயா பயணத்தாலை வந்திட்டுதாக்கும். இப்ப என்னைப் பார்க்கத்தான் வந்ததாக்கும். ஒரு சொல்லுச் சொல்லி அனுப்பியிருந்தால் ஓடி வந்திருக்க மாட்டானோ இந்தச் சரவணையன்?" என்ற குழைவான பேச்சுடன் தான் நின்ற வரம்பிலிருந்தும் கீழே இறங்கி பணிவாக நின்று கொண்டான் அவன். ஐயா நடந்து வந்து கொண்டிருக்கும் வரம்பில் அவன் நிற்கலாமா என்ன?

"கேட்டியே நல்லதொரு கேள்வி? என்னுடைய வயல்களைப் பார்க்க நான் வரக்கூடாதோ சொல்லு" என்னுடைய வயல்கள் என்பதற்கு அவர் கொடுத்த அழுத்தத்தைப் புரிந்து கொள்ளும் மனநிலையில் அவன் இல்லை. 'எவ்வளவு காலம் நான் இந்தப் பக்கம் வந்து... பலகாலம் வயல் வரம்பில் நடந்த பழக்கம் இல்லாமல் போனதால் பேச்சை முடிக்கும் முன்னரே வழுக்கி விழப்போனார் சண்முகத்தார்.

பாய்ந்து போய் தாங்கிப்பிடித்துக் கொண்டான் சரவணை. இப்படிப்பட்ட பெரிய மனிதர்களை கீழே விழுந்துவிடவிடுவது சரியானதல்லவே.. ஆனால் அவசரத்தில் அவரை விழவிடாமல் இவன் பிடித்துக்கொண்டாலும், அவர் நிமிர்ந்து நின்ற பின்னால் தான் செய்யக்கூடாத எதையோ செய்து விட்டதாக எண்ணிக் கூசிப்போய் நின்றான் "இந்த எலி பிடிக்கிறவங்கள் செய்த வேலை இது... வரம்புகளையெல்லாம் வெட்டிக்கொத்திப் போட்டாங்கள்... அதுதான் ஐயாவுக்கு கால் தவறினதாக்கும்... இவன் நிலைமையைச் சமாளிக்க நினைத்து எதையோ சொல்லப்போக, "சடார்... சடார்" என்ற சத்தம் கேட்டு திடுக்கிட்டுப் போனான் சரவணை.

ஐயாதான் அங்கவஸ்திரத்தால் தன் உடம்பைத்தட்டி விட்டுக்கொண்டிருந்தார். அவர் உடம்பில் ஒட்டிக் கொண்டிருந்து கீழே வந்து ஏதாவது விழுகிறதா என்று பார்த்தான் சரவணை. சும்மா சொல்லக்கூடாது. ஒன்றுமே விழவில்லை.

ஒரே வயதான தன்னையும் தன்ஐயாவையும் ஒரு கணம் ஒப்பிட்டுப்பார்த்தன அவன் கண்கள். உழைப்பவனுக்கு அரை வயிறுதான் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்?

இந்தத் தடவை நல்ல விளைச்சல் போலை. எந்த மட்டிலை வெட்டப்போறாய் சரவணை? மௌனத்தைக் கலைத்து மெதுவாகப் பேச்சைத் தொடங்கினார் சண்முகம்.

'நல்ல வெய்யில் எறிச்சுத்தருமாக இருந்தால் இன்னும் ஒரு கிழமையாலை வெட்டலாம் ஐயா. வெட்டி முடிஞ்சகையோடை குத்தகைக்காசைத் தந்திடுவனாக்கும் "ஐயா குத்தகைப் பணத்துக்காகத் தான் வந்திருக்கிறாராக்கும் என்று சரவணையின் மனம் தப்புக்கணக்குப் போட்டு விட்டது.

"சாய்... அப்படிச்சொல்லாதை சரவணை. இந்த முறை எண்டில்லை. இனி எந்த முறையுமே நான் உன்னட்டைக் கைநீட்டிக் காசு வாங்க மாட்டன்"

"ஐயா என்னவாக்கும் சொல்லுது?" அவர் சொன்ன கதையைக் கேட்ட சரவணைக்குப் பெருங்குழப்பமாக இருந்தது.

"ஓமடா சரவணை. எனக்குக்காசு வேண்டாம். நெல்லைத்தான் சரிபாதியாகப் பிரிச்சுத்தந்திடு. இந்தக் காலத்திலை நீ தாற காசுக்கு என்ன மதிப்பு? நெல்லுத்தானே பொன்விலை பவுண் விலைபோகுது! உன்ரை காசை வைச்சு நான் பூசை பண்ணுறதோ சொல்லு" வெகு அலட்சியமாக அவன் கேள்விக்குப்பதில் சொல்லிவிட்டு... அவன் நெஞ்சில் நெருப்பை அள்ளிக்கொட்டிவிட்டு... தானும் ஒரு சுருட்டை எடுத்துப்பற்ற வைத்துக்கொண்டார் ஐயா.

"இருபது வருசமாகக் காசுதானே தந்து வந்தனான். இப்ப மட்டும் நெல்லைக் கேக்கிறது நியாயமில்லை பார்க்க". பொங்கி வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு நிதானமாகவே இதைச்சொன்னான் சரவணை.

"நான் நிலச்சொந்தக்காரன். நீ சொல்லுறதை நான் கேட்க வேணுமோ? நான் சொல்லுறதை நீ கேட்க வேணுமோ? நான் கேட்டதைத்தான் நீ தரவேணும்" சண்முகத்தாரின் குரலில் நன்றாகவே சூடேறியிருந்தது.

"நிலம் உங்கடை சொந்தம் தான். நான் இல்லையெண்டு சொல்லமாட்டான். அல்லும் பகலும் அதிலை பாடுபட்டது நானும் என்ரை குடும்பமும்தான். கணக்கு வழக்கில்லாமல் காசு செலவழிச்சதும் இந்த ஏழைச்சாதிதான். பாடுபட்டது நாங்கள்... பலன் எடுக்க நீங்களோ?

இது என்ன நியாயம் எண்டு கேக்கிறன். முடியாது. பாதி நெல்லைப் பிரிச்சுத்தர முடியாது. அப்பிடித்தரவேணும் எண்டு நினைச்சிருந்தால் அதை விதைப்புக்கு முன்னமே எனக்கு நீங்கள் சொல்லியிருக்க வேணும்' சரவணை தன்னை மறந்து உரத்துப்பேசி விட்டான்.

'ஓ ஹோ எண்டானாம், பேசிப் பார்க்கிறாயோ சரவணை. உன்னைச் சொல்லிக்குற்றமில்லை. இந்தக் காலத்தைச் சொல்ல வேணும். காலம் பிழைச்சுதெண்டால் கண்டதெல்லாம் எழும்பி நிண்டு கண்டபடிதான் பேசும். சேட்டையை விட்டுப்போட்டு நான் கேட்டதைத்தந்திடு. வெட்டிலண்டைக்கு எனக்குச் சொல்லி அனுப்ப வேணும். எல்லாம் சரியாக எடுத்துக்கொண்டுதான் நான் கொழும்பு திரும்புவன்" என்று நறுக்காகப் பேசிவிட்டு திரும்பி நடக்கத் தொடங்கிவிட்டார் சண்முகம். சரவணையின் முகம் பார்த்து விடைபெறும் எண்ணம் அவருக்கில்லை.

கொந்தளிக்கும் எண்ண அலைகளுடனே தன் உழைப்பையும், வியர்வையையும் உரமாகக்கொண்டு விளைந்து நின்ற நெல் வயல்களைப் பார்த்தான் சரவணை. கட்டுப்படுத்த முடியாமல் அவன் கண்களிரண்டும் கண்ணீரைப் பொழிந்து கொண்டிருந்தன. அவனது எண்ணங்கள் ஆசைகள் எல்லாமே தரைமட்டமாகப் போய்விடுமோ?

இல்லை. அப்படி நடக்க அவன் விடப்போவதில்லை. ஓரளவு படித்த, நாட்டு நடப்புத்தெரிந்த சரவணைதான் ஏழைத் தொழிலாளர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகத்திகழப் போகிறான். பழைய காலம் போல இனியும் ஐயா போன்றவருக்கெல்லாம் நன்றிகாட்டி வாலாட்டிக் கொண்டிருக்கமுடியாது அவனால், அவன் துணிந்து விட்டான்.

இரவோடிரவாக பௌர்ணமி நிலவில் வயல் எல்லாம் அறுவடை செய்துவிட்டானாம் சரவணை. அவன் கூலிக்கென்று ஆளே பிடிக்கவில்லையாம். எல்லாம் அவன் ஆட்கள் செய்ததுதானாம். காலைப் பொழுதில் சண்முகத்தாரின் காதில் விழுந்தது இந்தச்செய்தி.

ஆள்பலம். அது தான் அவன் இனசனத்தின் பலம்.

கொழும்பில் எத்தனையோவியாபாரப் பிரச்சினைகளை. எதிர்கொண்டு வெற்றி கண்டவர் சண்முகத்தார். இப்போது கதி கலங்கி நிலை குலைந்து நின்றிருந்தார். நிலைமையைச் சமாளிப்பது எப்படி என்று யோசிக்கத்தொடங்கினார். முடிவில் நிதானமாக சரவணையின் வீடு நோக்கி நடந்தார்.

சரவணையின் தந்தை வழிப்பரம்பரையினரில் ஒருவருக்குத்தான், தமது பண்ணை வேலைகள் பார்ப்பதற்கென்று, சண்முகத்தின் தந்தை வழிப்பூட்டனார், ஊரின் ஒதுக்குப்புறத்தில் ஒரு காணித்துண்டும் கொடுத்து, அதில் ஒரு கொட்டில் வீடும் கட்டிக் கொடுத்திருந்தார். அந்தக் கொட்டில் வீடு இப்போது சிறு கல்வீடாக மாறியிருந்தது. அதைச் சுற்றிப் பல வீடுகள் முளைத்துவிட்டிருந்தன. ஏறக்குறைய அவ்விடம் ஒரு சிறு கிராமம் போல உருப்பெற்று அவன் உறவுகளால் நிரம்பியிருந்தது.

சரவணையின் வீட்டின் முன்னால் ஒன்றுமே நடவாதது போல் புன்முறுவல் பூத்த முகத்தினராய் நின்றிருந்தார் திருவாளர் சண்முக சுந்தரனார். முற்றத்தில்மூட்டைமூட்டையாகக்கட்டிப்போடப்பட்டிருந்த நெற்சாக்கு மூட்டைகளைக் கண்டும் காணாதவர் போல் சரவணையுடன் பேசத்தொடங்கினார் அவர்.

'சரவணை நான் வயலுக்குள்ளை வைச்சுப் பேசினதுகள் எதையும் மனதிலை வைச்சிருக்காதை. நீ கோபிக்க மாட்டாய். எண்டது எனக்குத்தெரியும். முந்தித்தெரியுமோ? நாங்கள் உடன் பிறந்த சகோதரங்கள் மாதிரி யெல்லோ பிழங்கினனாங்கள். எனக்கு இப்ப கொழும்பிலை தொழிலெல் லாம் பெரிய நட்டமடா. ஊரிலை உள்ள காணிகளை எல்லாம் விலைக்கு விக்க வேண்டிய நிலைமையடா. நீயும் இந்த முறையோடை வயல் காணியெல்லாத்தையும் விட்டுத்தந்திடு. கடைசி எண்ட படியாலை குத்தகைக்காசுகூட எனக்கு வேண்டாம்.

மிகத்தாழ்ந்த குரலில் பேசியவரின் வார்த்தை ஜாலங்களைப்புரிந்து கொண்டான் சரவணை. முள்ளை முள்ளால் எடுக்க வந்தேன் என்று சொல்லாமல் சொல்லியது அவரது கள்ளக்கண்கள். மண்ணாசை பிடித்த அவராவது ஊரில் இருக்கும் காணிகளை விற்பதாவது.

"சரி. விலையைச் சொல்லி வயலை எல்லாம் எனக்கே தாருங்கோ. நான் மெல்ல மெல்லக் காசைத்தந்து முடிப்பன்" என்று சொல்லிக்கொண்டே தொழுவத்தில் கட்டி வைத்திருந்த மாடுகளை அவிழ்த்து விரட்டியபடி வயல் பக்கம் போய்க்கொண்டிருந்தான் சரவணை.

வீரகேசரி

*11.08.1974*

# 2

## உருப்பெறும் உணர்வுகள்

பிறந்து சிலநாள்களேயாகியிருந்த சின்னஞ்சிறிய அணில் குஞ்சு அது. அது பிறந்த விதம் யாருக்கும் தெரியாது. இப்போது தான் அதன் சிறு உடலில் சிற்சில உரோமங்கள் அரும்பத் தொடங்கியிருந்தன.

வீட்டின் முகட்டுக் கூரைக்குள் இருந்ததொரு கூட்டிலிருந்து வீட்டுத்தரையில் வந்து விழுந்திருந்தது அது. தனது குஞ்சுகளின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதற்காகவே அந்த அணில்த் தாய்; வீட்டு முகட்டுக்குள் தன் கூட்டினை அமைத்துக் கொண்டிருக்கும் போல... ஆயினும் குஞ்சு விழுந்து விட்டது.

விழுந்த சில விநாடிகளின் போதில் கண்களை மூடி மயக்கமுற்றாற்போல கிடந்தது. பின் தன் உயிரே பறி போய்க் கொண்டிருப்பது போல கத்தத் தொடங்கி விட்டது. கீச்சுக்கீச்சென்று அது கத்திய கத்தலில் தாய் அணில் தானும் கீழே இறங்கி ஓடி வந்தது. பதிலுக்குத் தானும் அப்படிக் கத்திக் கொண்டே தவிப்புடன் அங்குமிங்கும் தாவிக் கொண்டிருந்தது.

கூடவே இன்னுமொரு அணிலும் ஓடித்திரிந்தது. அது தந்தை அணிலாகத்தான் இருக்க வேண்டும். அதன் நேச நடவடிக்கையிலிருந்து அப்படித்தான் நினைக்கத் தோன்றியது.

சிறு பொழுதிலேயே பக்கத்தில் எதிரிகள் யாரும் இல்லையென்பதை அவை உறுதி செய்து கொண்டு விட்டன. மெல்லக் குஞ்சின் அருகில் வந்த தாய் அதைத் தன் வாயால் கௌவிக் கொண்டு தனக்கேயுரிய பாதைகள் வழியாக விரைந்து கூடு போய்ச் சேர்ந்தது. தந்தையும் கூடவே...

சுதர்ஸன் - ஆண்டு ஆறில் படித்துக் கொண்டிருப்பவன்... தன் வீட்டின் கூரைக்குள் இப்படி ஓர் அதிசயம் இருப்பதை அதுவரையில் அவன் அறிந்திருக்கவில்லை. நடந்து கொண்டிருந்த அணில் நாடகத்தை அவதானித்த பின்னால் தான் அவனுக்கு அந்த இரகசியம் தெரிய வந்தது. அவன் அடிக்கடி ஆர்வத்துடன் கூரை முகட்டைக் கவனிக்கத் தொடங்கினான்.

"முகட்டுக்குள் ஏதாவது தெரிகிறதோ..." என்று அவன் அப்பா அவனைக் கேட்டார். அதற்கவன் அவரைப்பார்த்து பொருள் பொதிந்த மர்மச் சிரிப்பொன்றை உதிர்த்தான். சரியாக அணில் கூடிருந்த இடத்துக்கு நேர் கீழாக தன் படிப்பு மேசையை நகர்த்திக் கொண்டான். இப்போதெல்லாம் அந்தப் படிக்கும் மேசையிலே தான் அவன் அதிகம் பொழுதைக் கழித்தான். அதனால் முன்பு போல் "படி, படி" என்று யாரும் அவனிடம் இப்போது நச்சரிப்பதில்லை.

கூட்டுக்குள் அடிக்கடி போய்வரும் தாய் அணிலைப் பார்த்திருப்பான். அதற்குள் சுமார் எத்தனை குஞ்சுகள் இருக்கக் கூடும் என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. இதுவே ஒரு மரமாக இருந்திருந்தால் மிகச்சுலபமாக அதனைத் தன்னால் அறிந்து கொண்டிருக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றியது.

மீண்டும் ஒரு நாளில் அந்த அணில் குஞ்சு கூட்டிலிருந்து தவறிக் கீழே விழுந்து விட்டது. சுதர்ஸனின் படிக்கும் மேசையில் தான் அது வந்து விழுந்திருந்தது. கீச்சிட்ட குரலில் அது கத்திய சத்தத்தில் அவனின் "பூசா" வந்து எட்டிப்பார்த்தது. முன்பெல்லாம் அவனுக்கு அது புஸ்ஸி தான். ஒருநாள் " செக்கிங்" என்று சொல்லி வீட்டிற்குள் வந்தவர்கள், படுக்கை அறையின் கட்டிலுக்குக் கீழேயும் புகுந்து பார்த்தனர். பயந்து போய் அங்கே பதுங்கியிருந்த பூனை பாய்ந்து கொண்டு வெளியே ஓடியது. அன்றவர்கள் அதைப் பூனைதான் என்று கண்டு நிம்மதி கொண்டனர். "பூசா... பூசா..." என்று அதைப்பற்றிப் பேசிக்கொண்டுதான் அவர்கள் திரும்பிப் போயினர்.

அன்றிலிருந்து தானும் அதைப் பூசாவென்றே அழைத்து வருகிறான். பூனையைப் பூசா என்பதாலோ பூசாவைப் பூனையென்பதாலோ

மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்துவிடப்போவதில்லையே....பூனை பூனை தானே... என்னதான் அது அவனின் செல்லப்பிராணியாக இருந்தாலும் அந்த அணில் குஞ்சு அதற்கு இரையாவதில் அவனுக்கு எத்தகையதோர் உடன்பாடுமில்லை.

குஞ்சைக்காக்கும் எண்ணத்தோடு அதைத் தனது கையில் எடுக்க முனைந்தான். அது நடுங்கிப் பயந்து மேசையிலிருந்தும் பாய்ந்து கீழே போய் விழுந்தது. நிச்சயம் அது தனக்குரிய இரையேதான் என்று முடிவு செய்து கொண்ட பூனையும் அதைக் குறி வைத்து ஓட்டமாய் ஓடி வந்தது.

உள்ளபடியாகவே தனக்கு அணில்குஞ்சின்மேல் அக்கறை இருந்திருக்குமேயானால் பூனையைத்தான் தான் முதலில் அவ்விடமிருந்து அகற்றியிருக்க வேண்டும் என்பதும் - குஞ்சின் மேல் தான் கை வைக்கப்போனதற்கு அதன் மேலுள்ள ஆசையே காரணம் என்னும் உண்மையும் ஒரு சேர அவனைத் தாக்கிய அந்த ஒரு கணத்தில் - அவன் மின்னல் வேகத்தில் செயற்பட்டான்.

பூனையைப்பாய்ந்து பிடித்து சாமான் அறைக்குள் கொண்டுபோட்டு அடைத்து விட்டான். மீண்டும் அணில் குஞ்சைத் தொடும் தைரியம் அவனுக்கில்லை. தாய் வந்து அதனை அழைத்துப்போகும் வரை அதற்குக் காவல் இருந்தான். விழுந்த குஞ்சு முன்னையதுதானா அல்லது இன்னொன்றா என்பதனை அதன் தோற்றம் கொண்டு அனுமானிக்க முடியாதிருந்தது. அதனால் கூட்டுக்குள் எத்தனை குஞ்சுகள் இருக்கக் கூடும் என்பதை இன்னும் தா ன் அவனுக்கு அறிய முடியாமல் இருந்தது.

சுதர்ஸன்தன் வகுப்புத் தோழன்ரூபனுக்கு இந்த அணில்கதையெல்லாம் சொல்லியிருந்தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாய் இவன் சொல்லும் கதைகளால் ரூபன் மிகவும் கவரப்பட்டிருந்தான். தான் அணில் குஞ்சை பூனையிடமிருந்து காப்பாற்றிய வித்தைதனை ரூபனுக்குச் சொல்ல வேண்டிய விதத்தினைத் தயார் செய்து கொண்டு தான் அடுத்த நாள் இவன் பாடசாலை போனான்.

அன்றவன் பாடசாலைக்கே வரவில்லை. ரூபனின் அண்ணன் செத்துப்போய் விட்டதாலேயே ரூபன் பாடசாலைக்கு வரவில்லை என்று வகுப்பறையில் சொன்னார்கள். அவனது அண்ணனும் அதே பள்ளியில் தான் ஆண்டு பதினொன்றில் படிக்கின்றான். முதல் நாள் மாலையில் ரியூட்டறிக்குப் போகும் வழியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்தான் அவன் செத்தானாம்.

முதல் நாள் மாலையில் தான் அணில் குஞ்சைக் காப்பாற்றியது போல் ரூபனின் அண்ணனை ஏன் யாரும் காப்பாற்றவில்லை என்று சுதர்ஸன் கவலைப்பட்டான். ஆண்டு ஆறு மாணவர்களோடு சேர்ந்து இவனும் செத்தவீட்டிற்குப்போனான். பெட்டிக்குள் கிடந்த ரூபனின் தமையனைப் பார்க்க அவனுக்கு அழுகை வந்தது. சுற்றியிருந்த எல்லோரும் அழுதுகொண்டுதான் இருந்தனர். ரூபனின் அண்ணன் தலையில் வெள்ளைத் துணியால் கட்டுப்போடப்பட்டிருந்தது. அதில் இரத்தமும் கசிந்திருந்தது. சாகும் போது அவன் தோளில் பை ஒன்று இருந்ததாம்...

தான் இனிமேல் எக் காரணம் கொண்டும் தோளில் பையொன்றைப் போட்டுக் கொண்டு தெருவில் போகக் கூடாதென்று சுதர்ஸன் தன் மனதிற்குள் முடிவெடுத்தான். ஏற்கனவே வீட்டில் பலவிதமான கட்டுப்பாடுகள் அவனுக்கு விதிக்கப்பட்டிருந்தன. அத்தோடு தோளில் பையையும் போடக்கூடாதென்பதையும் இவன் தானே சேர்த்துக் கொண்டான்.

ஆயினும் சுதர்ஸனுக்குப் பயமாக இருந்தது. தனது பாதுகாப்பற்ற எதிர்காலம் குறித்து நிறையச் சிந்தித்தான்.

வீடு திரும்பிய சுதர்ஸனின் கண்களில் முதலில் தென்பட்டது அந்தத் தாய் அணில் தான். கத்திக்கொண்டே அங்குமிங்கும் தாவிக்குதித்துக் கொண்டிருந்தது. தான் படிக்கும் மேசையில் அணில் குஞ்சு விழுந்திருக்கின்றதா என்று பார்த்தான். மேசைக்குக் கீழேயும் பார்த்தான். ஏறக்குறைய வீடுமுழுவதுமே பார்த்து விட்டான்.

எங்கேயும் குஞ்சு இல்லை. அணில் குஞ்சைத் தேடும் அவனைக் கவலையுடன் பார்த்தாள் அம்மா, ஓர் இண்டு இடுக்கு பாக்கியில்லாமல் தொடர்ந்தும் அவன் தேடிக் கொண்டிருந்தான். தாயணிலும் அவனிடம் ஏதோமுறையிடுவதுபோல்" கீச்சுக்கீச்" என்றுகத்திக்கொண்டுதானிருந்தது.

அம்மாவும் தவித்தாள். தான் எப்படியும் அதை அவனுக்குத் தெரியப்படுத்தியே தீர வேண்டும் என்றும் நினைத்தாள்.

தான் சமையலில் கவனமாயிருக்கும் போது அந்த அணில் குஞ்சு கீழே விழுந்திருக்க வேண்டுமென்றும்... பூனை அதனைப் பிடித்திருக்கக் கூடுமென்றும்... அதனால் தான் தாய் அணில் இப்படிக் கத்துவதாக தான் நினைப்பதாகவும் அம்மா சொன்னாள்.

அவளுக்கு சமைப்பதற்கு மட்டுமே தெரியுமென்றும், வேறு விடயங்களில் அவள் கவனமில்லாதவள் என்றும் அப்பா அடிக்கடி

அவளை நிந்தனை செய்வது அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆயினும் ஒரு நாள் அம்மா சமைக்காது விட்டாலும் எத்தனை கஷ்டம் என்பதைச் சில சமயங்களில் அனுபவ பூர்வமாக அவன் அறிந்ததனால் அம்மாவைத் தானும் அப்படி ஏசுவதற்கு அவனுக்கு மனது வரவில்லை.

தான் இல்லாத நேரங்களில் இப்படியும் நடக்கக் கூடும் என்பதைத் தன்னால் ஏன் இதுவரையிலும் நினைத்துப்பார்க்க முடியாமல் போனது என்பது அவனுக்கொரு புதிராகவே இருந்தது. அம்மா அந்தச்சம்பவத்தைக் கண்ணால் காணவில்லை என்பதையும், வெறும் ஊகத்தினால் மட்டுமே அப்படிச் சொல்கிறாள் என்பதையும் நினைத்துப் பார்த்தான்.

அணில் குஞ்சு இன்னும் உயிர் வாழ்ந்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் மேலும் தன் தேடுதல்களைத் தொடர்ந்தான். எங்காவது ஒரு முடுக்கில் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு அந்தக் குஞ்சணில் இருக்குமென்றும், அது எப்படியும் தன் கண்களுக்குத் தென்படும் என்றும், அவன் எதிர் பார்த்தான். பயத்தின் காரணமாகவே அது சத்தமில்லாமல் ஒளிந்து கொண்டிருப்பதாகவும் அவன் தனக்குள் கற்பனை செய்து கொண்டான்...

அப்போது தான் அது நடந்தது. அவனது “பூசா” மியாவென்று வந்து இவன் காலருகில் நின்றதும் ....

இதுவரையும் தவித்துக் கொண்டிருந்த தாயணில் பழி வாங்குமாப்போல் பூனைக்கு மேல் வந்து “பொத்” தென்று விழுந்ததும்.... அப்போது தான் அது நடந்தது.

திகைத்துப் போய்ப் பயந்தோடிய பூனையை வியப்புடன் பார்த்தான் அவன். பூனை தான் அணில் குஞ்சைப் பிடித்து விட்டது என்பதில் ஐயம் ஏதும் அவனுக்கிருக்கவில்லை. பூனைகளிடமிருந்து அணில் குஞ்சுகளைப் பாதுகாப்பது பற்றியும் அவன் இப்போது சிந்திக்கத் தொடங்கினான்.

சஞ்சீவி<br>*25. 10.1997*

# 3

## சில மனிதர்கள்

"எல்லாரும் வெளியாலை போ!"

தன் பலத்தையெல்லாம் ஒன்றுதிரட்டிக் கத்திச் சத்தமிட்டுக்கொண்டே அந்தப்பெரியாஸ்பத்திரியின் பதினாறாம் இலக்க வார்ட்டை ஒரு சுற்றுச் சுற்றி வந்தார், அந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தர். அவர் சொன்னதிலே உள்ள சொற்குற்றத்தை அலசிப் பார்த்தது என் நக்கீரப்புத்தி. எல்லாரும் வெளியாலை போங்கோ என்றோ அல்லது நீ வெளியாலை போ என்று ஒவ்வொருவராகக்குறித்தோ சொல்லியிருக்கலாம். இரண்டுமில்லாமல்..... அந்த "எல்லாரும் வெளியாலை போ" என்னையறியாமலே என்னைச் சிரிக்கத் தூண்டிவிட்டது.

"என்ன அக்காவுக்கு கண்டறியாத ஒரு சிரிப்பு. நீரும்தான் வெளியாலை போகவேணும். டாக்குத்தர் ஐயா வாற நேரம் ஒருத்தரும் உள்ளுக்குள்ளை நிற்கமுடியாது" என்று என்மீது தனியாகப் பாய்ந்தார் அந்த ஆஸ்பத்திரிக் காவலாளி.

"அம்மாவுக்குப் பிரஷர், கூடவே நிற்கும்படி டொக்டர்தான் சொன்னவர்" நான் மெதுவாகச் சமாளிக்க முயன்றேன்.

'அதெல்லாம் சரிவராது. இப்படித்தான் ஒரு ஆளுக்கு இரக்கம் பார்த்து போனகிழமைச் சம்பளம் முழுக்க எனக்கு வெட்டுப்பட்டுப் போச்சுது."

ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை என் முகத்துக்கெதிராக நீட்டிக்காட்டினார் அவர்.

முதல் நாள் மாலைதான் ஆஸ்பத்திரியில் சேர்ந்திருந்த என் அம்மாவைப் பார்த்தேன். நான் தன் அருகில் தான் நிற்கிறேன் என்ற பாதுகாப்பு உணர்வில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மிகுந்த மனக்கலக்கத்துடன் அவ்விடம் விட்டு நகர்ந்து, வெளிநோயாளர் பிரிவை நோக்கி நடந்தேன். அந்த வெளிநோயாளர் பிரிவிலிருந்த வாங்கில் இருக்கலாமோ விடலாமோ என நான்யோசித்த நேரம், எதேச்சையாக என் கண்கள் யன்னல் வழியே ஒரு இடத்தை நோக்கின. அங்கே அழகான, சுத்தமான பிளாஸ்ரிக் கதிரைகள் சில ஒரு பக்கமாக அடுக்கப்பட்டிருந்தன. அவை என்ன கதிரைகள் தான் என்று பார்ப்போமே என, அந்த இடத்தைக் குறித்து நடந்தேன். அது அவசர சிகிச்சைப் பிரிவு நிலையம் என்பது தெரிந்தது. யாரும் வந்துதுரத்தும் வரை கொஞ்சம் நிம்மதியாக இருப்போம் என்ற நினைவில் அதிலொரு கதிரையில் அமர்ந்து கொண்டேன்.

சுதந்திரமாக நடமாட முடியாது என்ற ஒரு காரணத்துக்காகவே அரசாங்க ஆஸ்பத்திரிகளைத் தவிர்க்கும் நான், எல்லாப் பரிசோதனைகளும் செய்து பார்த்துவிட வேண்டும் என்ற என் தாயாரின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல், இன்று இங்கு வந்து மாட்டிக்கொண்டேன். என்னைக் கேட்டால் தனி மனித சுதந்திரமே உலகில் தலையாயது என்பேன். என்னை யாரும் பாடச் சொன்னால், ‘ தனி ஒரு மனிதனுக்கு சுதந்திரம் இல்லையென்றால் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்’ என்று தான் கவி பாடுவேன்! இப்போதெல்லாம் நம் சொந்த வீட்டில் நாம் இருப்பதற்கே யார் யாருடையதோ அனுமதியெல்லாம் தேவைப்படுகிறது என்பது, வேறு விஷயம்.

கையில் வைத்திருந்த அன்றைய தினசரியை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். அப்போது அந்த அவசர சிகிச்சைப்பிரிவை நோக்கி தள்ளுவண்டியொன்று பரபரப்பாகத் தள்ளிவரப்பட்டது. சத்தம் கேட்டு அத்திசை பார்த்தேன். ஒரு இளைஞன் சுயநினைவின்றி அந்த வண்டியில் படுத்திருந்தான்; கூடவே அவன் மனைவியாக இருக்கவேண்டும் - அழுதுகொண்டே வந்தாள். இன்னும் ஒரு இளம் தம்பதியினரும் கூடவே வந்தனர். வண்டியோடு அந்த இளைஞனை சிகிச்சை நிலையத்தினுள் தள்ளிக்கொண்டு கதவை மூடிக்கொண்டனர் மருத்துவத்தாதியர்.

அந்த நோயாளியின் மனைவி விக்கி விக்கி அழுதுகொண்டே, என்னருகில் கதிரையில் வந்து அமர்ந்தாள். சும்மா யாராவது தங்கள்

கஷ்டங்களைச் சொன்னாலே மனம் உருகிப்போய்விடும் நான் அப்பெண் அழுத அழுகையில் கரைந்தே போய்விட்டேன்.

"ஏன் அழுகிறீங்கள்?" நானும் கலங்கிப்போய்க் கேட்டேன்.

"மருந்து குடிச்சிட்டார்" என்று எனக்குச் சொல்லிவிட்டு விட்ட இடத்திலிருந்து மீண்டும் அழத்தொடங்கினாள்.

"சுந்தரி அழ வேண்டாம். அழுது இப்ப என்ன எடுக்கப் போறீங்கள்?" பட்டும் படாமலும் ஆறுதல்சொன்னார்கள் அவளோடு வந்திருந்த அந்தத் தம்பதியினர். இந்தப் பெண்ணின் கணவன் எதற்காகப்போய் நஞ்சைக் குடித்திருப்பான் என்ற பலவிதமான கற்பனைகளில் நானும், அழுதுகொண்டே சுந்தரியும் சில நிமிடங்களைக் கழித்தபின், அந்த அவசர சிகிச்சைப் பிரிவின் கதவு திறக்கப்பட்டது.

"ஆள் ஆபத்தைத் தாண்டி விட்டார். வார்ட்டிலை நிற்கவேண்டி வரும்" என்று எனக்கும் சேர்த்து, நின்ற அனைவருக்கும் தகவல் கொடுத்துவிட்டு மீண்டும் கதவை மூடிக்கொண்டாள் ஒரு மருத்துவத் தாதிப் பெண்.

"சரி தம்பிக்கு ஆபத்து இல்லையாம். இனிக் கவலைப்பட ஒன்றுமில்லை. பயப்படாமல் இருங்கோ. நான் போய்ப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி இவரையும் வேலைக்கு அனுப்பிப் போட்டு , மத்தியானம் சாப்பாடு கொண்டு வாறன்" என்று தம்பி மனைவிக்கு ஆறுதல் சொல்லி விடைபெற முயற்சி செய்தனர், அந்தக் கணவனும் மனைவியும்.

"எனக்குப் பயமாக இருக்குது மச்சாள்" என்னைத் தனிய விட்டுப் போகாதையுங்கோ" என்று மேலும் கலங்கி அழுதாள் சுந்தரி.

"இஞ்சை பாருங்கோ இவ இருக்கிறா துணைக்கு, ஒரு பயமுமில்லை." நான் எதற்கு அங்கே இருக்கிறேன் என்றதொரு கேள்வி கூடக் கேட்காமல் என்னைச் சுந்தரிக்குத் துணையாக்கி விட்டு விரைந்து ஓடி மறைந்தார்கள் அவர்கள்.

போனால் போகிறது. யாரோ ஒரு பெண்தான் என்றாலும், சற்றே ஆறுதலாகப் பேசி வைப்போமே என்று, "ஏன் அவர் மருந்து குடிச்சவர்?" என்று கேட்டேன் சுந்தரியிடம். மனதுக்குள், ஏதாவது திடீர்த் திருப்பங்களுடன் கூடிய நல்ல கதை ஒன்று வராதா என்ற நப்பாசை எனக்கு.

"என்னோடை சண்டை பிடிச்சுக்கொண்டு குடிச்சிட்டார்" என்று தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சொன்ன சுந்தரியை, ஒரு தடவை மேலிருந்து கீழாகப் பார்த்து நோட்டம் விட்டேன். இனி

மெலிவதற்கே இடமில்லை என்றளவிற்கு எலும்பும் தோலுமாக, கண்களில் நிறைந்த அப்பாவித்தனத்துடன். அவளைப்பார்த்தால் யாருக்கும் சண்டை பிடிக்கும் எண்ணமே வராது. ஒருவேளை, தான் 'ஆண்பிள்ளை' என்பதை நிலைநாட்ட அநியாயத்துக்குச் சண்டை பிடிக்கத் தொடங்கி இப்படி வந்து முடிந்திருக்குமோ என, மனதுக்குள் யோசித்தேன். அதை உணர்ந்தோ என்னவோ, "அவர் நல்லவர் குடிச்சால் மட்டும் ஒரு சதத்துக்கும் உதவார். ஆரும் தூண்டிவிட என்னைப்போட்டு அடிப்பார். ராத்திரியும் தேவையில்லாமல் எனக்கு அடிச்சுப்போட்டு இப்பிடியும் செய்து போட்டார்" என்று, விக்கலும் கக்கலுமாகச் சொல்லி நிறுத்தினாள் சுந்தரி.

"குடி குடியைக் கெடுக்கும்" என்று, மிகப்பெரிய தத்துவம் ஒன்றை நானே கண்டுபிடித்தது போல மெதுவாகச் சொன்னேன் வாய்க்குள்ளாக.

"ஐயையோ, இனிப் பொலிஸ்காரர் என்னை விசாரிக்கப்போயினமே. நான் என்னத்தைச் சொல்லப் போறனோ?" - என் கையைப் பற்றிக் கொண்டு மீண்டும் அழத்தொடங்கிவிட்டாள் சுந்தரி. பொலிஸ் என்று இங்கே இன்னும் யாராவது உலவுகிறார்களா என்ன என என் மனதுள் வியந்து கொண்டே, "பொலீசோ!" என்றேன்.

"ஓமோம், இந்தப் பெரியாஸ்பத்திரியிலை பொலீஸ் இருக்குதெண்டு மச்சாள் சொன்னவ." என் கையை இறுகப் பிடித்துக் கொண்டே நடுநடுங்கினாள் அவள்.

தலைமேல் இடி இடித்து, தடியால் அடி அடித்து, ஏறடா இறங்கடா, ஹான்ட்ஸ் அப் பண்ணடா என்று எத்தனையோ சோதனைகளை எதிர்கொண்டு, பல கோர மரணங்களையும் சகித்துக் கொண்டு இன்னும் 'வாழ்ந்து' கொண்டிருக்கும் நம் மத்தியில், ஒரு உள்ளூர்ப்பொலிஸ்காரரின் விசாரிப்புக்காக அஞ்சும் அவளது அந்த அப்பாவித்தனத்தை மனதுக்குள் ரசித்துக் கொண்டே, "இஞ்சை பாருங்கோ சுந்தரி, நீங்கள் அழுதோ பயந்தோ பிரயோசனம் இல்லை. துணிவாக இருங்கோ. அவையள் உங்களை விசாரிக்க வந்தால், அவர் குடிவெறியிலை என்ன செய்யிறதெண்டு தெரியாமல், தோட்டத்திற்கு அடிக்க வைச்சிருந்த மருந்தை எடுத்துக் குடிச்சிட்டார் எண்டு ஒரே கதையாகச் சொல்லிப் போடுங்கோ" என்று, மிகவும் பொறுப்புடன் ஆலோசனை சொன்னேன் நான்.

"ஓம் அதுதான் சரி. அப்படித்தான் சொல்லவேணும். நாங்கள் தோட்டம் தான் செய்யிறனாங்கள் எண்டு உங்களுக்கு எப்படித் தெரியும்?" மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டாள் சுந்தரி.

"தோட்டம் செய்யிறவையிடம்தான் இந்தத் தமறோன்..."

"ஓம், அதுதான் குடிச்சவர்.... அதுதான்" என்று தலையை ஆட்டி ஆமோதித்தாள் சுந்தரி.

இப்போது என்னை மிகுந்த மரியாதையுடன் பார்த்தபடியே, "உங்களுக்கு எல்லாம் தெரியுது. நீங்கள் எனக்கொரு சகோதரி போலை அவரை வாட்டுக்குக் கொண்டு போன பிறகு அவருக்கும் கொஞ்சம் புத்தி சொல்லுவீங்களே?" என்று கெஞ்சலாய்க் கேட்டாள் சுந்தரி. அவள் என்னைச் சகோதரி போல என்று சொன்னது என் நெஞ்சைத் தொட்டாலும், இப்படிச் சொல்லியே என் காலை வாரிவிட்டுப் போன சில பேரின் பொய்முகங்கள் எனது ஞாபகத்தில் வந்து போயின. இந்தச் சிலநாள் ஆஸ்பத்திரி வாழ்வில் என்காலை வாருவதற்கெல்லாம் இவளுக்கு எங்கே சந்தர்ப்பம் கிடைக்கப்போகிறது என்ற தைரியத்தில், சுந்தரியின் கணவனுக்கு சில அறிவுரைகள் சொல்வது பற்றி ஆலோசித்தேன்.

அப்போது அந்த அவசர சிகிச்சைப் பிரிவு நிலையக் கதவு திறந்தது. அதே தள்ளுவண்டியில் வைத்து சுந்தரியின் கணவன் வெளியே கொண்டுவரப்பட்டான். இப்போது அவனது கண்கள் திறந்து தெளிந்திருந்தான். ஓங்கி அடித்தாலும் ஏங்கி அழச்சீவன் இல்லாதிருந்தான். அவன் முகம் மட்டும், எத்தனையோ நாள் தாடியால் மூடப்பட்டிருந்தது. யாரை நம்பினாலும் இந்தத் தாடி வளர்ப்பவர்களை ஒரு நாளும் நம்பக் கூடாது. எதற்காகவோ பயந்து முகம் மறைக்கும் கோழைகள் என்று நினைக்கிறேன். வண்டியில் படுத்திருந்த சுந்தரியின் கணவன் தலையைத்தூக்கி தன் மனைவியைப் பார்த்தான். அண்ணலும் நோக்க - அவளும் நோக்க, இருவரது பார்வைகளும் சந்தித்துக்கொண்டன. அந்த உணர்ச்சி கரமான சந்திப்பை எழுத்தில் வர்ணிப்பதற்கு சொற்பஞ்சம் எனக்கு இப்போது.

மறுபிறவி எடுத்துவிட்ட தன் கணவனைப் பின் தொடர்ந்த சுந்தரியோடு, நானும் சேர்ந்து நடந்தேன். இவர்களுடன் போயாவது என் அம்மா இருக்கும் 16 B வார்ட்டுக்குள் நுழைந்துவிடும் எண்ணம் என் மனதுள் இருந்ததுதான் முக்கிய காரணம். அதனால்தான் சுந்தரியின் கணவன் வார்ட் கட்டிலுக்கு மாற்றப்படும் நேரம், நீங்கள் இவவுக்கு என்னமுறை என்று தாதி கேட்ட போது, "சகோதரி" என்று கூசாமல் பொய் சொன்னேன். இப்போது என்னைக் குறித்துக் கேள்விக் குறியுடன் தன் மனைவி முகத்தைப்பார்த்தான் அவன்.

"இவதான் எனக்குத் துணையாக இவ்வளவு நேரமும் ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தவ. மச்சாளவை வீட்டுக்குப்போட்டினம்."

நான் தனக்காகவே ஆஸ்பத்திரியில் வந்து நிற்பது போன்ற நம்பிக்கையுடன் என்னை அறிமுகம் செய்தாள் சுந்தரி. அத்தோடு, "இனிமேல் குடிச்சாலும் வெறிச்சாலும் மருந்து மட்டும் குடிக்க மாட்டன் எண்டு, இவவுக்கு முன்னாலை சத்தியம் பண்ணித் தாங்கோ எனக்கு" என்று அழுதாள் அவள்.

நானும் இதுவே தகுந்த தருணம் என்று, "தற்கொலைதான் உங்கட பிரச்சினைகளுக்கு முடிவு எண்டு இனி ஒருநாளும் நீங்கள் நினைக்கக் கூடாது. பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கப்பயந்து ஒரு கோழையாகச் சாவதிலும் பார்க்க, அதையெல்லாம் சரிப்பண்ணி வென்று வீரனாக வாழ்வதுதான் புத்திசாலித்தனம்" என, மரணத்தின் விளிம்பில் நின்று மீண்டிருக்கின்றான் என்ற ஒரு காரணத்துக்காகவே, அந்த யாரோ ஒருவனுக்கு ஏதோ என்னால் ஆனதைச் சொல்லி வைத்தேன். என்ன நினைத்தானோ அவன் கண்களிலும் கண்ணீர் இப்போது. நான் சொன்னதை ஏற்றுக்கொண்டவன் போல மெல்லத் தலையசைத்தான். என் மனம் முழுக்க என் தாயின் நினைவே நிறைந்திருந்ததால் மெல்ல அந்தத் தற்காலிக நண்பர்களை விட்டுக் கழன்று கொண்டேன். குறுக்கு வழியில் என் அம்மா இருக்கும் இடம் நோக்கி நடையைக் கட்டினேன். அப்போது, இந்தத் தற்கொலை முயற்சிக் காரனைக் கண்டு விட்டதால், சில ஆண்டுகளின் முன்னே என் தோழி ஒருத்தியின் வாழ்வில் நடந்து விட்ட சம்பவம் ஒன்று என் நினைவுக்கு வந்தது.

அவள் லக்ஷ்மி. கொஞ்சம் அதிகப் பிரசங்கி தான். ஆனாலும் நல்லவள். அவள் கணவன் வெளியூரில் வேலையாகி இருந்தான். இவள் மட்டும் ஊரில். ஏதோ காரணத்தால் அவள்மீது பொறாமை கொண்ட சில வேண்டாதவர்கள் ஒரு 'கைக்கூலி' யைக் கண்டுபிடித்தனர். அவனுக்கு நிறையப் பணம் கொடுத்து அவனை விலைக்கு வாங்கி, அவன் மூலம் லக்ஷ்மியின் நல்லபெயருக்குக் களங்கம் கற்பிக்க நினைத்தனர். அதன் மூலம் அவள்குடும்பத்தில் பூகம்பம் ஒன்றை வெடிக்க வைப்பது அவர்கள் திட்டமாக இருந்தது. அதன்படி அந்தக் 'கைக்கூலியும்' இடது கையால் கடிதங்கள் எழுதி லக்ஷ்மி தனக்கு அனுப்பியதாக, ஊரெல்லாம் கதை பரப்பிவிட்டான். இவள் என்ன செய்வதென்றறியாமல் திகைத்து நின்றாள். தன் கணவனை உடன் ஊர் வரும்படி அழைத்தாள். அவனும் வந்து சேர்ந்தான்.

"என் மனைவி எழுதுவதில் கை தேர்ந்தவள் தான் எங்கே கடிதங்களைக் காட்டு பார்ப்போம்" என்றான். "அதையெல்லாம் காட்டினால்

பிரச்சினைகள் வரும்" என்று தன் எஜமானர்களின் உத்தரவுப்படி, அவர்களும் கூட இருந்த தைரியத்தில் பக்குவமாகச் சொன்னது அந்த நன்றியுள்ளது. ஊர் முழுக்க வதந்தி பரப்பியது நியாயமாம். அதை நிருபிப்பது மட்டும் சரியானதல்லவாம்! ஊர் உலகத்தை நன்கு படித்து வைத்திருந்த லக்ஷ்மியின் கணவனுக்கு சிரிப்புத்தான் வந்தது.

ஆனால் இவளுக்குத் தான் ஒரு விஷயம் விளங்கவேயில்லை. "ஏன் நான் இடது கையால் கடிதம் எழுதினேன் என்று சொன்னார்கள்?" எனத் தன் கணவனைத் துளைத்தெடுத்தாள்.

" பரப்பி விட்ட வதந்தி மூலம் உம்மைப்பற்றிய ஊராரின் விமர்சனங்களுக்கு அவமானப்பட்டுப் போய்த் தற்கொலை செய்து கொள்ளுவீர் என எதிர்பார்த்தவை." - லக்ஷ்மியின் கணவன் அவளுக்கு விளக்கினான்.

இவளுக்கு விளங்கியது - தான் இல்லாமல் போனபின்னால் இடது கைக் கடிதங்கள் என்று எதைக் காட்டினாலும், தன்னைச் சார்ந்தவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவே வேண்டும் என்பது. உப்புப்பெறாத விஷயத்துக்குப் போய் தான் தற்கொலைதான் செய்துகொள்வேன் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்த்த அந்தக் கயவரின் செயலை நினைத்தால், இன்றும் சிரிப்பாள் லக்ஷ்மி.

நேரம் காலை ஒன்பதைத் தாண்டியிருந்தது. இப்போதுதான் பிரதான வைத்தியரும், அவரது உதவியாளரும், ' வார்ட் ரவுண்ட்' செய்து கொண்டிருந்தனர். அவர்கள் என் தாயருகில் வந்து பரிசோதனை செய்த போது,

" டொக்ரர் எனக்கொரு பாஸ் வேணும், அம்மாவோடை நிற்க" என்று மெதுவாக என் வேண்டுகோளை விடுத்தேன்.

"பாஸ் தேவையில்லை, நீங்கள் தாராளமாக நிற்கலாம்" என மிகப்பெருந்தன்மையுடன் சொல்லிவிட்டு அவ்விடம் விட்டகன்றார் அவர்.

"வெளி ஆக்கள் யாரும் உள்ளுக்கு நிக்கிறீங்களோ?" - மந்தை விரட்டும் நினைப்போடு மீண்டும் அந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்னருகில் வந்தபோது, நான் அசையவேயில்லை! " மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?" என்பது போல, ஒரு பார்வை மட்டும் பார்த்தேன்!

திசை<br>*10.11.1989*

# 4

## விதி வழிப் பயணங்களில்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் பட்டாலும் அவை நடந்தேறுவதெல்லாம் இப் பூவுலகில் தான். கல்யாணிக்குக் கல்யாணம். அதிகாலை நேரம். மென்மையான நாதஸ்வர ஓசை பூபாளமாகி காற்றோடு சங்கமித்துக் கொண்டிருந்தது. திருமணப்பரபரப்பு. வீட்டில் ஒரே அமர்க்களம் தான்.

தன் கைவிரல் நகங்களை ஆராய்ந்து கொண்டி ருந்தாள் கல்யாணி. தனது வாழ்நாளிலேயே முதன் முதலாக இன்றுதான் "கியூடெக்ஸ்" பூசியிருக்கிறாள். கொஞ்சம் வேதனையாய் கொஞ்சம் வேடிக்கையாய் விசித்திரமானதோர் உணர்வுக்காளாகியிருந்தாள் அவள்.

மனித உணர்வுகளே விசித்திரமானவை தான். அவை எப்போது எப்படியெல்லாம் மாற்றமடையும் என்பதை யாராலும் அறுதியிட்டுச் சொல்லமுடிவதில்லை. படிக்க வேண்டும் எதையெல்லாமோ சாதிக்க வேண்டும் எனக் கனவு கண்டு கொண்டிருந்தவள் இன்று கல்யாணத்துக்குத் தயாராகி நிற்கிறாள். இல்லையில்லை தயாராக்கப்பட்டிருக்கிறாள்.

ஒரு பெண்ணால் தனித்து வாழ்தல் முடியாததாம். உலகில் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் பெண் பெண்தானாம். அதனால் திருமணமே பெண்ணுக்கு நற்கவசமானது என்றார் அப்பா, "சரி! அப்படியே ஆகட்டும். ஊரில் உறவில் முன்பின் தெரிந்த

ஒருவனைத் திருமணம் செய்யக் கூடாதோ?" என்ற கல்யாணியைப் பெற்றவளின் ஆதங்கம் அப்பாவுக்குப் பெரும் நகைச்சுவையாகிப்போனது.

" ஊரில் நல்ல மாப்பிள்ளையைக் காண்பது எங்கே?" எனக் கேட்டார் அவர், அவர்கள் எங்கு தான் போய்த் தொலைந்துபோனார்களோ...

அப்பாவோடு கூடப்பிறந்தவள் கல்யாணியின் அத்தை. தன் மகனுக்கென இவளைப் பெண் கேட்டு வந்தாள். அதற்கப்போது விஞ்ஞான விளக்கம் கொடுத்திருந்தார் அப்பா.... உறவுக்குள் திருமணம் என்றால் குறைபாடுள்ள சந்ததி உருவாகுமாம்... ராஜன் அத்தான் நல்லவன். விஞ்ஞானக் கண்டு பிடிப்புக் காரணமாய் அவனை இழந்து போனாள். கல்யாணி.

புறோக்கர் ஓர் உள்ளூர் மாப்பிள்ளையோடு வந்தார். அப்பா யோசித்தார்.... தன்னுடையது உடையார் பரம்பரையாம். அம்மாவுடையது முதலியார் பரம்பரையாம்... அந்த மாப்பிள்ளை சரிப்பட்டு வராதென்றார்.

" சாதிகள் இல்லையடி பாப்பா... குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்... யார் பாவம்? பாரதியார் தான் பாவம்!

அப்பாவின் அயராத முயற்சியினால் கல்யாணிக்கு ஒரு லண்டன் மாப்பிள்ளை கிடைத்து விட்டார். அவர் யாரென்று யாருக்கும் தெரியாதே தவிர உள்ளூரில் உயர் பரம்பரை தானாம்.... அப்பா பெருமைப்பட்டுக் கொண்டார்.

வெளிநாட்டு மாப்பிள்ளை பற்றி அப்பா பிரஸ்தாபித்த போதே கல்யாணிக்கு " எயிட்ஸ்" ஞாபகம் தான் முதலில் வந்தது. அத்தைக்கு விஞ்ஞான விளக்கம் கொடுக்கத் தெரிந்தவருக்கு, மேற்குலக நாடுகளின் சாபக் கேட்டைப் பற்றிய "மெய்" ஞானம் மட்டும் புரியாமல் போனது ஏன்?

" ஆங்கிலம் சரியாகப் பேசத் தெரியாமல் அங்கு போய் என்ன செய்வது?" அப்பாவிடம் வேறுவிதமாக சுற்றி வளைத்து தன் ஆட்சேபத்தினைத் தெரிவித்தாள் அவள்.

"இங்கிலீஸ் பேசத் தெரிந்தவர் தான் வெளிநாடு போக முடியுமானால் ... நம்மூரில் இருந்து யாராலுமே அங்கே போக முடியாதிருந்திருக்கும்" என்று அட்டகாசமாய்ச் சொல்லிச் சிரித்தார் அப்பா.

" முன்பின் தெரியாத ஒருவரை நம்பி நடப்பது எப்படி?" எனக் கேட்டாள் அவள். அவர் அதற்கு திருமணத்தின் புனிதத்தன்மையையும் முன்பின் தெரியாத இருவரை அது எந்த வகையில் பக்குவப்படுத்தி வாழ வைக்கிறது என்பதையும் இவளுக்கு விலாவாரியாக விளங்கப்படுத்தினார்.

"திருமணத்தின் புனிதத்தன்மை பற்றி அந்த லண்டன் மாப்பிள்ளைக்கும் புரிந்துணர்வு இருக்க வேண்டுமே..." என்று நினைத்தாள் கல்யாணி.

உங்களையெல்லாம் பிரிந்து போக என்னால் முடியவே முடியாது அப்பா" என்றாள் முடிவாக. "அதற்கவர் எத்தனை காலம் தான் இன்னும் துன்பப்பட்டுக்கொண்டே இருப்பது.... உனது நல்வாழ்வுக்காகவே இத்தனை ஏற்பாடுகளும்...." என்று இவள் வேறு எதையும் பேச முடியாமல் தன் பேச்சை முடித்துக் கொண்டார்.

" ஊரில் மரம் சீவும் மாணிக்கன் கூட கப்பலுக்குப் பதிந்து விட்டுக் காத்திருக்கிறானாம்.... குடும்பத்தையே கொழும்பில் வந்திருக்கும் படி சுவிஸிலிருந்து மகனின் கடிதம் வந்திருக்கிறதாம்.... அப்படியானால் இங்கினிமேல் மனிதர்களே வாழ மாட்டார்களோ...." என எண்ணி ஏக்கப் பெருமூச்செறிந்தாள் கல்யாணி.

யாராவது கோழியின் அனுமதி பெற்றுத்தான் அதைக் குழம்பு வைக்கிறார்களா என்ன?

கல்யாணியின் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. குறித்த நாளும் வந்து விட்டது. முகூர்த்த நேரமும் நெருங்கி விட்டது. கல்யாணி தயாராகி விட்டாள். ரோஜா வண்ணக் காஞ்சிப்பட்டில் ஒரு ரோஜாவாகவே மலர்ந்திருந்தாள் அந்த ரோஜா வண்ணமகள்.

வாசலில் மாப்பிள்ளை வந்திறங்கிய போது தன்னறையின் யன்னல் வழியாய் அவரைப் பார்த்தாள். அழகன் தான். ராஜநடைநடந்து பந்தலுக்குள் வந்துகொண்டிருந்தான். நாதஸ்வரக்காரருக்கு குஷி பிறந்து விட்டது.

"ஆனந்தம் ஆனந்தம் பாடும் மனம் ஆசையின் ஊஞ்சலில் ஆடும்..." உன்னிகிருஷ்ணனை மனதில் வைத்துக் கொண்டு உன்னி, உன்னி வாசித்தார்.

முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சிக்கு வராவிட்டாலும், கெட்டி மேளம் முழங்க, வேத மந்திரம் ஒலிக்க சபையோர் சாட்சியாகவும் அக்கினி சாட்சியாகவும் கல்யாணியின் கழுத்தில் மங்கலத் தாலி பூட்டினான் விஜயன். அம்மியில் எடுத்து வைத்த அவளின் தாமரை மொட்டுப் பாதம் தொட்டு மிஞ்சி அணிவித்தான். அவள் தலையில் பூச்சூடி, நெற்றியில் பொட்டு மிட்டான்.

அந்தப் பட்டப்பகல் வேளையில் ஐயரும் தன்பங்குக்கு வானத்தில் அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டினார் அவளுக்கு...

அடுத்த கட்டமாக திருமணப்பதிவு. பதிவாளர் தயார் நிலையில் இருந்தார். கல்யாணியின் அருகே விஜயன் இருக்கை கொள்ளாமல்

தவித்தான். அவனுக்கு வியர்த்தது. யாரிடமோ தண்ணீர் வாங்கிக் குடித்தான். கைக்குட்டையை எடுத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டே "கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்..." என்று கல்யாணியின் காதில் மெல்லச் சொன்னான்.

அப்பாவிடம் கேட்டுக் கொண்டு சுவாமி அறைக்குள் அவனை அழைத்துச் சென்றாள் அவள். அங்கு போனதும் கல்யாணியை அளவெடுப்பவன் போல் உற்றுப் பார்த்தான் அவன்.

" என்ன சொல்வானோ ...? எதைச்சொல்வானோ ...?" பயத்தில் நெஞ்சு படபடக்க நாணத்தில் முகம் சிவக்க தலை குனிந்தாள் கல்யாணி " எதையோ பேச வேணும் எண்டு சொன்னீங்கள்..."

குனிந்த தலை நிமிரவில்லை. அவள் குரலே அவளுக்குக் கேட்கவுமில்லை.....

" யா, உம்மடை வாழ்க்கையிலேயே இப்ப நடக்கப்போறது தான் மிகவும் முக்கியமான காரியம்..." எதற்காகவோ அவளைத் தயார் பண்ண நினைப்பவன் போல் நிதானமாகச் சொல்லி நிறுத்தினான் அவன்.

" எது முக்கிய காரியம்" என்பவள் போல் தலை நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள் கல்யாணி.

" கையெழுத்துப் போட முன்னம் நல்லா யோசிச்சுப்போடும்..." தொடர்ந்து சொன்னான்.

" ஏன் யோசிக்க வேணும்?"

" பின்னாலை கஷ்டப்படப் போறது நீர் தான்!"

" ஏன் கஷ்டப்பட வேணும்?"

" திருமணம் மூலம் என் சுதந்திரத்தை இழக்க நான் விரும்பவில்லை."

" விருப்பமில்லாமல் ஏன் வந்தனீங்கள்?"

" அப்பா, அம்மாவின் விருப்பத்துக்காக!"

" விருப்பமில்லாமல் ஏன் தாலி கட்டினனீங்கள்?"

" கட்டினத்துக்காக?"

" இப்ப நான் உங்கடை மனைவி"

"இல்லை. இன்னும் சட்டப்படி இல்லை"

" எந்தச் சட்டப்படி?"

" ....."

“ எங்கடை இந்து சமயச் சட்டப்படியோ? உங்கடை இங்கிலாந்துச் சட்டப்படியோ?”

கல்யாணி நெருப்பாக மாறினாள்.

அவன் தன் வாழ்நாளிலேயே முதன் முதலாக ஒரு சுத்தமான தமிழ்ப்பெண்ணின் சத்திய ஆவேசத்தை தரிசித்தான்.

ஆரவாரங்கள் அடங்கிப்போய் விட்டிருந்தன. தனியறையில் கல்யாணியும், விஜயனும். அடியுண்ட சிங்கம் போல அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தான் விஜயன். கல்யாணி தன் திருமண அலங்காரங்களைக் கலைத்துக் கொண்டிருந்தாள்.

“ லண்டனிலை அப்பா, அம்மாவோடைதான் உம்மைக் கொண்டு போய் விடப்போறன்...” மீண்டும் முருங்கை மரத்து வேதாளமாய் அவன்.

அவள் தன் காரியத்தில் மட்டும் கவனமாயிருந்தாள்.

“ அவைதான் தமிழ்ப்பொம்பிளை தான் தங்களுக்கு மருமகளாக வரவேண்டும் என்று விரும்பினவை”

“ நான் உங்களைத் தான் கல்யாணம் கட்டியிருக்கிறன்!”

“ கட்டினது சரிதான். கொஞ்சநாளிலேயே இங்கை திரும்பி ஓடி வருவீர்...”

“ஒரு நாளும் வர மாட்டன்”

“ என்ன நம்பிக்கையிலை சொல்லுவீர்”

“ இராமன் இருக்குமிடம் தான் சீதைக்கு அயோத்தி!”

“ அது அயோத்தி இல்லை லண்டன்...”

“ அங்கை இருந்து கொண்டு தான் என்ரை உரிமைக்காகப் போராடுவேன்.”

“ நல்லது பேச்சும் அழகாகத்தான் இருக்கு... தமிழ் மட்டும் தான் தெரியுமோ...”

“ தமிழ்ப்பண்பாடும் தெரியும்!”

“ அதென்ன பெரிய பண்பாடு?”

“ ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர் பண்பாடு?”

விஜயன் முகம் கறுத்தான். பார்த்தால் பாவம் போல இருந்தாளே.... எதற்கும் பின்னால் உதவும் என்றுதான் முன்னாலையே கொஞ்சமாய்

ஆட்டம் காட்ட நினைத்திருந்தான். இப்படியென்று தெரிந்திருந்தால் இன்னும் சில நாள் கழிந்த பின்னால் ஆட்டி அடக்கி இருக்கலாம். தன்னுடைய பெண் சினேகிதிகளை மனதுக்குள் கணக்கெடுத்துப் பார்த்தான். தாலி கட்டாமலேயே தன்னோடு வாழ்ந்து கொண்டிருக்கும் எலிஸா.... அவ்வப்போது சுற்றுவதற்கு ஜெயந்தி. கூடவே வேலை பார்க்கும் மரியா... வீட்டின் வேலைக்காரப்பெண்.... கல்யாணியின் அழகுக்காக அத்தனை பெண்களுக்கும் "குட்பை" சொல்லி விடலாம் தான். ஆனால் எலிஸா ... நான் விலகச் சம்மதிக்கமாட்டாளே .... அதில் ஒரு சிக்கலும் உண்டே ... விஜயன் யோசித்தான்.

நடந்து கொண்டிருப்பது என்ன ? இத்தனை வாக்கு வாதங்கள் எதற்காக? கல்யாணிக்கு பிரமிப்பாக இருந்தது. இப்போதே அப்பாவைக் கூப்பிட்டுச் சொன்னால் என்ன... சொல்லலாம் தான்... அவர் அதற்கும் ஒரு விளக்கம் சொல்வாரே ... கல்யாணியும் யோசித்தாள்.

நெருப்பாற்றினுள் வீழ்ந்த பின்னாலும், நீந்திக் கரைசேர தன் வாழ்வனுபவங்கள் தனக்குக் கை கொடுக்கும் என்றவள் நம்பினாள். தன் பிரச்சினையைத்தானே அறிவு பூர்வமாய் கையாள நினைத்தாள். அதனால்" உங்களுக்கு என்ன பிரச்சினை என்பதை என்னிடம் சொல்லுவீங்களோ...." என விஜயனைப் பார்த்துக் கேட்டாள்.

அவன் பிரச்சினை எதுவுமே தனக்கில்லை என்பதைப் போல தலையசைத்தான். அத்தோடு" நேரமாகிறது...." என்றான்; அழகானதோர் குறுஞ் சிரிப்புடன். அவனது அந்தச் சிரிப்பு ஒன்றே போதும் பெண்கள் அவன் காலடியில் வந்து விழுவதற்கு. அனுபவத்தில் அவன் கண்ட உண்மையது.

அவனது புதிய முகம் கண்ட கல்யாணி விழித்துக் கொண்டாள்.

" நான் எழுபத்தியேழில் பிறந்தேன். எண்பத்து மூன்றில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து குடியேறிய குடும்பம் எங்களுடையது. இன்று தொண்ணூற்றியேழிலும் என் பிரச்சினைகள் தொடர்கின்றன. நான் பிரச்சினைகளில் இருந்தும் விலகி நிம்மதியாக வாழவேணும் என விரும்பித்தான் அப்பா..."

விஜயன் கொட்டாவி விட்டான்!

" என்னால் உங்களுக்கு என்ன பிரச்சினை? நீங்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்ளக் காரணம் என்ன? சொல்லுங்கோ..." என்றாள் கல்யாணி.

"பேசுவதற்கு இதுவல்ல நேரம்...." என்றான் விஜயன்.

கல்யாணம் எழுதப்போற நேரம் தான் பேசுவதற்குரிய நேரமோ?" அவளது கோபம் அவனைத் தடுமாற வைத்தது.

யாழ்ப்பாணத் தமிழ்ப்பெண்கள் மிகவும் அப்பாவிகள் என்றும், அடக்கமானவர்கள் என்றும்தான் அங்கே எல்லோரும் பேசிக்கொள்வார்கள். அதனால் தானே போனால் போகிறது என்று இந்தத் திருமணத்துக்கும் சம்மதித்திருந்தான். ஆனால் இவளிடம் தன்னால் எதையுமே எப்போதுமே மறைக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது.

அதனால் எலிஸா பற்றி சொன்னான். அவளுடன் தான் சேர்ந்து வாழ்வது பற்றியும் சொன்னான். அதையெல்லாம் இவளும் ஏற்றுக் கொண்டு விட்டால் எந்தப் பிரச்சினையும் தனக்கிருக்கப் போவதில்லை என்றான்.

கல்யாணி நெஞ்சுடைந்து போனாள். இந்த இருபதாண்டுக் காலத்தில் இல்லாத வேதனை இப்போது அவள் முகத்தில் இருந்தது. யாராவது அடுப்பிலிருந்து நெருப்புக்குள் குதிக்க விரும்புவார்களா....? நானாக விரும்பினேனா...? அவளது நெஞ்சாழத்திலிருந்தும் நீண்டதொரு துன்பப்பெருமூச்சு....

"உங்கடை வாழ்க்கை முறைகளும் எங்கடை வாழ்க்கை நெறிகளும் வேறு வேறானவை. நீங்கள் எலிஸாவுடன் வாழ்வதை விரும்புறீங்களோ? அல்லது என்னோடு வாழ்வதை விரும்புவீங்களோ?" அவன் முகம் பார்க்கவும் விரும்பாதவளாய் வேறெங்கோ பார்த்துக் கேட்டாள் கல்யாணி.

அதற்குப் பதில் சொல்ல அவன் விரும்பவில்லை. அதனால் அங்கே நீண்டதோர் மௌனம் குடி கொண்டது.

"நடந்ததெல்லாம் எங்களுக்குள்ளேயே இருக்கட்டும். என்னோடு மட்டும் வாழ்வதற்கு எப்போது நீங்கள் தயாராகிறீர்களோ.... அப்போதுதான் நானும் அதற்குத் தயாராவேன். ஆனால்...... ஆனால்..... அதற்கு முதல் நீங்கள் உங்களுக்க எயிட்ஸ்..... எயிட்ஸ் நோய் இல்லை என்பதை எனக்கு நிரூபிக்க வேணும்!"

கல்யாணி தன் மௌனம் கலைத்தாள்.

விஜயன் ஊமையாகிப் போனான்!

வீரகேசரி

*01. 06. 1997*

# 5

## மூன்றாவது அதிசயம்

தொண்ணூற்றி ஐந்தின் சரித்திரப் பதிவுக்கான அந்த இடப்பெயர்வினை முடித்துக் கொண்டு நான் பிறந்த மண்ணுக்குத் திரும்பியிருந்தேன். போட்டது போட்டபடி வீட்டைக் கைவிட்டுப் போய் ஆறு மாத காலமாகிப் போயிருந்தது. பண்டுகள், சோதனைச் சாவடிகள்தாண்டி வந்து கொண்டிருந்த போதெல்லாம் என் மனதைக் குடைந்து கொண்டிருந்த கேள்விக்கும் விடை கிடைத்து விட்டது. வீடு இருக்கிறது. பாதை வழியெல்லாம் பார்த்துக்கொண்டு வந்ததைப் போல என் வீடும் தூள்தூளாகி நிலத்தில் கொட்டுண்டு கிடக்கவில்லை.

கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டு, எனக்காகவும் என் குடும்பத்தவர்களுக்காகவும் காத்துக் கொண்டு, எமது வரவினை எதிர்பார்த்துக் கொண்டு, எனது வீடு நிற்பதாகக் கற்பனை செய்து கொண்டு, அதனை மிக வாஞ்சையுடன் பார்த்தேன் நான். அஃறிணைப் பொருளானாலும் மனித வாழ்வில் அந்த வீடென்பது எப்படி ஒரு உயிருள்ள உறவாகப் பின்னிப் பிணைந்து போயுள்ளது?

கூடு பிரிந்த குருவிகளாய், இதை விட்டுப் பிரிவதென்றால்.... ஏன் பிரிந்தோம்?

பல்வேறு ஊகங்களும், வதந்திகளும் பரவிக் கொண்டிருந்த நேரம்.... என்ன நடக்கப் போகிறதோ என எல்லோரும் கலங்கிப் போயிருந்த நேரம்....

எதுவும் நடக்கலாம் என்று ஆண்டாண்டு காலமாய் நடந்து வந்து கொண்டிருந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்து இடித்துரைத்துக் கொண்டிருந்த நேரம்....

பட்ட துயர் போதுமென்றுதானோ அனைவரும் ஒட்டு மொத்தமாய் தெருவில் இறங்கி விட்டனர். பட மாட்டோம் இனியென்று தானோ ஒரு முகமாய் நடக்கத் தொடங்கி விட்டனர். போக வேண்டியது தான். நானும் முடிவெடுத்து விட்டேன். ஆனால்... எங்கே போவது?

சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக்குள் தானே என் உறவுகள் எல்லாம். சின்னதொரு வட்டத்தினுள் சித்திரமாய்க் குடியிருந்து தான் பழக்கம். தென்மராட்சியிலோ அல்லது வடமராட்சியிலோ அறிந்தவர், தெரிந்தவர் என்று யாருமில்லை எனக்கு. ஆயினும் போகத்தான் வேண்டும். நானும் புறப்பட்டு விட்டேன். கூடவே என் மனைவியும், இரண்டு பிள்ளைகளும்....

"அப்பா நாங்கள் எங்கே போகிறோம்?" பிள்ளைகள் கேட்கிறார்கள் எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

நாளும் வணங்கும் நல்லூர்க் கந்தசாமியாரை கடைசியாக ஒரு தடவை வணங்கிவிட்டு பயணத்தைத் தொடக்கி வைத்தேன். அரியாலைத் தெருவில் காலடி எடுத்து வைத்தாகி விட்டது. நேரம் இரவு பத்து மணி. ஐப்பசி மாதத்து மழை இப்போது இளந்தூறல் போட்டுக் கொண்டிருந்தது. அரியாலைத் தெருவில் நகர்ந்து கொண்டிருந்த சனசமுத்திரத்தை அந்த மழைத்தூறல் ஒன்றும் செய்து விடவில்லை. என் மனைவியைப் பிள்ளைகளைப் பெயர் சொல்லி அழைத்துக் கொண்டே நானும் அந்தச் சனசமுத்திரத்துள் சங்கமமாகி விட்டேன். அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன்.

பரவாயில்லை. ஸ்ரீ ராமனின் அடியொற்றி நடந்த சீதையாக என் பத்தினியாள் என்னைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். அவள் கைப்பிடியில் பிள்ளைகள். எங்கெல்லாமோ அடிக்கடி "ஷெல்" விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் சத்தம் கேட்கிறது. வெடிக்கட்டும்! நன்றாக வெடிக்கட்டும்.

எல்லாமே முடிந்து விட்டது. இனியென்ன பயமும் கவலையும்?

உடலெங்கும் வியர்வை கசகசக்கிறது. தெருவெங்கும் அழுகையின் ஓலங்கள். தாயைத் தொலைத்த குழந்தைகள்...குழந்தையைத் தொலைத்த தாய்க்குலத்தினர்... சுற்றத்தைத் தவறவிட்ட உறவுகள்... எல்லாம் குழம்பிப் போய் விட்டன. என் காலில் ஏதோ இடறுகின்றது. இருளிலும் குனிந்து பார்த்தேன். ஒரு சூட்கேஸ் தான் அது. அடுத்தடுத்து இடறல்கள் தான்! உடைமைகளைச் சுமையாகக் கருதி வேண்டு மென்றே தவற விடுகிறார்களா? இல்லை உண்மையாகவே தவறவிடுகிறார்களா? இப்படிக் கனவில் கூட நான் ஒரு காட்சியும் கண்டதில்லையே...

அரியாலைத் தெருவின் பக்க ஒழுங்கைகளில் இருந்தெல்லாம் மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்து வந்து தெரு வெள்ளத்தோடு கலந்து கொண்டிருக்கிறது. ஊரில் இருந்த கார், லொறி, மினிபஸ், வண்டில், வான் என்று அத்தனை வாகனங்களும் கூடவே வந்து கொண்டிருக்கின்றன. அனைத்துமே போட்டி போட்டுக் கொண்டு முன்னேறும் முயற்சியில், அப்பப்பா எனக்கு மூச்சு முட்டத் தொடங்கி விட்டது. இதுதான் யுகப்பிரளயம் என்பதோ?

நல்ல மூச்சினைப் பெறுவதற்காக வானத்தை அண்ணாந்து பார்த்தேன் நான். "கிருஷ்ணா.... நீ பத்தாவது அவதாரம் எடுத்து விட்டாயா? இந்தப் பூலோகத்தையே அழித்து முடித்து விடப்போகிறாயா?" கண்களை மூடித் தியானம் செய்தேன். கீதை உரைத்த கண்ணனுடன் பேச நினைத்தேன் சீச்சி... என். டி. ராமராவ் தான் என் கண்களுக்குள் வந்தார்.

இதுவரையும் யாழ்ப்பாணத் தெருக்களில் ஹாயாக ஓடித்திரிந்த சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் உருட்டிச் செல்வதற்கே முடியாமல் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக் கொண்டிருந்தன. ஒருவரின் சைக்கிள் அடுத்தவரின் சைக்கிளை நகர விடாமல் இழுத்துப்பிடித்தது.

" நடவுங்கோ.... நடவுங்கோ.... விடியமுன்னம் அந்தப் பக்கம் போய்ச் சேர்ந்திட வேணும்" அடிக்கடி இப்படி ஒரு குரல் கேட்டுக் கொண்டிருந்தது. "விடிஞ்சபிறகும் இப்படியே நிண்டால் புக்காராவாலை தான் கொண்டு வந்து கொட்டப் போறாங்கள்" இப்படியும் ஒரு குரல் மிரட்டிக் கொண்டிருந்தது. அனைவரும் விரைவாக நடக்கத்தான் முயற்சித்துக் கொண்டிருந்தனர். ஆயினும் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணிநேரம் கூடக் காத்திருக்க வேண்டி இருக்கும் போது..... அப்படிப் "பாவனை" தான் செய்ய முடிந்ததே தவிர உண்மையாகவே யாராலும் நடப்பதற்கு முடியவில்லை.

இப்போது வருண பகவானும் தனது கருணையைக் காட்டத் தொடங்கி விட்டார்! மழை பொழிந்து கொட்டிக் கொண்டிருந்தது.

வீட்டினை விட்டு வெளியேறிய அவசரத்தில் குடையைக் கண்டது யார்? அதை எடுத்தவர்தான் யார்? நனைந்தோம்! போயும் போயும் மழைதானே நனைந்தோம்.

விடியத் தொடங்கியது. இப்போதும் அரியாலைத் தெருவில்தான் நடந்து கொண்டிருக்கிறோம்.இரவு பத்து மணியிலிருந்து .... விடியும் வரை மெதுநடைக்கான சாதனையாக இதையும் "கின்னஸ்" புத்தகத்தில் பதியலாம் தான். ஆனால் ... எத்தனை பெயர்கள்... விடிந்ததும் ஒருவர் முகம் இன்னொருவருக்குத் தெரியத் தொடங்கி விட்டது. யாரையுமே யாருக்கும் தெரியாதென்பது போல் அனைவரின் முகங்களிலும் ஒரு வெற்றுப் பார்வை....

எல்லாமே முடிந்து விட்டது! இனியென்ன உறவும்? நட்பும்?

இப்போது வயல் வெளிகள் வந்து விட்டன. அரியாலைக்கும் நாவற்குழிக்கும் இடைப்பட்ட பகுதி இது. என் மனைவியைப் பார்த்தேன். அவளுக்கு கண்களால் ஒரு சிக்னல் கொடுத்து விட்டு, நானும் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வயலுக்குள் இறங்கி விட்டேன். மழை தான்....வயலில் வெள்ளம் தான்.... உயிரும் உடலும் ஒய்வுக்காய் கெஞ்சுகிறதே! சைக்கிளை வயல் வரம்பொன்றில் கிடத்திவிட்டு "ஏதாவது கொண்டு வந்தாயா?" அவளிடம் கேட்டேன்.

அவள் எதையோ என்னிடம் தூக்கித் தந்தாள். காசும், நகையுமாம்! இப்போது இது யாருக்க வேண்டும்? அதை மறுத்து விட்டு, "தின்பதற்கு குடிப்பதற்கு" என்றேன் மிகச் சுருக்கமாய், விரிவாகப் பேசுவதற்குக் குரல் எழும்பினால் தானே, ஒரு பிஸ்கட் பெட்டியையும்,, தண்ணீர்ப் போத்தல் ஒன்றையும் தன் தோளில் தொங்கிய பையில் இருந்து எடுத்தாள் அவள்.

பசியாறும் நேரத்தில் எதிர்ப்பக்கம் பார்த்தேன். நல்லூர் - செம்மணி வீதியில் தெரிவதென்ன? அரியாலை வீதிக்காட்சிதான் அங்கேயும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

வானத்தில் எங்கள் தலைக்கு மேல் "புக்காரா" ஒன்று வட்டம் போடத் தொடங்கி விட்டது. இரவில் யாரோ ஒரு தீர்க்கதரிசி சொன்னாரே... சரிதான்... எல்லோருக்கும் இதில் தான் சமாதியாக்கும். நடந்து கொண்டிருப்பவர்களைப் பார்த்தேன். யார் முகத்திலும் சலனம் இல்லை. அனைவரும் மிக அமைதியாக... ஞானியார் போல்.... யோகியர் போல்...

நடந்து கொண்டு தானிருந்தனர்! போடட்டும் .... குண்டு போடட்டும்... எங்கள் தலைக்கு மேலேயே போடட்டும்.

எல்லாமே முடிந்து விட்டன. இனியென்ன உயிரும் மண்ணும்?

சரிந்து விட்ட சைக்கிளை மூட்டை முடிச்சுகளுடன் சேர்த்து கவனமாக நிமிர்த்திக் கொண்டேன். மீண்டும் தெருவில் ஏறி நடக்கும் முயற்சியில் நானும் என் குடும்பத்தவரும்... இப்போது சுள்ளென்று சூரியன் சுடத் தொடங்கி விட்டான். எரிக்கும் வெய்யிலில் நெரிக்கும் வாகன நெரிசலில் பொறுமையாக நடந்து கொண்டிருந்தது மக்கள் கூட்டம்.

இருந்தாற்போல் சூரியன் மறைய, பெருமழை கொட்டத் தொடங்கியது. இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க. ஒவ்வொரு அடியாக காலெடுத்து வைத்த நிலை கூட இப்போதில்லை. எங்கோ லொறி ஒன்று குடை சாய்ந்து போனதாம். அதனால் வீதிப் போக்கில் தடையாம். யாரும் நடக்கவில்லை. சிலையாக நின்றார்கள்..... நின்றார்கள்..... நின்று நின்று என் கால்கள் மரத்துப் போயின.

நேரம் மதியம் பன்னிரண்டைத் தாண்டி விட்டது. என் மனையாளை ஒரு தரம் திரும்பிப் பார்த்தேன். பார்த்த பின் சைக்கிளை மீண்டும் வயல் வெளிக்குள் இறக்கினேன். கூடவே அவளும் பிள்ளைகளுடன் இறங்கிவிட்டாள். பரவாயில்லை. இனி இவளுடன் பார்வையாலேயே பேசிக் கொள்ளலாம் ! ஓடிய வெள்ளத்தினுள் கொஞ்சமாய்த் தெரிந்த வயல் வரம்பில் நால்வரும் இருந்து விட்டோம்.

எரிக்கும் வெய்யில் திடீர் மழை, இரண்டும் சேர்ந்து பிள்ளைகளின் பிஞ்சுடல்களில் தீக்கொப்புளங்கள் போன்ற நீர்க் கொப்புளங்களை உண்டாக்கியிருந்தன. கண்களிரண்டில் பொங்கி வந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முயற்சித்தேன். நான் ஆண்பிள்ளை. அழக்கூடாது தான். அதற்காக அதைத் தவிர வேறு எதைத்தான் இப்போது என்னால் செய்து விட முடியும்? எனது நிலை எனக்கே என் மீது பச்சாத்தாபத்தினை வருவித்தது.

உணர்வுச் சூழலுள் சிக்கித் தவித்த என்னைப் பீதியுடன் பார்த்தாள் என்னவள். முதுகின் பின்னால் ஊன்றியிருந்த என் கைகளையும் என்னையும் மாறிமாறிப் பார்த்தாள்.... அவளுக்கு என்ன நடந்தது? ஒன்றும் புரியவில்லை. “ பாம்பு .... பாம்பு” உங்கடை இரண்டு கையிலையும் ஏறி இறங்கிப் போகுது.... அது ஏறி இறங்கிப் போகும் வரை காத்திருந்து கத்தினாள். முதலே சத்தம் போட்டிருந்தால் அது என்னைக் கடித்து விட்டிருக்குமாம்.... ஓ... இதற்குத் தானா அப்படிப் பார்த்தாள்.

நானும் திரும்பி அதைப் பார்த்தேன். மூன்றடி நீளமிருக்கும். போயும் போயும் பாம்பு தானே.

எல்லாமேமுடிந்துவிட்டன. இனியென்னபயமும்மண்ணாங்கட்டியும்?

மாலை நேரமாகிக் கொண்டிருந்தது. மீண்டும் மனிதவெள்ளம் அதன் அசைவினைத் தொடங்கியிருந்தது. பாதையைச் சீர் செய்து விட்டனராம் நானும் என்னவர்களும் தெருவேறி நடக்கத்தொடங்கினோம் நாவற்குழிப்பாலம் தெரிந்தது. பாலத்தடியில் சிலர் நின்று ஒழுங்கற்று நடந்து கொண்டிருந்த மனிதர்களை ஒழுங்கு படுத்தி அனுப்பிக் கொண்டிருந்தனர். அதனால் நாவற்குழியினைவிரைவாகவே நடந்தடைய முடிந்தது.

தெருவில் நடக்கக்கிடைத்ததே என்று கொஞ்சம் சுதந்திரமாய் ஆனந்த நடை போட்டேன் நான்... போட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தால், அவளையும் காணோம்.... என் பிள்ளைகளையும் காணோம்! பதற்றம் என்னைப் பற்றிக் கொண்டது. லேசாக இருளும் கவியத் தொடங்கி விட்டது. எங்கே இவர்கள்? என்னைக் காணாமல் தவித்துப் போவார்களே! எங்கே தவற விட்டேன்?

என்னைப் போலவே ஆனந்த நடைபோட்டு என்னை முந்தியிருக்கலாம், அல்லது வேறு காரணத்தினால் பிந்தியுமிருக்கலாம். முந்தியிருந்தால் நானில்லாமல் அதிக தூரம் போக மாட்டார்கள். பிந்தியிருந்தால் வந்து சேர்வார்கள். நம்பிக்கையுடன் பாதையோரம் அவர்களுக்காய் காத்து நின்றேன். நடைபயணிகள் நடந்து நடந்து போவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

“அண்ணை எங்கையண்ணை போகப் போகிறீங்கள்?” எங்கள் ஊர் மணியண்ணையை, அவசரமாய் நடந்து கொண்டிருந்தவரை வழிமறித்துக் கேட்டேன். “எங்கையடா தம்பி போறது? எனக்கு ஆரைத் தெரியும்? போகவேணும் எண்டது தெரியுது?..... எங்கை போறதெண்டு தெரியேல்லையே....” நிற்க நேரமில்லாதவர் போல நடந்து நடந்தே சொல்லிக் கொண்டு போனார் அவர். அவர் கையில் ஒரே ஒரு சூட்கேஸ் மட்டுமே இருந்தது. ஊரில் கப்பல் போன்ற வீடு அவருடையது. கார் அல்சேஷன் நாய் எல்லாம் எங்கே? பிள்ளைகள் எல்லோரும் கனடாவில். இவர் மனைவியும் அங்கே போன பின்னாலும் வீட்டைக் காப்பதற்காகத் தான் மட்டும் ஊரில் இருந்தவர்..... பாவம் மணியண்ணை!

அதோ வருகிறார்கள் என்னை முந்திக் கொண்டு போய்விட்ட என் கண்மணிகள். என் நம்பிக்கை வீண்போகவில்லை. கிட்ட வந்ததும்

நளனைக் கண்டு விட்ட தமயந்தி போல மிக உணர்ச்சிகரமாய் ஒரு காவியப் பார்வை பார்த்தாள் அவள்.

நாவற்குழிச் சந்திக்கு வந்து விட்டோம். இனி எங்கே போவது? நான் யோசித்தேன்! நாவற்குழியில் ஹர்த்தால் போலும். கடைகள் எல்லாம் பூட்டிக் கிடந்தன. ஒரு தேனீர்க் கடையாவது திறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். யாரோ ஒரு புண்ணியவான் தன் வீட்டு வாசலில் வைத்து ஊற்றிய பச்சைத் தண்ணீரைக் குடித்து விட்டு நடையைத் தொடர்ந்தோம்.

கைதடி சித்த ஆயுள் வேத வைத்தியசாலைக்கு வந்து விட்டோம். அங்கும் எங்களைப் போலுள்ளவர்கள் அலை மோதிக் கொண்டிருந்தனர். வைத்தியசாலைத் திண்ணையோரம் எமக்கொரு சிறு இடம் கிடைத்தது. அதில் மழை நீரில் ஊறிப்போயிருந்த பாயையும், தலையணைகளையும் போட்டுப்படுத்து விட்டோம். கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தேன். இரவு பத்து மணி! பசியும், உடல் நோவும் வாட்டி வதைத்தன. நாளைய பொழுது எமக்காக விடியுமோ...

எல்லாமே முடிந்து விட்டன. இனியென்ன விடிவும்? முடிவும்?

பின்னால் வந்த ஆறு மாதங்களையும் ஒரு நண்பனின் அறிமுகத்தோடு சாவகச் சேரியில் கிடைத்ததொரு வீட்டில் கழித்தாயிற்று. வீட்டின் வெளித்திண்ணையில் தான் குடியிருப்பென்றாலும்.... சமையலுக்கு மட்டும் உள்ளே அடுப்பொன்றைத் தந்துதவினார்கள்.

சித்திரை மாதத்தில் ஊர் திரும்பிய எனக்கு ஐப்பசி மாதத்தில் ஒரு மகன் பிறந்திருக்கிறான். நீண்ட காலம் கழித்துப் பிறந்த எனது மூன்றாவது அதிசயம் அவன்.

ஒன்றும் முடியவில்லை! எல்லாமும் தொடர்கிறது!

வீரகேசரி<br>*28.12.1997*

# 6

## துன்பப்பட்டோர் பேறுபெற்றோர்

அன்று மாலையில் சூரியன் வழக்கம் போலத்தான் மேற்குத் திசையில் போய் வீழ்ந்து மறைந்தான். ஆனால் அன்றைய இரவு மட்டும் வழக்கமான இரவாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியிலுள்ள மக்களின் மனதில் வேதனையையும், பய உணர்வினையும் அதிகரிக்கச் செய்யும் ஓர் இருள் சூழ்ந்த இரவாகவே அது அமைந்து விட்டது. கடவுளாலும் கைவிடப்பட்ட பாவிகள் போல...

அவர்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள்? உக்கிரப் போரின் உச்சக்கட்டத்தில், மனமெல்லாம் இறுகிப் போன நிலையில், ஒரே ஒரு பாதை தான் அவர்களுக்கெனத் திறந்திருந்தது, ஒரேஒரு முடிவுதான் அவர்கள் எடுக்கக் கூடியதாக இருந்தது. யாராலும் நம்ப முடியாத நிகழ்வொன்று கண்ணெதிரே நிகழ்ந்து கொண்டிருந்தது...

இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னே தொண்ணூற்றியைந்தின் ஒக்டோபர் மாதத்து முப்பதாம் திகதி இரவின் நினைவுகளில் சங்கீதா மூழ்கியிருந்தாள். “பிரபல பாடகர் மரணம்” என்ற பத்திரிகைச் செய்திதான் அவளை அந்த நினைவலைகளில் மூழ்க வைத்திருந்தது. அந்த இடப்பெயர்வின் போதுதான்

அவனை அவள் கடைசியாகச் சந்தித்திருந்தாள். அந்த இசைக்குயிலின் மரணம் எல்லோரையும் போல அவளையும் பாதிக்கவே செய்தது.

சங்கீதாவுக்கு சங்கீதமென்றால் கொள்ளை விருப்பம். எங்கெங்கே இசைக்கச்சேரிகள் இடம் பெறுகின்றனவோ அங்கெல்லாம் அவளைக் காண முடியும். அவனையும் முதன் முதலாய் ஓர் இசைக் கச்சேரியில் வைத்துத் தான் அவள் நேரில் சந்தித்தாள். வானொலியில் அவன் பாடல்களைக்கேட்பதென்பதே அவளுக்கொரு சுகானுபவந்தான் அவனது அழுத்தமான வெண்கலக் குரலுக்கு இணையாக இன்னொரு குரலை யாராலும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் வைத்து " இதோ இவர் தான்அவர்" என்று அவன் முதல் அறிமுகம் கிடைத்த போது அவள் முதலில் திகைத்துப் போனாள். அவன் சாரீரத்தினை அனுபவித்துக் கேட்கும் போதெல்லாம் அவனொரு நடுத்தர வயதுக் காரனாகவும், ஓரளவு பருத்த சரீரம் உள்ளவனாகவும் இருப்பானென்று அவள் அவனது தோற்றம் பற்றிய உருவகம் ஒன்றை தன் மனதுள் உருவாக்கி வைத்திருந்தாள்.

நேரில் கண்டபோது அவன் உருவத்துக்கும் அவனிசைக்கும் பாடல்களுக்கும் எந்த வகையிலும் சம்பந்தம் இல்லையென்று தான் அவளுக்குத் தோன்றியது.

ஏறக்குறைய தன் வயதை ஒத்தவனாகவோ அல்லது ஒன்றிரண்டு வயதுகள் கூடுதலாக உள்ளவனாகவோ தான் இருப்பான் போலிருந்தது. கள்ளமில்லாமல் அவள் முகம் பார்த்து வெள்ளையாய் சிரித்தான். அவனை மிகவும் பெரிய மனிதனாக இது வரையிலும் தான் கற்பனை செய்து வைத்திருந்தமை பற்றி அவள் அவனிடம் சொன்ன போது, அவன் தனது வெண்கலக்குரல் அதிரப் பலமாகச் சிரித்தான்.

தான் மிகவும் சின்ன மனிதனாகத் தெரிகிறேனோ என்று பொய்யான கவலையுடன் கேட்டான். கேட்கும் போதே அவன் தன்னுடலை இன்னும் சற்றுக்குறுக்கி வைத்துக் கொண்டிருந்தான். இவளும் தன் கடைக்குட்டி மகன் போல அவனிருப்பதாகக் கூறி சற்றும் விட்டுக் கொடுக்காமல் மெய்யான முகபாவனையுடன் நின்றாள். அவளது மூத்த மகனாக இருப்பதற்கே தான் மிகவும் பொருத்தமானவன் என்றும்...., தன் வயது இருபத்தைந்து என்றும்..... இசையும் தமிழும் தன்னிரு கண்கள் போல என்றும் ஒரு கை தேர்ந்த நடிகன் போல நாடகப் பாணியில் தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

அதன் பின்னால் வானொலியில் அவன் பாடல்களைக்கேட்கும் போதெல்லாம் அவன் முகமும் அவள் நினைவுக்கு வரும். இயல்பான சந்திப்புகள் பரஸ்பரம் இருவருக்கும் ஒருவரோடு ஒருவருக்கான நல்லெண்ணத்துக்கு வழி வகுத்தது. அவன் ஒரு தலை சிறந்த பாடகன். பாரதியார் பாடல்களை அவன் குரலில் கேட்கும் போது அதை நாளெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்றிருக்கும்.

தொண்ணூற்று நாலின் நடுப்பகுதியில் ஒரு நாள் அவன் அவளிடம் மனம் விட்டுப் பேசினான். நாட்டில் போர் மேகங்கள் கலைந்து போய் விடும் ஒரு சூழல் வரும் போல் உள்ளது என்றும், அதனால் மக்களின் நிம்மதியான வாழ்வு உறுதி செய்யப்படும் என்றும் சொன்னான். உண்மையான சமாதானத்தை வரவேற்பதில் யாருமே பின் நிற்க மாட்டார்கள் என்றும் உணர்ச்சியுடன் கூறினான்.

குண்டுகளற்ற விமானங்கள் வானத்தில் பறக்க வேண்டும் என்றும் ..... பயபீதியற்ற மனித முகங்களைத் தரிசிக்க வேண்டுமென்றும்..... மலர்கள் மலர்வது போன்ற இயல்பான மென்மையுடன் புதியதோர் உலகம் சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்றும் அவளும் ஆசைப்பட்டாள்..... கனவு கண்டாள்.

ஆனால் ..... இருள் சூழ்ந்த இரவில் நிகழத் தொடங்கிய அந்தத் தவிர்க்கமுடியாத இடப் பெயர்வு தான் உண்மை என்றானது. சங்கீதா உடைந்து போனாள். அவளால் எதையும் எளிதாக ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. சொந்த இடத்தினை விட்டுப்பிரிவதென்பது எவ்வளவு கொடுமையான விஷயம் ஆயினும் எல்லோரும் போன பின்னால் அங்கே தனியாக இருந்தென்ன செய்வது? உள்ள நிலைமையை அப்பாவிடம் எடுத்துச் சொன்னாள் சங்கீதா. நீண்ட வாக்குவாதங்கள், சொற்போர்களுக்கு மத்தியில் தான் அவளுடன் புறப்படுவதற்கு அவர் சம்மதித்தார். இருந்தாலும் கொஞ்சமும் அவர் விரும்பாத ஒரு காரியத்தை, கட்டாயப்படுத்தி செய்வித்தபோது அதுவே அவரது உயிருக்கு உலையாகப் போகிறது என்பதை அச்சமயத்தில் அவளால் உணர முடியாமல் போனது.

அப்பாவின் துணையுடன் அந்த நள்ளிரவு வேளையில் அவள் நடக்கத் தொடங்கினாள். அந்த வேளையிலும் எறிகணைக் குண்டுச் சத்தங்கள் எல்லோரையும்துரத்துவது போல் எங்கோ கேட்டுக்கொண்டு தானிருந்தது. ஏற்கனவே இடம் பெயர்ந்து நொந்து போயிருந்தவர்கள் தொடக்கி வைக்க மிகுதிப்பேரும் அவர் வழி தொடர்ந்து கொண்டிருந்தனர். நாவற்குழி போகும் நல்லூர் செம்மணி வீதி, சனக்கூட்டத்தினால் நிரம்பி வழிந்து

கொண்டிருந்தது. அரியாலை வீதிக்கும் அதே நிலைதான் என்று பேசிக் கொண்டார்கள். மழை பெய்து கொண்டிருந்தது.

கூட்டத்திற்குள் சிக்குண்டு அப்பா விழி பிதுங்கிப் போனார். வீடு திரும்பும் எண்ணத்துடன் அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்தார். அலையலையான மக்கள் வெள்ளம் கரை புரண்டு வந்து கொண்டிருந்தது. எப்படித் திரும்பிப் போக முடியும்? தள்ளாடி நடந்து கொண்டிருந்தவருக்கு மூச்சு விடுவது கூடச் சிரமமாக இருந்தது.

அப்பாவுக்குரிய மருந்துகளை அவசரத்தில் எடுக்க மறந்து வந்தது நினைவுக்கு வந்தது. உடுப்பு மட்டும் தான் வாழ்வின் தேவை என்பது போல வாரிக்கட்டிக் கொண்டு வந்திருந்தது அவளுக்கு இப்போது தாங்க முடியாத சுமையாக இருந்தது. இரண்டு காலடிகள் எடுத்து வைப்பதும், அடுத்தகட்ட நடைக்காக இரண்டு மணி நேரம் கூடக் காத்திருக்க வேண்டியிருப்பதும்.... அவளுக்கே முடியாமல் இருந்த போது ... அப்பா பாவம் என்ன செய்வார்?

எப்படியோ அடுத்த நாளின் மாலைப்பொழுதில் அவர்களால் நாவற்குழியை வந்தடைய முடிந்தது. சாதாரண நாளாக இருந்திருந்தால் ஒரு இரண்டு மணிநேரமே போதுமோ.....

நாவற்குழியில் வைத்து ஒரு சைக்கிள்காரனை வாடகைக்குப் பிடித்து விட்டாள். அப்பாவை அதில் ஏற்றி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இறக்கி விடும்படி சொன்னாள். பாடசாலை வந்து அவள் அப்பாவுடன் சேர்ந்து கொண்டபோது மீண்டும் நள்ளிரவுப் பொழுதாகிப் போனது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் போய் இருக்கும் படி யாழ்ப்பாணத்தில் வைத்து அவன்தான் சொல்லிவிட்டிருந்தான்.

சிறியதோர் இடம்பிடித்து அப்பாவை அதில் உறங்க விட்டு, இரவு முழுவதும் அவள் விழித்திருந்தாள். அவர் உறங்குவதாகத் தான் அவள் நினைத்துக்கொண்டிருந்தாள். ஆனால்.... விடிந்ததும்.... அவர் எழுந்திருக்கவில்லை.

எப்படியோ அவன் வந்து சேர்ந்ததும்... அப்பாவின் காரியங்களைக் கன கச்சிதமாய் நிறைவேற்றி வைத்ததுவும்,... எல்லாம் கனவில் நடப்பவை போல நடந்தேறின. அப்பாவுக்கு ஆண்வாரிசு இல்லாத குறை அன்றவனால் தீர்ந்தது.

தனக்கு அறிமுகமானதோர் குடும்பத்துடன் அவள் தங்குவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்து கொடுத்தான். அச்சமயத்தில் மீண்டும் ஒரே ஒரு தடவை தான் அவன் சங்கீதாவைக் கண்டு பேசியிருந்தான்.

அவளது இருப்பிட வசதி குறித்து விசாரித்தான். தளராத மன உறுதியே தடம்புரளாத வாழ்வுக்கு வழி என்றான். சமாதானம் என்றால் சண்டை, சண்டைதான் சமாதானம் என்று சொல்லி அவளைச் சிரிக்க வைக்க முயற்சி செய்தான். அவளால் சிரிக்க முடியவில்லை.

சிறிய மீன்களைப் பெரிய மீன்கள் விழுங்கி விடுவதைப்போல் சிறு துன்பங்களைப் பெருந்துன்பங்கள் விழுங்கி விடுமென்றும், தன்துன்பங்கள் என்பது சிறு மீன்கள் போன்றவையென்றும் நாட்டின் அவலமான போர்ச் சூழலே தன் வாயை அகலத் திறந்திருக்கும் பெரிய திமிங்கலம் என்றும் அவள் நினைத்தாள்.

இயேசுநாதரும் மனுக்குலத்தோரின் மீட்புக்காகவேதான் துன்பப்பட்டு சிலுவை சுமந்து மரித்தார்.

உயிர்த்த ஞாயிறாக அவன் தந்து சென்ற பாடல்கள் அவளிடம் உண்டு.

சஞ்சீவி

*14.02.1998*

# 7

## கிழக்கு வெளுக்கும்

மழையும் வெயிலும், வெயிலும் மழையும் என்று மாறி மாறி வித்தை காட்டிக் கொண்டிருந்தது வானம். மழைத்துளியொன்று சூரிய வெளிச்சம் பட்டு பல நிறம் காட்டும் வைரம் போல் மின்னிக் கொண்டிருந்தது. இலை ஒன்றின் மீது தொங்கிக் கொண்டு ஜாலம் காட்டிக் கொண்டிருந்த அத்துளி நீர் ஒரு கணப்பொழுதில் கீழே உதிர்ந்து விடக்கூடும்.

எல்லாமே நிலையற்றனவாய் அவளுக்குத் தோற்றம் காட்டின.

அவளது நம்பிக்கைகள் எல்லாம் பொடிப் பொடியாகிப் போனது போல...... இந்த உலகமே யாருமற்றதோர் சூனியப்பிரதேசமாகி விட்டதைப் போல ..... அவள் தன்னுள்ளே உணர்ந்தாள்.

சூரிய குமாரனை முதன் முதலாக சந்தித்த நாள் வந்து சுதந்திராவின் மனதில் நிழலாடியது. அவனது உயர் குணங்களும், உத்தமச்செயல்களும் ஒவ்வொன்றாக அவளது ஞாபகத்தில் வந்து கொண்டிருந்தன. ஆயினும்....

அவன் இத்தனை பிடிவாதக்காரனாக இருப்பான் என்று முன்னமே தெரிந்திருந்தால் தான் என்ன செய்திருப்பேன் என்றவள் யோசித்தாள்...

வெறும் நட்பு முறையுடன் மட்டும் அவனுடனான பழக்கத்தை நிறுத்திக்கொண்டிருந்திருப்பாள், தனது உள்ளத்தை அவனிடம் பறி கொடுத்து விட்டிருக்க மாட்டாள். நாளாந்தம் எத்தனையெத்தனை பேருடன் பழகிவரவேண்டியவள் அவள்? அவளது துறை சார்ந்த சக உத்தியோகத்தர்களாய்... ஊழியர்களாய் எத்தனை வகையினருடன் அவள் உரையாடி வருகிறாள்?...

பல்கலைக்கழகத்திலும் கூட அத்தனை பேரிலும் அந்த ஒரே ஒருவன் மீது தானே - சூரியகுமாரன் மேல் தானே- அவளுக்குரியதான அந்த ஈர்ப்பு சக்தி இருந்தது. அது அவனது ஆளுமை நிறைந்த தோற்றத்தினால் ஏற்பட்டதா? அல்லது அவனது பெருந்தன்மையினால் ஏற்பட்டதா?...

இரண்டும் தான் காரணமாயிற்று.

ஒரு வரைமுறைக்குட்பட்டதான அவனது பழகும் முறைகள் அவள் மனதில் அவனது நினைவுகள் ஆழப்பதியுமாறு பாத்தியிட்டுக் கொடுத்தன. வாழ்வியல் பற்றியதான அவனது தெளிவான சிந்தனைகளும், தியாக, சிந்தனையுடன் கூடிய அர்ப்பணிப்புக்களும் அவளை மலைக்க வைத்தன.

என்ன பயன்?

எல்லாமே பழங் கனவாய்ப்போய்விடும் போலுள்ளதே... அவளைப் பிரிந்தே தீருவேன் என்று ஒற்றைக்காலில் நிற்கிறானே...?

"அப்பிடியெண்டால் இது தான் உங்கடை இறுதி முடிவோ?"

சூரிய குமாரனைச் சந்தித்த அந்தக் கடைசி நாளில் அவனிடம் அவள் கேட்டாள். அவன் தனது முடிவினைச்சொல்லி விட்ட பின்னரும்..... அதை ஏற்றுக்கொள்ள மனமின்றி அவள் அப்படிக் கேட்டாள்.... இல்லையில்லை கேட்டுக்கொண்டேயிருந்தாள். எத்தனை தடவைகள் தான் அப்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்பது அவளுக்கே தெரியாது.

அவளது பரிதாப நிலை கண்டும் கூட, இனிமேல் அந்தக் கேள்விக்குத் தான் பதில் சொல்ல வேண்டியதில்லை என்பவன் போல் மிக அமைதியாக இருந்தான் சூரியகுமாரன்.

"உங்களுக்காக இத்தனை வருடங்களாய்க் காத்திருந்தேனே...? சுதந்திரா ஆற்றாமையால் அழுது புலம்பினாள்.

"அதை நான் பெருமையாய்த்தான் நினைக்கிறேன்..." சூரிய குமாரன் அவளை ஆற்றும் விதமாய்த்தான் அதைச் சொன்னான்.

"அதுக்காக நீங்கள் எனக்குத் தருகிற பரிசு தான் என்னைவிட்டுப்போறன் எண்டு..." மேலே பேச முடியாமல் குரல் உடைந்தாள் அவள்.

"என்ரை இப்போதைய நிலைமையிலை இதைத்தவிர வேறை முடிவு எதையும் என்னாலை எடுக்க முடியேல்லை என்பது தான் உண்மை சுதா...."

அந்த நிலைமையாக அவன் எதைச் சொன்னான்?

அவனுக்குப் பெண் சகோதரிகள் நால்வர். அப்பா உயிருடன் இல்லை. அவர் அனுராதபுரத்தில் கடை வைத்திருந்த போது காடையர்களால் படுகொலை செய்யப்பட்டவர். இது நடந்தது எழுபத்தியேழில்..... அப்போது சூரியகுமாரனுக்கு பத்தே வயது தான். அவனது அக்காவுக்குப் பன்னிரண்டு வயது. மற்றைய மூவரும் அவனுக்கு இளையவர்கள்.

அவர்கள் அனைவருமே அகதிகளாக மாறி யாழ்ப்பாண மண்ணில் காலடி எடுத்து வைத்தபோது ... அவர்களது சொந்த மண்ணிலும் கூட அவர்களை அரவணைப்பதற்கு யாருமே தயாராக இல்லை!

சூரியகுமாரின் தாயார் உயர் குலத்தவராம் சாதி மாறித் திருமணம் செய்து கொண்டதனால் அவரது உறவினரால் கைவிடப்பட்டிருந்தார். கணவன் பகுதியினரும் கூட அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. தமது பிள்ளையை மயக்கிப் பிடித்து விட்டாளாம் குற்றம் சுமத்தினார்.

சூரிய குமாரனின் தாயார் தன் மனம் சோர்ந்து போய் விடவில்லை. தான் பெற்றெடுத்த பிள்ளைகளுக்காகத் தன்னையே ஓர் எரியும் மெழுகுதிரியாக்கிக் கொண்டார். தன்னோடு மறைத்து எடுத்து வந்திருந்த நகைகளை விற்றுப் பணமாக்கினார். அதையே மூலதனமாக வைத்து தமது பிழைப்பைத் தொடர்ந்தார். அனுராதபுரத்தின் கடை வியாபார அனுபவங்கள் அவருக்குக் கைகொடுத்து உதவின.

இளம் விதவைப் பெண்ணாக தன் தாயார் பட்ட துன்பங்களும் துயரங்களும் சூரியகுமாரனைச் சிந்திக்கத் தூண்டின.

தனது முன்னேற்றமே தாயின் தலைச்சுமையைக் குறைக்க உதவும் என்பதை அன்றே அவன் உணர்ந்து விட்டான். அதன் பயன்... அவன் படித்தான். மிக நன்றாகப் படித்தான். ஊக்கமாய்ப் பாடங்களைக் கற்றுத் தேறினான்.

இன்றவன் புகழ் பெற்றதோர் வைத்தியனாக சிறந்ததோர் சத்திர சிகிச்சை நிபுணனாக உருவெடுத்திருக்கின்றான் என்றால்.... அவனது தனித்துவமான முயற்சியே அதற்குக் காரணமாகும்.

அவன் படித்துக் கொண்டிருந்த போது அவனது அக்காவுக்குத் திருமணமாகி விட்டிருந்தது. தங்கையர் மூவரும் கரை சேரும் வரையுமே சுதந்திரா அவனுக்காகக் காத்திருந்தாள். அவர்களும் ஒவ்வொருவராக நல்ல நல்ல இடங்களில் வாழ்க்கைப்பட்டு, அமோகமாய்த் தத்தமது வாழ்க்கையினைத் தொடங்கி விட்டார்கள். இனிமேல் சுதந்திரா சூரியகுமாரனின் திருமண வாழ்வுக்குத் தடங்கலே கிடையாது!

அவர்களது மருத்துவப் படிப்பின் போது இருவருக்கும் இடையினில் இருந்த சாதாரணப்பழக்கமானது... பட்டமளிப்பு வைபவத்தின் போது பிரிக்க முடியாத நேசமாக உருமாறிப்போய் விட்டிருந்தது. ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டதனால் உண்டான அன்புணர்வு மிக ஆழமாக அவர்களது உள்ளங்களில் வேருன்றிக் கொண்டு விட்டது.

பட்டமளிப்பின் போது எடுத்த தத்தமது புகைப்படங்களை இருவருமே ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டிருந்தனர். சுதந்திரா தனது படத்தைக் கொடுத்து, அவனுடையதைப் பெற்றுக்கொண்ட போது...

"காலம் மாறினும், தேகம் அழியினும், கதையில் கவிதையில் கலந்தே வாழுவோம்!" என்றவன் தன் படத்தின் பின்னால் எழுதிக் கொடுத்திருந்தான்.

அவன் ஒரு கவிஞனில்லை. ஆனால் நல்ல சுவைஞன். எங்கோ தேடியெடுத்த கவிதை வரிகளைத்தான் அவன் அப்படி எழுதியிருந்தான். அதன் அர்த்தம் கேட்ட சுதந்திராவிடம்...

"அர்த்தங்கள் ஆயிரம் இருக்கு - அது அத்தனையும் சொல்லப் பொழுதில்லை எனக்கு!" என்று கலைஞர் கருணாநிதி போல் கரகரத்த பொய்க் குரலில் சொல்லிச் சிரித்தான் சூரியகுமாரன்.

கடமைகள் முடிந்தன என்று சூரியகுமாரனும் அவன் அம்மாவுமாய் தலை நிமிர்ந்த நேரம்... அவர்கள் தலையில் பேரிடியாய் வந்து விழுந்தது ஒரு செய்தி.

துணுக்காயில் நகைக்கடை வைத்திருந்த அவனது அக்காவின் அத்தான் கிபிர் குண்டு வீச்சில் அகப்பட்டு செத்துப்போனாராம். அக்காவுக்கு நான்கு பிள்ளைகள். எல்லாம் சின்னஞ்சிறுசுகள். ஐந்தாவதும் வயிற்றில் இருப்பதாகக் கேள்வி. அக்கா என்ன செய்யப்போகிறாள்?

துடித்துப் புரண்டாள் அம்மா. "தாயின் விதி தான் தலைமகளுக்கென்றாச்சோ" என்று ஒப்பாரி வைத்துக் கதறி அழுதாள்.

அம்மாவை ஆறுதல் சொல்லித் தேற்றினான் சூரியகுமாரன். தானும் அம்மாவும் அங்கே வருவதாகவும், தைரியமாக இருக்கும் படியும் அக்காவுக்கு செய்தி அனுப்பினான்....

" நானும் வருகிறேன்..." என்று புறப்பட்ட சுதந்திராவைத்தான் இப்போது தடுத்து நிறுத்துகிறான்!

சுதந்திரா தவித்தாள்.

அவன் தனது வைத்தியத்தொழிலையே துணுக்காய் ஆஸ்பத்திரியில் தொடரப்போகிறானாம்..இப்போதைக்குத் திரும்பிவர மாட்டானாம்.... அவனது அந்த முடிவு தான் அவளைக் கலவரப்படுத்திற்று.

" அக்காவையும், குழந்தைகளையும் இங்கேயே கூட்டி வரலாம் தானே...?" சுதந்திரா அவனிடம் கெஞ்சி மன்றாடினாள்.

" இல்லைச் சுதா.... அக்கா அங்கை சொந்தமாய் வீடு, கடை எண்டு இருக்கிறா. எனக்கும் கனநாளாய் மனதுக்குள்ளை ஒரு குடைச்சல் இருக்கு. துன்பங்கள் கூடின இடத்திலைதான் என்னுடைய சேவை தேவையெண்டு என்ரை மனம் கிடந்து அடிச்சுக்கொள்ளுது. இப்ப நான் போறன்.... நான் திரும்பி வரும் வரைக்கும் உம்மாலை எனக்காகக் காத்திருக்க முடியுமெண்டால் காத்திரும்... இல்லையெண்டாலும்.." அவன் மேலே எதுவும் பேச முடியாமல், அவனது வாயைத் தன் கரத்தால் மூடினாள் அவள்.

சூரியகுமாரன் நல்லவன், அதே சமயம் ஒரு கர்ம வீரனும் கூட. அவன் யாருக்காகவும் தனது முடிவுகளை மாற்றிக் கொள்ள முன்வர மாட்டான் என்பதை சுதந்திரா அறிவாள்.

அதனால் ..... எத்தனை காலங்களானாலும் அவனது வருகைக்காக அவள் காத்திருப்பாள்.

சஞ்சீவி<br>*19.12.1998*

# 8

## மதுர பாவ விந்தைகள்

•........

உன் உயர்வுக்கோர் உந்து சக்தியாக
உள்ளத்தின் உணர்வு எழுச்சியாக
அன்றும் நான் உன்னுடன் இருந்தேன்
இன்றும் நான் உன்னுடன் இருக்கிறேன்.
என்றும் நான் உன்னுடன் இருப்பேன்
என்னிருப்பு உன் ஆத்மாவை நிறைவுறச் செய்யும்
உனக்குள் இருக்கும் உன் மனிதத்தை
அதன் மென்மையை மேலோங்கச் செய்யும்

ஒரு கவிதையுடன் தன் கடிதத்தை முடித்திருந்தாள் நிதர்சனா. அதுதான் அவள் வழக்கம். அவளது அந்தக் கவிதைகளை வைத்து ஒரு கவிதை நூல் தொகுதியே வெளியிட்டு விடலாம்....! வேறு என்ன செய்யலாம்?

சத்தியன் சலிப்புடன் கடிதத்தை மடித்து உறையிலிட்டான்.

கனவில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவளுக்கும், நிஜத்துக்காக ஏங்கும் தனக்கும் திருமணவாழ்வென்பது ஒரு நாளுமே வந்து சித்திக்கப் போவதில்லை என்பது

அவனுக்கு என்றோ தெரிந்து போய் விட்டிருந்த உண்மைதான்.

ஆயினும் அவள் மனந்திரும்ப மாட்டாளா என்னுமோர் எதிர்பார்ப்பு அவனுக்கிருந்தது..... இப்போது அதுவும் இல்லை என்றாகிப் போய் விட்டது.

நிதர்சனா அடிக்கடி சொல்வாள், காதலுக்கும் கல்யாணத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்று, அவ்வேளைகளில் எல்லாம் அவளை உதைத்தால் என்ன என்று தான் சத்தியனுக்குத் தோன்றும். ஆயினும், "உலகம் மேலும் உயிர்ப்புடன் இயங்குவதற்குரிய வழி என்னம்மா" என்று அமைதியாகவே கேட்பான் அவன்.

" அதற்குத்தயாராக எத்தனையோ மணப்பெண்கள் பொன்னும், பொருளும் வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்களே! அவர்களுள் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்" என்பாள் அவள்.

அவளுடன் முட்டிக் கொள்வதும் குட்டிச் சுவருடன் முட்டிக் கொள்வதும் ஒன் று போல் தெரியும் சத்தியனுக்கு.

"உன்னை நான் பார்த்ததும், உன்னோடு பழக நேர்ந்ததும் நான் செய்த பெரும் பாவமே" என்பான் சத்தியன்.

" இல்லை தவம் " என்பாள் நிதர்சனா.

" எப்படித் தவமாகும்"

"கல்யாணம் கால்கட்டு என்று உங்களுக்குத் தொல்லை தராத நல்ல பெண்ணாக்கும் இந்த நிதர்சனா"

" பெண்மை என்னும் மென்மை உணர்ச்சி இல்லாதவருக்குத் தான் கல்யாணம் என்பது கால் கட்டாகத் தெரியும். தொல்லையாகவும் இருக்கும்."

" உணர்ச்சி பூர்வமான பெண்ணிலும் பார்க்க அறிவு பூர்வமான பெண்ணே மேலானவள்"

கவிதைகள் எல்லாம் உணர்வு பூர்வமானவையே. அதை எழுதுபவருக்கு இது தெரிந்திருக்க வேண்டும்."

"காதல் போலவே கவிதையும் உணர்வதற்காகவே...."

" உன் மனதுக்குள் நீ என்னதான் முடிவு செய்திருக்கிறாய்?"

" அன்பு கொண்ட இரு உள்ளங்களின் ஆத்மார்த்தமான சங்கமம் தான் காதல் என்று!"

“கல்யாணம்?”

“ உடலால் வாழ அவசரப்படுவது சுயநலமென்று....”

நிதர்சனாவை எப்படித் தன்வழிக்குக்கொண்டு வருவதென்பது தான் சத்தியனின் பெரும் பிரச்சினையாகிப் போயிற்று.

கிராமமும் இல்லாத நகரமும் அல்லாத அவ்வூரின் இந்து மகளிர் கல்லூரிக்கு சத்தியன் முதன் முதலாய் ஆசிரிய நியமனம் பெற்று வந்த போது, நிதர்சனாவும் அதே காரியமாய் அங்கு வந்திருந்தாள். அவன் கணிதப்பிரிவில் பல்கலைக் கழகப்பட்டம் பெற்றிருந்தான். அவள் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியிலிருந்து பட்டம் எடுத்து வந்திருந்தாள். இந்த இசை நடன ஆசிரியைக்கும் அந்தக் கணித ஆசிரியருக்குமிடையிலான முதல் சந்திப்பின் போதே ஏதோ இதுவாகிப் போய் விட்டிருந்தது. காதல் என்பது இனம், மதம், மொழி என்னும் அனைத்துத் தடைகளையும் கடந்ததோர் அற்புதமான உணர்வு என்பதும் அவர்கள் விடயத்தில் உண்மையாகிப்போயிருந்தது.

நான்கு வருடங்கள் நான்கு நிமிடங்களாக ஓடிப்போய் விட்டன. அவர்களுக்கான திருமணப் பேச்சுக்கள் எழுந்த போதுதான் இருவரும் சுய உணர்வு பெற்றனர். சத்தியன் ஒரு கிறிஸ்தவன். நிதர்சனாவின் மதம் இந்து. சத்தியன் தேவாலயம் சென்று சிலுவைக்குறி இட வேண்டியவன். நிதர்சனா சிவாலயம் சென்று திருநீற்றுக் குறியிட வேண்டியவள்.

இருவரும் மதம் மாறாமலேயே திருமணம் செய்துகொள்ளத் தயார்தான். அவர்கள் குடும்பத்தவர்தான் அதற்குத் தயாராக இல்லை. “ இரண்டும் கெட்டான் சந்ததி ஒன்று உருவாகுமாம்!” அதனால் இரு பகுதியிலிருந்தும் யார் ஒருவரும் அவர்களது திருமணத்துக்கான சம்மதம் சொல்லத் தயாராக இல்லை.

“ யாருடைய சம்மதமும் எமக்கு வேண்டியதில்லை” என்றான் சத்தியன்.

நிதர்சனா அதை ஒப்புக்கொள்ளவில்லை.

“ யாருக்கும் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்து கொள்வோம்.... காலப்போக்கில் எல்லாம் சரிவரும்” என்றான் அவன்.

நிதர்சனா அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

“ நாங்கள் இருவருமே ஆசிரியர்கள்” என்றாள் அவள்.

“ அது எங்கள் தொழில்” என்றான் அவன்.

" இது ஒரு புனிதமான தொழில்"

" ஆம் ஒவ்வொரு நாளும் குளித்து முழுகித்தான் பாடசாலை வருகிறோம்..."

" மாணவருக்கு மட்டுமல்ல... நமது சமூகத்திற்கும் நாமே தான் வழிகாட்டிகள்!"

" திருமணம் என்பதும் ஒரு நல்ல வழிகாட்டலே"

" அது நேர்வழியில் நடக்க வேண்டும்"

சத்தியனின் வாய் அடைபட்டுப்போயிற்று . தன் பொருட்டு தன்னவள் தன் மானம் இழப்பதை அவன் விரும்பவில்லை. அதற்காக அவளை இழந்து விட முடியுமா என்ன? அவன் குழம்பினான். " முதன் முதலாய் இராமன் சீதையை மிதிலையில் கண்டது பூர்வ ஜென்ம பந்தம் காரணமாய் என்பது கம்பரின் கூற்று.

நான் இவளை ஆசிரிய நியமனத்தின் போது கண்டது எதன் காரணமாய் என்றெண்ணிக் கலங்கினான் அவன். ஆண்டவன் என்மேல் இரக்கமுள்ளவராய் இருந்திருப்பாரேயானால் அவளை எனக்குக் காட்டாமலேயே இருந்திருக்கலாம்..... எல்லாம் ஊழ்வினைப்பயன்..... என்தலை விதி.... " சத்தியனுக்கு இதயம் வலித்தது.

பாடசாலைக்கு விடுமுறைகோரிக் கடிதம் அனுப்பி விட்டு வீட்டினுள் அடைந்து கிடந்தான் அவன்.

நிதர்சனாவுக்குப் பொறுக்க வில்லை. யாராவது கல்யாணம் இல்லை என்பதற்காகத் தம் கடமையைத் துறப்பார்களோ,.? அவன் வருகைக்காய் ஏங்க ஆரம்பித்தாள் அவள்.

சத்தியன் வந்தான்... கொழும்புப்பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற்றுக் கொண்டு.

நிதர்சனா துடித்தாள்.

" எனக்காகத்தானே இந்த மாற்றம்?" அவள் கேட்டாள்.

" இல்லை எனக்காகவும் தான்!" என்றான் அவன்.

" என்னை விட்டுப் பிரிந்து போனால் தான் உங்களுக்கு நிம்மதியாக இருக்கும்"

" இல்லை நிதர்சனாவும் என்னைத் தொடர்ந்தால்தான் என் வாழ்வில் அமைதி கிட்டும்"

"என் பெற்றோருக்கு நான் ஒரே மகள்"

"எனக்கு அது தெரியும்"

"என்னை இழந்தபின் அவர்கள் உயிர் வாழ மாட்டார்கள்"

"...................."

"அவர்களை இழந்தபின் நானும் உயிர் வாழ முடியாது"

"...................."

பாடசாலையில் சத்தியனுக்கான பிரிவுபசார விழா நடந்தது. விருந்துபசாரம் முடிந்ததும் நிதர்சனாதான் பாட வேண்டியிருந்தது. எல்லாம் பாரதியின் பாடல்கள். தமிழை வாழ்த்திப் பாடத்தொடங்கி, "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?" என்று கேட்டுப் பாடி முடித்தாள். இடையில் அவள், "மோகத்தைக் கொன்றுவிடு அல்லால் எந்தன் மூச்சை நிறுத்தி விடு" என்று மஹா சக்திக்கு விண்ணப்பித்துப் பாடியபோது சத்தியன் கண் கலங்கினான். தன்னை உயிருக்குயிராய் நேசிக்கும் ஒரு பெண்ணைப் பிரிந்து போக வேண்டியுள்ளதே என்னும் துன்பம் அவன் முகத்தில் அப்பிக் கிடந்தது.

ஆசிரியர்கள் எல்லோரும் கரவொலி செய்து அவள் பாடல்களுக்கான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டனர். சத்தியனின் ஆசிரியப்பணி பற்றியதான தனது விதந்துரையின் போது அதிபர் கூட நிதர்சனாவின் குரல் வளத்தைப் பாராட்டினார்.

சத்தியன் போய் விட்டான்.

தன் பிரிவு நிச்சயம் நிதர்சனாவைப் பாதிக்கும் என்றும், அவள் நிலையில் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வரும் என்றும் அவன் நம்பினான். அவளது நிலைமையை அவ்வப்போது யார் மூலமாகவேனும் கேட்டு அறிந்து கொண்டுமிருந்தான்.

அவர்கள் இருவருக்குமிடையில் கடிதப் போக்குவரத்துக்கள் மட்டும் தங்குதடையின்றி நடந்து கொண்டிருந்தன. அவன் பாடசாலை விலாசத்துக்கு அவளும் - அவள் பாடசாலை விலாசத்துக்கு அவனும் கடிதங்களை அனுப்பிக்கொண்டிருந்தனர்.

"நான் இங்கு சுகம்! நீ அங்கு நலமா? இவ்விடம் மழை பெய்கிறது! உவ்விடம் என்ன பெய்கிறது?" என்று கேட்டெழுதி உப்புச் சப்பில்லாமல் போய் வந்து கொண்டிருந்த கடிதங்களால் அலுத்துச் சலித்துப்

போயிருந்தான் சத்தியன். அதனால் ஒரு புதிய உத்தியைக் கையாள நினைத்தான்.

ஒரே ஒரு திருமண அழைப்பிதழ் அச்சிடுவித்தான். மணமகன் பெயர் சத்தியன். மணமகள் ஒரு கற்பனைப் பெண். அவனின் அச்சகத்து நண்பன் ஒருவன் வெகு கச்சிதமாய் தயாரித்துக் கொடுத்தான் அழைப்பிதழை. நிதர்சனாவுக்கு அந்த அழைப்பிதழ் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நிச்சயம் இந்தத் திருமண அழைப்பு அவள் உணர்வுகளைத் தாக்கும். அதன் எதிர்விளைவுகள் எவையாக இருக்கும்? அதை எதிர்பார்த்து வெகு ஆவலுடன் காத்திருந்தான் அவன்.

அதுதான் வந்திருக்கிறது!

அன்றும், இன்றும், என்றும் நான் உன்னுடன் இருந்தேன், இருக்கிறேன், இருப்பேன் என்று. அவனது திருமணத்துக்கான வாழ்த்துக் கடிதமும், இந்தக் கவிதையும்ஒன்றாகவே சேர்ந்து வந்திருக்கிறது. அது அவ்வாறாயின், "நீ எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள், ஆனால் நான் இப்படியே தான் இருந்து கொள்வேன்" என்பது தான். வேறு எத்தனை தான் தேடிப்பார்த்தும் அதன் அர்த்தம் அந்த ஒன்று தான்.

சத்தியனுக்குச் சலிப்பு வராமல் வேறு என்னதான் வருமாம்?

*-1999-*

# 9

## ஆச்சி நல்லூர் போகிறாள்

உங்களுக்கு ஆச்சியைத் தெரியுமோ? ஆள் ஒரு பொல்லாதகாய்! ஆச்சியிடம் ஒருபயல்கூட வாலாட்ட முடியாது. தன் வாயாலேயே வால்களையெல்லாம் ஒட்ட நறுக்கி விடுவாள் ஆச்சி. ஆச்சியிடம் வாய்கொடுத்து ... வாங்கிக்கட்டிக் கொள்ளாமல் யாரும் தப்பிப் பிழைத்ததாகச் சரித்திரமே கிடையாது. ஆச்சியின் வெள்ளைவெளேரென்ற தலைமுடியும், வெண்ணிறச் சேலையும், நெற்றி நிறைந்த திருநீறும், அனைவரையும் அவள் பால் கவர்ந்திழுக்கும் அம்சங்களாகும். ஆச்சியின் உள்ளம் கூட பால் போல் வெள்ளைதான். அங்கே கள்ளம் கபடம் இல்லை.

ஆச்சி தன் வயிற்றில் சுமந்து பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை பத்து. இப்போது பத்தும் பத்துத் திக்குகளில் ... அதாவது பத்து நாடுகளில்! அப்பு செத்துப்போன போது ஆச்சிக்கு வயது முப்பத்து மூன்று தான். மூத்தவனுக்கு வயது பதினைந்து. கடைக்குட்டியின் வயது இரண்டு.

ஆச்சி அந்த நேரம் தனது பதினெட்டாவது வயதிலேயே அப்புவைக் கலியாணம் கட்டி மூத்த மகனையும் பெற்று விட்டாள். புகையிலை வியாபாரியான அப்பு இந்தப் பூலோகத்தினை விட்டுப் போய்ச்சேர்ந்த போது ஆச்சியின் கையினில்

மடியினில் ஒன்றுமே இல்லை. நோயென்று ஒருநாள்கூட பாயினில் படுக்காத அப்பு.... நாற்பது வயதினிலே செத்துப்போகுமென்று யார் தான் நினைத்திருந்தார்கள்?

அப்பு இல்லாமல் போனதும் ஆச்சிக்கு முதலில் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல்தான் இருந்தது. அடுத்த வீட்டுத் துரையன் எல்லைக்கதியால் போட்ட “ ஏதடையில்” அப்புவுக்குச் செய்வினை செய்து உடன் பெல்லி ஏவிஅவரை முடித்து விட்டான்என்று தான் எல்லோரும்பயந்தார்கள். ஆனால் அப்போது யாராவது அப்புவின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்திருந்தால்... அவருக்கிருந்தது முற்றிய “ பிரஷர்” நோய் என்னும் உண்மை தெரிந்திருக்கும்.

அப்புவின் அந்திரட்டி முடிந்த கையோடு இரண்டு பால் மாடுகளை வாங்கி வீட்டிலுள்ள கொட்டிலில் கட்டி விட்டாள் ஆச்சி. கக்கத்தில் இடுக்கிய கடகத்தோடும் கையில் உளவாரத்தோடும், வயல் வெளிகளில் புல்லுத் தேடிப்புறப்பட்ட ஆச்சியைக் கண்டு ஊரெல்லாம் மூக்கின் மேல் விரலை வைத்தது. அன்றிலிருந்து ஒரு நாள் கூட ஆச்சி தன் உளவாரத்தையும், கடகத்தையும் கீழே வைக்கவில்லை. பட்டி பெருகிய பசுக்களால் ஆச்சியின் வாழ்க்கை வண்டி ஓடிக் கொண்டிருந்தது. வறுமையில் செம்மையாய் பத்துப் பிள்ளைகளையும் நன்றாகப் படிப்பித்தாள் ஆச்சி.

படித்த அந்தப் பிள்ளைகளுக்கு நமது நாட்டு நடப்புகள் ஒத்து வரவில்லை. அதனால் ஒவ்வொன்றாக ஆச்சியை விட்டுக் கழன்று கொண்டன. “ அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைகள்” போல சொந்த நாட்டை விட்டு வெளிநாடுகளை நோக்கிப் பறந்து போய்விட்டன.

ஆச்சியின் கடைக்குட்டிப் பயல் மீது ஆச்சிக்கு உயிர். அவனும் ஆச்சியின் சீலைத்தலைப்புக்குள் தான் இருந்தவன்.எல்லாம் கலியாணம் கட்டும் வரை தான். கட்டின சூட்டிலேயே பெண்டாட்டிக்காரியின் அண்ணன் காரன் கூப்பிடுகின்றான் என்று அவுஸ்திரேலியாவுக்குப்போய்ச் சேர்ந்து விட்டான். நெஞ்சு நோகப் புல் இடித்துப் போட்டு பால்மாடு வளர்த்துப் பிள்ளைகளை ஆளாக்கிய ஆச்சியோடு ஒரு பயலுக்குக் கூட “மினக்கெட” நேரம் இல்லாமல் போய் விட்டது.

அவுஸ்திரேலியா போனவன் தன் மனைவியோடு சேர்ந்து ஆச்சியையும் அங்கு வந்து சேர்ந்து விடும்படி வருந்தி அழைத்தான். அவன் மனைவியும் தனக்கு பாஸ்போட் எடுத்தபோது ஆச்சிக்கும் சேர்த்து எடுத்துவிட்டாள். தனதுசிவப்பியையும், கொம்பியையும்விட்டு எங்கேயும்வரமுடியாதென்று

அடம்பிடித்த ஆச்சியை எப்படிச் சமாளித்தாளோ தெரியவில்லை. மாமியாரையும் பிளேன் ஏற்றிக் கொண்டு போய் விட்டாள் மருமகள்.

ஆச்சிக்கு ஒரே ஏக்கம். அவுஸ்திரேலியா போய் இறங்கியதும் முதல் கேள்வியாக, "இஞ்சை பால் மாடு வாங்கலாமோ தம்பி?" என்று தான் மகனிடம் கேட்டாள்.

"ஏனணை பால் மாட்டை? நானே பால் பண்ணையிலை தானையெணை வேலை செய்கிறன்!" என்றான் மகன் அசட்டுச் சிரிப்புடன்.

" உன்னைப் பல்கலைக்கழகத்திலை நான் விட்டுப்படிப்பிச்சது மாட்டிலை பால் கறக்கிறத்துக்கோடா?" என்று கேட்டுச் சீறிச்சீறி அழுது சீலைத்தலைப்பினால் கண்ணையும் மூக்கையும் துடைத்தாள் ஆச்சி.

ஊரில் ஓடித் திரிந்து கொண்டிருந்த ஆச்சிக்கு தன்னை ஒரே இடத்தில் குத்தி இருத்தி விட்டது வருத்தமாக இருந்தது. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக ஆச்சி புசுபுசுவென்று வீங்கிப் போனது கண்டு மகன் பயந்து போனான். " நான் ஒரு நாளைக்கு குளிரிலை விறைச்சு செத்துப் போவன், அல்லது வீங்கி வெடிச்சுப் போவன்ரா பெடியா" என்று புலம்பிய ஆச்சியை ஊருக்கே திருப்பி அனுப்பி வைத்து விட்டான் அவன்.

நல்ல வேளை ஆச்சி அவுஸ்திரேலியா போகும் போது தன் வீட்டில் இருத்தி வைத்து விட்டுப் போனவர்கள் மிகவும் நல்ல மனிதர்கள். ஆறு மாதமாகிப்போயும் ஆச்சியின் சிவப்பியையும், கொம்பியையும் பத்திரமாகப் பராமரித்து வைத்திருந்தார்கள். அவை இரண்டுமே இரண்டு பசுக்கன்றுகளை ஈன்றிருந்தன.

ஆச்சி தன் வீட்டில் இருந்தவர்களைத் தன்னுடனேயே இருந்து விடும்படியும், இனி அவர்களே தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் போல் உறவென்றும்.... உறுதிபடச் சொன்னதில் இருந்தவர்களும் மகிழ்ந்து தான் போனார்கள். அவர்கள் ஆச்சியின் செத்துப்போன அப்புவுக்கு ஒரு வழியில் உறவுமுறையானவர்கள்.

ஆச்சியின் சுயதொழிலான உளவாரப் பணியுடன் கூடிய பால் வியாபாரம் மீண்டும் களைகட்டத் தொடங்கி விட்டது. உப்புக்கடலில் ஊறிப்போன சடலம் போலிருந்த ஆச்சியின் உடலும் படிப்படியாக வற்றிப்போய்ச் சரியாகி விட்டது.

ஒரு காலமும் ஆச்சிக்குத் தனது சீவியத்தைக் கொண்டு நடத்த பிறரின் தயவு தேவைப்பட்டதில்லை. பிள்ளைகள் யாரும் தனக்கு ஐந்து சதம் கூட அனுப்பக்கூடாதென்பது ஆச்சியின் கட்டளையாகும். அதை

மீறி யாராவது பணம் அனுப்பினாலும் பணத்தை ஏதாவது முதியோர் இல்லத்திற்கோ அல்லது அனாதைச் சிறுவர் இல்லங்களுக்கோ அனுப்பி வைத்து விடுவாள் ஆச்சி!

இந்த வருடத்தின் நல்லூர்த் திருவிழாக்காலத்தின் போது அவுஸ்திரேலியாவிலிருந்து ஆச்சியின் கடைக்குட்டியன் கடிதம் போட்டிருந்தான்.... கொஞ்சம் பணமும் அனுப்பியிருந்தான். வீட்டில் ஆச்சிக்குத் துணையாக இருப்பவர்களையும் கூட்டிக் கொண்டு ஆச்சியை நல்லூர்த் தேருக்குப் போய் வரும் படியும்... வாடகைக் காரில் பயணம் செய்யும் படியும் தான் அந்தப் பணத்தை அவன் அனுப்பியிருந்தான்.

ஆச்சிக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது.

" எனக்குத் தெரியாத நல்லூரரோ ..... எங்கினையோ இருக்கிறவர் காட்டப்போறாராமோ...? உங்கினையுள்ள பிள்ளைகள் படும் பாட்டுக்கை எனக்கென்ன கோயிலும் குளமும்?" என்று குமுறினாள் ஆச்சி.

" ஆச்சி உங்கடை பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டிலையெல்லோ?"

என்று சந்தேகமாய்க் கேட்டான் ஆச்சியுடன் கூடவே இருக்கும் அவளது தத்துப் பேரன்.

" அதுகள் எல்லாம் என்ரை பத்துமாதத்து மையடா... எப்பவோ எல்லாத்தையும் கைகழுவிப்போட்டன்..."

பத்துமாதத்துமையென்றால் என்னவென்று பயலுக்கு விளங்கவில்லை. அதனால் சிறிது நேரம் தன் நெற்றி சுருங்க நின்று யோசித்தான். பின்பு " ஆச்சி..... ஆச்சி, எனக்கு நல்லூர்க்கந்தசுவாமியாரின்ரை கோயிலைத்தெரியாதணை ஆச்சி.... எனக்காகவெண்டாலும் வாருங்கோவன் போவம்...." என்று ஆச்சியின் காலில் விழாத குறையாகக் கெஞ்சி மன்றாடினான் அந்தப் பொடிப்பயல். ஆச்சிக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அதனால் இளகிப் போய் விட்டாள்.

அவர்களின் இருப்பிடமோ மிருசுவிலில். காலையில் புறப்பட்டு தேருக்கு வரமுடியாது. அதனால் முதல்நாளே யாழ்ப்பாணம் போய் விடுவதென்றும், இரவு அங்கே தங்கி அடுத்த நாள் தேர் முடிந்ததும் ஊர் திரும்புவதென்றும் ஆச்சியுடன் எல்லோரும் சேர்ந்து தீர்மானம் செய்து கொண்டனர்.

சிவப்பிக்கும் கொம்பிக்கும் நிறையப் புல் செருக்கி வைத்துவிட்டு, வீட்டுக்கும் மாட்டுக்கும் சேர்த்து நல்ல காவலும் வைத்து விட்டுத்தான்

ஆச்சி நிம்மதியாகக் காரில் ஏறினாள். கார் புறப்பட்ட போது, "நல்லூரானே பயணத்தை நல்லபடி நடத்திவிடப்பா" என்று தலையில் கை வைத்துக் கும்பிட்டாள்.

வழி தெருவில் இருந்த சென்றிகளில் எல்லாம் இறங்கி ஏறியதில் ஆச்சி நன்றாகக் களைத்துப் போனாள். "கோதாரியிலை போக..." என்று ஒவ்வொரு தடவையும் சொல்லிக்கொண்டு வந்த ஆச்சியிடம், "எனக்கும் தெரியுமெணை அதை.... "கௌ" வன்னாவுக்குக் கௌதாரி" என்றான் பொடிப்பயல்.

கார் செம்மணியைத் தாண்டிய போது, "தும்பை விட்டு வாலைப் பிடிச்சது போல..... எட்டினதைப் பிடிச்சுப் புதைச்ச கெட்டித்தனம் தான் உது!" என்று சொல்லிக் கண்கலங்கிக் கொண்டாள் ஆச்சி.

மாடு சம்பந்தமான பழமொழிகள் என்றால் நிறையவே தெரியும் ஆச்சிக்கு !

யாழ்ப்பாணத்தில் அவர்கள் எல்லோரும் ஆச்சியின் ஒன்றுவிட்ட அண்ணனின் மகளின் மருமகனின் தம்பி மனைவியின் தங்கையின் வீட்டில் வந்து இறங்கினார்கள்!

அவர்கள் இவர்களைக் கண்ட மாத்திரத்தில் கொஞ்சம் பயந்து தான் போனார்கள். எந்த வடிவத்தில் பிரச்சினை வருமோ என்றுதான் முதலில் யோசித்தார்கள். ஆயினும் நல்லூர் முருகனின் பெயரைச் சொல்லி வந்தவர்களை, அவர்கள் வரவேற்கத் தவறவில்லை. இரவில் கதவைப்பூட்டி வைத்துக்கொண்டு, இருந்த மாவையெல்லாம் கொட்டிப் புட்டுக் குழைத்துக்கொண்டிருந்த நேரம் அவர்கள் வீட்டுக் கதவு படபடவென்று தட்டப்பட்டது. எல்லோரும் பயந்து போனார்கள். ஆச்சி மட்டும் துணிவுடன் போய், கதவைத்திறந்து "வாருங்கோ" என்று வந்தவர்களை வரவேற்றாள். அப்போது தான் பயத்தில் உறைந்து போய் நின்றிருந்த எல்லோருக்கும் சுய உணர்வு வந்தது.

"இங்கே கொட்டி வந்ததாய் எங்களுக்குத் தகவல்" என்றார் வந்தவர்களில் ஒருவர்.

ஆச்சிக்கு "கொட்டி" என்றால் என்னவென்று தெரியவில்லை. அதனால் முன் பின் யோசிக்காமல், ஓம்! வந்தனாங்கள் தான்! அதுக்கிப்ப என்ன?" என்று கேட்டாள். வந்தவர்கள் அவசர அவசரமாய் எத்தனை?" என்று கேட்டார்கள்.

ஆச்சி,, "ஒண்டு..... இரண்டு..... மூண்டு" என்று கைக்குழந்தையுடன் கார்க்காரரையும்சேர்த்து எண்ணிவிட்டு, "எல்லாமாய் எட்டு" என்றாள்.

வீட்டுக்காரர் ஒருவாறு அவர்களுக்கு நிலைமையை விளக்கினார். அவர்கள் ஆச்சியை ஒரு மாதிரிப் பார்த்து விட்டுத் திரும்பினர்.

காலையில் எழுந்து குளித்து முழுகி எல்லோரும் கால்நடையாகவே நல்லூருக்குப் புறப்பட்டு விட்டார்கள். அந்த அதிகாலை வேளையிலேயே கோயிலில் மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. அந்த நேரமே இளம் பெண்களும், இளம் பையன்களும் ஒருவரை ஒருவர் இடித்து உரசி மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

"எங்கடை சனங்களுக்கு ரோச நரம்புகள் எல்லாம் அறுந்து கெட்டுப்போச்சுதடா தம்பி !" என்று தன் கைப்பிடிக்குள் இருந்த பெடியனிடம் சொன்னாள் ஆச்சி. ஒன்றும் விளங்காவிட்டாலும், "ஓமணை ஆச்சி" என்றான் அவன். ஆச்சி திரும்பும் போது அவனுக்கு அப்பப்பாக்குழல், ஹெலி, துவக்கு, குட்டிப்பிளேன் எல்லாம் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தாள். அதனால் ஆச்சியுடன் ஒத்துப் போவதுதான் தனக்கு நல்லதென்று அவன் நினைத்தான்!

ஆச்சிக்குத் தான் முதலில் கலியாணம் கட்டியவுடன் அப்புவோடு வண்டில் பூட்டிக்கொண்டு நல்லூர் முருகனிடம் வந்த ஞாபகம் வந்துவிட்டது. முருகனிடம் அவள் வேண்டுதல் செய்தபடி அந்த வருடமே ஆச்சிக்கு மூத்தவன் வந்து பிறந்து விட்டான். அதனால் தான் அவனுக்கு "நல்லை நாதன்" என்று பெயர் வைத்ததும்....

கோயிலின் உள்ளே வசந்த மண்டபப்பூசை தொடங்கி விட்டது. வள்ளி தெய்வானை சமேதரராய் புன்னகை பூத்து நின்றிருந்தார் முருகப்பெருமான். பொடிப்பயல் ஆச்சியின் கையை சுரண்டினான். ஆச்சி அவனைக் குனிந்து பார்க்க, " ஆச்சி முருகனுக்கு எத்தினை பொம்பிளையெணை?" என்று கேட்டான்.

"இரண்டு தான்! ஏனடா கேட்டனி?"

"இல்லை. சும்மாதான். அவருக்கு எத்தினை பிள்ளையெணை?"

"அவருக்குப் பிள்ளைகள் இல்லையடா தம்பி !"

ஏனணை பிறக்கேல்லை?"

"அது அப்படித்தான்.... வாயை மூடடா... கேக்கிறார் கேள்வி" என்று ஏசி அவன் வாயில் தட்டி விட்டாள் ஆச்சி.

கோயிலின் உட்பிரகாரத்தைச் சுற்றி இலங்கைஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் வானொலி வர்ணனையாளர்கள் நின்றிருந்தனர். தலையில்

எதையோ கொழுவிக்கொண்டு கோயில் நிகழ்வுகளை வர்ணனை செய்து கொண்டிருந்த அவர்களைப் பார்க்க ஆச்சிக்கு சிரிப்பு வந்து விட்டது. “உவங்கள் ஏன் இதுக்குள்ளையும் வந்து நிக்கிறாங்களோ? எக்கணம் உதிலையும் பொய் சொல்லப்போறாங்கள் போலை... பொய் சொல்லுற வாய்க்குப் பொரியும் கிடைக்காது கண்டியோ...” என்றாள் ஆச்சி.

கோயிலின் எக்காளம். மேளம் வேறு ஆரவாரச்சத்தங்களில் ஆச்சி சொன்னது யார் காதிலும் விழாமல் போய் விட்டது.....

சுவாமி தேர் ஏறி விட்டார். அரோகராச் சத்தத்தோடு வீதிவலம் வந்து கொண்டிருந்தார். தேர் வடக்கு வீதிக்கு வந்த சமயம், வடதிசைப்பக்கமாக இருந்து ஹெலிக்கொப்டர் ஒன்று வந்து, முற்காலத்தில் தேவர்கள் பொழிந்தது போல் பூமாரி பொழிந்தது!

ஆச்சி அண்ணாந்து ஒரு தடவை வானத்தைப் பார்த்தாள். பின்னர் “ கடவுளே! நல்லூர்க்கந்தசுவாமியாரே! உம்மையும் தமதாக்கிப் போட்டினமோ?” என்று கேட்டவாறே நிலத்தில் மயங்கிச் சரிந்தாள்.

ஆச்சிக்குப் பசிக்களைப்பு என்றும்.... சனநெருக்கடியால் வந்த மூச்சுத் திணறல் என்றும்.... ஹெலியைக் கண்டதால் வந்த பயமென்றும் ... பலரும் பலவிதமாய்ப் பேசிக்கொண்டனர்.

ஆச்சிக்கு வந்தது சாதாரண மயக்கம் என்று தான் எல்லோரும் நினைத்தார்கள்.

ஆச்சி தொல்லைகள் இல்லாத ஊருக்குப் பயணப்பட்டு விட்டாள் என்னும் சங்கதி மட்டும் யாருக்கும் புரியவில்லை!

சஞ்சீவி

*15.05.1999*

# 10

## சங்கரியப்பா

சங்கரியப்பாவை எல்லோருக்கும் தெரியும். செக்கச் சிவந்த நிறமும், அந்தக்கால தியாகராஜ பாகவதரின் கிராப்புத்தலையும், வெற்றிலைச்சிவப்பு வாயும், தாண்டித்தாண்டி நடக்கும் அவர் நடையழகும் சங்கரியப்பா என்றவுடன் அனைவரின் நினைவிலும் தோன்றும் அவரது அழகுக் கோலங்களாகும்.

சங்கரியப்பா சுன்னாகச்சந்தைக்குள் தரகுத் தொழில் செய்கிறார். முன்னொரு காலத்தில் அவர் பட்டாளத்தில் சேர்ந்து வேலை பார்த்ததாகவும், பின்னர் அது பிடிக்காததால் விலகி வந்து விட்டதாகவும் பேசிக்கொள்வார்கள். அவரது காலிரண்டும் சவட்டைக்காலாகிப்போனதற்கு பட்டாளத்து உத்தியோகம் தான் காரணம் என்று யாரும் நினைத்தால் அது தப்பு. அதற்கென்று ஒரு சரித்திரம் அவரிடம் இருக்கிறது.

அப்போது ஒரு சமயம் சங்கரியப்பா வீட்டில் அவரது தாயார் எள்ளு விளக்கிக் காயப்போட்டிருந்தாளாம். பக்கத்து வீட்டு தம்பிஐயாவின் கட்டாக்காலி காளை மாடொன்று வந்து, காயப்போட்டிருந்த எள் முழுவதையும் தின்று முடித்து விட்டதாம். அதனால் கோபம் கொண்ட சங்கரியப்பா மாட்டைப் பிடித்துக் கட்டி வைத்து விட்டு தம்பிஐயாவிடம்

நட்ட ஈடு வாங்க நினைத்திருக்கிறார். இவர் மாட்டின் கிட்டப் போக ......அது முட்டி மோதப்பார்த்திருக்கிறது. " பார் பார் உனக்கு செய்யிறன் வேலை" என்று கூறிக்கொண்டே சங்கரியப்பா மாட்டின் கொம்பைப்பிடித்து அதன் மேலே தாவி ஏறி விட்டிருக்கின்றார். மிரண்டு போன மாடு ஓடத்தொடங்கியிருக்கிறது.

சண்டிலிப்பாயிலிருந்து தொடங்கிய ஓட்டம் உடுப்பிட்டி வரை போயும் நிற்கவில்லையாம்.

பார்த்தார்சங்கரியப்பா. இப்படியேபோனால் கடைசியில்வல்வெட்டிக் கடலுக்குள் தான் தன்னைக் கொண்டு போய்த்தள்ளப்போகிறதென்று பயந்தார். அதனால் மாட்டின் வயிற்றை தன் இரண்டு கால்களாலும் இறுக்கிப்பிடித்துக்கொண்டே கைகளால் இரண்டு காதுகளையும் முறுக்கியிருக்கிறார். அப்படிச் செய்துவிட்டால் மாடு நின்றுவிடும் என்ற நினைப்பு அவருக்கு.

ஆனால் மாடு வெருண்டுபோய் ஒரு சுற்றுச்சுற்றவே சங்கரியப்பாவின் தலை மாட்டின் வயிற்றுக்குக் கீழாகவும், கால்களிரண்டும் முதுகின் மேலாகவும் மாறிப்போய் விட்டிருக்கிறது. அதற்காக சங்கரியப்பா தன் கால்களால் பிடித்த பிடியை விட்டு விடவில்லை. அப்படியே கொஞ்சத்தூரம் விடாமல் சவாரி செய்து கொண்டிருந்தார். அதன் பின்னால் தானாகவே கால்கள் சோர்ந்த போதுதான் அவர் கீழே விழுந்துவிட்டார்.

அவர் எப்படியோ தட்டுத்தடுமாறி மீண்டும் ஊர் வந்து சேர்ந்து விட்டார். மாடு வரவேயில்லை.

கால்களுக்கு வைத்தியம் செய்தும் பயன் இல்லை. நோ மாறினாலும் கால்கள் வளைந்து போனது போனதுதான்.

ஆனால் அதன் பின்புதான் சங்கரியப்பா கலியாணம் கட்டியதும், அவருக்கொரு மகள் பிறந்ததும்... சுன்னாகச்சந்தையில் தரகுத் தொழில் செய்யத்தொடங்கியதும் அதற்குப் பிற்பாடுதான்.

சும்மா சொல்லக்கூடாது. தரகுத் தொழிலில் அவருக்கு நல்ல வருமானம் இருந்தது. இரண்டு பக்கமும் பொய்யை மெய்யைச் சொல்லி செல்லாத சரக்குகளையெல்லாம் செல்லக்கட்டிவிடும் பொல்லாக்குணம் அவருக்கில்லை. தம்பையரின் தரமான வாழைக்குலை, கந்தையரின் நல்ல கத்தரிக்காய் என்று தனக்குத் தெரிந்த அறிந்த மனிதர்களுக்கே அவர் தரகு நிற்பார். அதனால் விற்பவரும், வாங்குபவரும் திருப்தியுடன் அவருக்குரிய தரகுக் கூலியைத் தந்து விடுவார்கள்.

சந்தர்ப்பம் கிடைக்கும் சமயங்களில் திருமணம், வீடு வளவு விற்பனை என்றுகூட தரகு நின்று ஒப்பேற்றி தக்க சன்மானம் பெற்றுக்கொள்வார்.

மத்தியானத்துடன் தன் தொழிலை முடித்துக்கொண்டு நன்னி வீட்டுப்பக்கம் போனாரென்றால் அங்கே நன்னியனின் மகள் பூமணி பனங்கள்ளுடன் அவருக்காகக் காத்திருப்பாள். அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரை அவர் பனங்கள்ளைத்தவிர வேறு எதையும் தன் வாய்க்குள் ஊற்றிக்கொண்டதில்லை. எண்பது வயதைக் கடந்தும் அவரது மேனியெழில் இரகசியம் அதுதான்.

குடித்து முடித்து விட்டு அவர் தன் சைக்கிளுடன் ஒழுங்கைக்குள் இறங்கினாரென்றால், எதிர்ப்படுபவர்கள் எல்லோரும் தாமாகவே ஒதுங்கி அவருக்காக வழிவிட்டு நிற்பார்கள். அப்போது அவரது வாயிலிருந்து அரும் பெரும் விஷயங்கள் எல்லாம் வெளியே வந்து விழும்.

பல மரபுப்பாடல்கள் தண்ணீர் பட்ட பாடென அவருக்கு மனப்பாடம். இடையிடையே பல புதுப்பாடல்களைத் தானே இசையமைத்துக் கொள்வார். இன்னும் தேவார திருவாசகங்களோடு பல பழைய புதிய சினிமாப்பாடல்களும் அவரது குரல் வழியாக இனிமையாய்ப் பெருக்கெடுத்தோடும்.

" மன்மத லீலையை வென்றார் உண்டோ?" என்றவர் பாகவதரின் குரலெடுத்துப் பாடத் தொடங்கினாரென்றால் கேட்பவரெல்லோரும் கிறங்கிப்போய் நிற்பர்.

சமயங்களில் ஆங்கிலம் கூட வெகு அழகாகப் பேசுவார் சங்கரியப்பா " மைநேம் இஸ் சங்கரப்பிள்ளை. ஐ. லிவ் அற் சண்டிலிப்பாய்" என்றவர் சொல்லும் போது வெள்ளைக்காரன் அவரிடம் தோற்றுப்போய் விடுவான். " சங்கரியப்பா இதுகளையெல்லாம் எங்கை படிச்சனீங்கள் என்று யாராவது கேட்டால் மட்டும் சும்மா சிரித்துச் சமாளித்து விடுவார்.

இப்படித்தான் இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் ஒரு தடவை நன்னியன் வீட்டிற்குப் போய்த் திரும்பிக்கொண்டிருந்தார் சங்கரியப்பா. அந்தநேரம் ஒழுங்கையில் அமைதி காத்துக்கொண்டிருந்த அவர்கள் அவரிடம் அடையாள அட்டையைக் காட்டும் படி கேட்டிருக்கிறார்கள்.

" எனக்கு ஏன் அடையாள அட்டை? என்னட்டை அது இல்லை!" என்று அலட்சியமாய்ப் பதில் சொன்னார் அவர். அவர்களில் ஒரு சிப்பாய் இவரது சிலுப்பா முடியைப்பிடித்து ஆட்டிக்கொண்டே, " நீ எல்.ரி..ரி.ஈ தானே" என்று அதட்டிய போது, " நோ...... நோ.... மை நேம்

இஸ் சங்கரப்பிள்ளை. ஐ லிவ் அற் சண்டிலிப்பாய்" என்று மறுத்தார் சங்கரியப்பா. சரிவரவில்லை. அவருக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ரை ராசா விடடா என்ரை மயிரை. இதைப்பிடிக்கத்தான் மினக்கட்டுப்போய் அங்கையிருந்து இங்கை வந்து இறங்கினனியோ?" என்று அவர் கேட்ட கேள்வியில் அந்த ஆமிக்கே வெட்கம் வந்து விட்டது. அதனால் தானாகவே அவர் தலையிலிருந்து ஆமியின் கை விலகிக் கொண்டு விட்டது.

எண்பத்து மூன்றில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் முதன்முதலாய் கண்ணிவெடித்தாக்குதல் நடந்தபோது பல இடங்களில் பரவலாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தன.

"சங்கரியப்பா இப்போதைக்கு சந்தைப்பக்கம் போகாதையுங்கோ" என்று எல்லோரும் அவரை எச்சரிக்கை செய்தார்கள். அவரோ கலங்காமல் கொள்ளாமல் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று தேவாரம் பாடிக்கொண்டே சுன்னாகச் சந்தைக்குப் போய்விட்டார்.

கண்ணிவெடித்தாக்குதலின் எதிரொலியாக கொழும்பில் பாரிய இனக்கலவரம் நடந்தது. அப்போது கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு முதன் முதலாக அகதிக்கப்பல் வந்தபோது வந்த தமிழர்களை வரவேற்க அங்கேயும் போய் விட்டார்சங்கரியப்பா. ஒவ்வொரு கப்பலாக வந்திறங்கியவர்களை வரவேற்று, "மை நேம் இஸ் சங்கரப்பிள்ளை ஐ லிவ் அற் சண்டிலிப்பாய். நீங்கள் ஒருத்தரும் இனிக் கொழும்புக்குத் திரும்பிப்போக வேண்டாம். மண்வெட்டியைக் கையிலை எடுங்கோ. எங்கடை நிலத்தைக் கொத்திப் பண்படுத்துங்கோ. பயிர்பச்சையளை உண்டாக்குங்கோ. அதிலை விளையிறதை என்னட்டைக்கொண்டு வாருங்கோ. நான் சுன்னாகச்சந்தையிலை தான் நிற்பன். எல்லாம் வெண்டு தருவன்!" என்று அறிமுகமும் அறிவுரையுமாக சொல்லிக்கொண்டிருந்தார்.

அறுபதில் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சி சத்தியாக்கிரகம் நடத்தியபோது அதை முன்னின்று நடத்தியவர்களில் சங்கரியப்பாவும் ஒருவர். "தூக்கு மேடை பஞ்சு மெத்தை ... அறப்போர் தொடுப்போம்" என்றவர் கோஷமிட்டுக்கொண்டிருந்த போதே பல சப்பாத்துக்கால்கள் அவரை ஏறி மிதித்துக் கொண்டிருந்தன. அதனால் நாரி முறிந்து போனவராய் நாற்பது நாட்களுக்கு மேல் பெரியாஸ்பத்திரிக் கட்டிலில் படுத்துக் கிடந்தார். இப்போதும் அவர் தன் இடுப்பைக் கொஞ்சம் வளைத்துக்கொண்டே நடப்பது அதனால்தான்.

இப்போதெல்லாம் அவர்,

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக் கண்ணீராற் காத்தோம்; கருகத்திருவுளமோ?"

என்றுதான் ஓயாமல் பாடிக்கொண்டிருக்கிறார்.

அது ஏனென்றால், தொண்ணூற்றியைந்தில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சாவகச்சேரிக்குப்போன போது, அவர் தன் ஒரே மகள் வயிற்றுப் பேரனான தமிழ்ச்செல்வனைத்தான் கூடக் கொண்டுபோயிருந்தார். உண்மையில் அவனுக்காகத்தான் - அவனது பாதுகாப்புக்காகத்தான் அவரும் இடப்பெயர்வை மேற்கொண்டிருந்தார்.

சாவகச்சேரியில் இருந்த சமயம் "அப்பு எங்களையெல்லாம் இனி இப்பிடியே வன்னிக்குப் போகட்டாம். நானும் போகட்டோ?" என்றுதான் செல்வன் அடிக்கடி கேட்டுக்கொண்டிருப்பான். வயது இருபதுக்கு மேலாகியும் அவன் ஒரு பயந்த பிள்ளை. இரவில் வெளியே போய் வரவே சங்கரியப்பாவும் கூடப்போக வேண்டும். எங்காவது சைக்கிள் ரியூப் வெடித்த சத்தம் கேட்டாலே அவன் நின்ற இடத்தில் விழுந்து படுத்து விடுவான். ஒருநாள் அவர்கள் தங்கியிருந்த வீட்டில் அடுப்புக்குள் போட்ட தேங்காய்ச் சிரட்டை சீறி எரியவே 'சுப்பர் சொனிக்' வருகிறதென்று பயந்து பங்கருக்குள் ஓடிப்பாய்ந்து காலைச் சுளுக்கிக் கொண்டவன்.

அவன் வன்னிக்குப் போகக் கேட்டது அங்கு போய்ப் பாதுகாப்பாக இருப்பதற்காகத்தான். ஒரு வேளை சங்கரியப்பா அவன் கேட்டதற்கு சம்மதித்திருந்தாரேயானால் இப்போது இப்படி ஒரு வேதனையில் துடித்துக்கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லாமல் போயிருக்கலாம்.

அவரது மகள் பராசக்தி தன் ஒரே மகனைப் பிறந்த வீட்டிற்குள்ளேயே அவரிடம் ஒப்படைத்து விட்டு செத்துப்போய் விட்டிருந்தாள். எழுபத்து நான்கில் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டில் கடைசி நாளில் இடம்பெற்ற கலவரத்தில் மிதிபட்டுச் செத்துப் போனவர்களில் பராசக்தியின் கணவனும் ஒருவன். அவன் இறந்து போன மூன்றாம் நாளில் பிறந்தவன் தான் தமிழ்ச்செல்வன். கணவனை இழந்த ஏக்கத்தோடு பிள்ளைப்பேறும் சிக்கலாகிப்போய் விடவே தான் பராசக்தி தன் உயிரை விட்டாள். இடி தாங்கி போல் துன்பம் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டார் சங்கரியப்பா. பிறந்த குழந்தைக்கு அம்மையப்பனாகி அதை வளர்த்தெடுத்தவரும் அவர்தான். நெஞ்சில் எத்தனையோ கனவுகள் எதிர்பார்ப்புகளோடு தமிழ்ச்செல்வன் என்று அருமை பெருமையாய்ப் பெயர் சூட்டியவரும் அவர்தான்.

தன் தகப்பனின் அவச்சாவு பற்றி வளர வளரத்தான் தமிழ்ச்செல்வன் தானாகவே அறிந்து கொண்டிருந்தான். அதுதான் அவனது பயந்த சுபாவத்திற்கும் காரணமாகிப்போயிற்று. சங்கரியப்பா எவ்வளவோ

முயன்றும் அவனது முதுகெலும்பினை நிமிர்த்த முடியாமல் தவித்தார். அவனுக்கு வீரமூட்டவென்று பாரதியாரின் பாடல்களையெல்லாம் பாடிக்காட்டுவார்.

“பாரதியார் பயமில்லாமல் யானைக்குப் பக்கத்திலை போனதாலைதானே என்ரை அப்பாவைப்போல மிதிபட்டுச் செத்தவர்” என்பான் தமிழ்ச்செல்வன்.

“எடேய் அஞ்சினர்க்கு சத மரணம். அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு ஒரு மரணம். நிமிர்ந்து நில்லடா மடையா” என்பார் சங்கரியப்பா.

என்ன சொல்லி என்ன பயன்? அவன் பயந்தவன் பயந்தவன் தான்!

அப்படிப்பட்ட பிள்ளையை தொண்ணூற்றியாறில் சாவகச்சேரியிலிருந்து ஊர் திரும்பிய போது தொலைத்து விட்டிருந்தார் சங்கரியப்பா. நாவற்குழிப் பாலத்தடியில் இருந்த தற்காலிகப் பொலிஸ் நிலையத்தில் வைத்து தம்மிருவரையும் அவர் பதிவு செய்து பாஸ் எடுத்துக் கொண்டிருந்த போது செல்வன் தெருவோரமாய்த்தான் நின்றிருந்தான். பாஸ் எடுத்து விட்டு வந்து பார்த்தால் அவனைக்காணவில்லை. சங்கரியப்பா பதறிப்போனார். எப்படித்தான் அப்படி மாயமாய் மறைந்து போனானோ? நின்றவர் போனவரிடமெல்லாம் அவன் அடையாளம் சொல்லிக்கேட்டுக் கேட்டு களைத்துப்போனவராய்; அங்கேயும் இங்கேயும் நடையாய் நடந்து தேடித்தேடி சளைத்துப்போனவராய், இன்னதுதான் செய்யவேண்டும் என்றெதையும் அறியாதவராய் அவர் மட்டும் வீடு வந்து சேர்ந்தார். அவன் தானாகவே வந்து சேர்ந்து விடுவான் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தார். வரவில்லை. அதுதான் அவரது இப்போதைய கண்ணீருக்குக் காரணம்.

செம்மணியில் பெரும் மனிதப்புதைகுழி இருக்கிறதென்று முதன் முதலில் இராணுவவீரன் ராஜபக்ஷ சொன்னபோது எல்லோரும் நம்பியது போல் சங்கரியப்பாவுக்கு நம்பவே விருப்பமில்லை. “உவன் பாவி தன்ரை கழுத்துக்குக் கயிறு வரப்போகுதெண்டுதான் மற்றவைக்குக் கயிறு திரிச்சுக்காட்டுறான். உதை நம்பாதையுங்கோ அதுகள் பிள்ளையள் எங்கினையும் அரை உயிர் குறை உயிரோடை கிடந்தெண்டாலும் வந்து சேருங்கள்” என்று மற்றவர்களுக்குச் சொல்வது போல் சொல்லிச் சொல்லி தன்னையும் ஆற்றிக்கொண்டிருந்தார்.

அதன் பின்பு வந்து கொண்டிருந்த செய்திகள் எல்லாம் அவ்வளவுக்குக் கூட நம்பமுடியாதளவுக்கு எல்லோரையும்கலங்கடித்துக் கொண்டிருந்தது.

தமிழராய்ப் பிறந்ததொரு குற்றத்துக்காக மட்டும் காலங்காலமாக தமிழர் பட்டு வரும் அவலங்களை வரிசைக்கிரமமாக மனதுக்குள் பட்டியலிட்டுப் பார்த்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார் சங்கரியப்பா.

இன்று காலையும் வழக்கம் போல எழுந்து அவர் சுன்னாகச் சந்தைக்குப் போகப் புறப்பட்டு விட்டார். 'கறக், கறக்' என்ற சத்தத்துடன் இழுத்துப் பறித்துக் கொண்டிருந்த தன் சைக்கிளில் ஏறி அப்போதே மிதிக்கத் தொடங்கினால் தான் அவரால் உரிய நேரத்துக்கு சந்தையில் போய் நிற்க முடியும். அது அவர் கலியாணம் கட்டிய காலத்தில் வாங்கிய புத்தம்புது "றலி" சைக்கிள் .

அவரது மனதில் பல சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தன. எல்லாம் நேற்று செம்மணியில் தோண்டிய மனிதப் புதைகுழிகள் பற்றியவைதான். அவன் பாவி சொன்னது மாதிரி புதை குழிகள் கிடந்து போச்சுதெண்டால் ....... என்று எண்ணும் போதே அவருக்கு நெஞ்சில் 'திகீர்' என்றிருந்தது. அதனால் வழியெல்லாம் ஏதேதோ வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லிப் புலம்பிக்கொண்டே வந்தார் சங்கரியப்பா.

சுன்னாகம் துர்க்கா தேவி புத்தகக் கடையில் அன்றைய உதயன் இருந்தது.

'இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன என்றது முன்பக்கத்தலைப்புச் செய்தி. அவசர அவசரமாக ஆறு ரூபாய்களைக்கொடுத்து உதயனை வாங்கியவர் மேற்கொண்டு செய்திகளை வாசிக்கத்தொடங்கினார். மேலும் பல புதைகுழிகள் அடையாளம் காட்டப்பட இருக்கின்றன என்பதாய் தொடர்ந்தன செய்திகள்.

சங்கரியப்பாவுக்கு தலை விறைத்தது. அவருக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

" ஏன்ரா ஒருத்தரும் பேசாமல் இருக்கிறீங்கள்? உதுக்குத்தான் நான் அப்பவே சொன்னனான். எல்லோரும் மண்வெட்டியைக் கையிலை எடுங்கோடா எண்டு இப்பவும் சொல்லுறன் எடுங்கோடா கையிலை மண்வெட்டியை......" என்று கடை வாசலில் நின்றே கத்தினார்.

சங்கரியப்பா அன்று சந்தைக்குள் போகாமலே வீடு திரும்பிவிட்டார். மத்தியானம் நன்னியன் வீட்டுப்பக்கமும் போகவில்லை.

ஒரு மூலையில் சுருண்டு போய்க் கிடந்தவரின் உள்ளம் மட்டும் ஊமையாய் அழுது கொண்டிருந்தது.

சஞ்சீவி
*17.07.1999*

# 11

## யாவும் கற்பனையல்ல

“நிறைவேறிய விருப்பம் எப்போதுமே கவர்ச்சியை இழந்து விடுகின்றது.” எங்கேயோ எப்போதோ வாசித்தது என் நினைவுக்கு வந்தது.

வசந்தன் - வசந்தி விடயத்தில் இதுதான் நடந்திருக்கின்றதா? தங்களது பெயர்ப்பொருத்தம் கூட தமது இணைவுக்குரியதோர் அடிப்படைத்தகுதி யாகும் என்றுதான் ஆரம்பத்தில் அவர்கள் எண்ணியிருந்தனர். அதனால் வேகமாக - மிகவேகமாக குறிப்பிட்டதோர் இலக்கை நோக்கி அவர்கள் முன்னேறிக்கொண்டிருந்தனர். ஈற்றில் குறித்த அந்த இலக்கினை அவர்கள் அடைந்த போது ..... திருமணம் என்னும் பந்தத்தினுள் அவர்கள் சிக்கிச் சிறையுண்ட போது... இதுவரையும் தன்னோடு மிக அன்பாகப் பழகிய வசந்தி அவளல்ல என்று வசந்தனும், இதுவரை தன்னோடு மிக ஆசையாகப் பழகிய வசந்தன் அவனல்லன் என்று வசந்தியும் எண்ணத் தலைப்பட்டனர். அப்படி மனத்தாங்கல் கொள்ளத்தக்கதான பல சம்பவங்கள் அவர்களது வாழ்வில் நடந்து முடிந்து விட்டன.

யாரையும் யாரும் காதலித்து விடுவது சுலபமானது என்றும், கலியாணமே சிக்கல் நிறைந்தது என்றும் அவர்கள் இருவரும் தமக்குள் தாமே முடிவெடுத்துக்

கொண்டனர். அதற்காக தாங்கள் மீண்டும் இனிக் காதலர்களாக மாறி விட முடியாதென்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. எத்தனை தான் இழுத்துப்பிடித்தாலும், எவ்வளவு தான் விட்டுக் கொடுத்தாலும் சில சமயங்களில்.....

"தங்கச்சி உம்மைப் பாக்கிறதுக்கு ஆரோ வந்திருக்கினம் பிள்ளை" அவசரத் தகவல் ஒன்று நான் இருக்கும் இடம் தேடிப் பறந்து வந்தது.

சரிதான். இனிக் கதை எழுதின மாதிரித்தான்... பேனாவை மூடி வைத்து விட்டு எழுந்தேன் நான். கதை ஒன்று எழுதிப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற வேண்டும் என்ற என்கனவு தற்காலிகமாகக் கலைந்து போனது. காலமாகிப்போனதோர் எழுத்தாளர் நினைவாக வாரப்பத்திரிகையொன்று சிறுகதைப்போட்டி நடத்துகிறது. பரிசு பத்தாயிரம்!

இந்த நேரம் என்னைத் தேடி யார் தான் வந்திருப்பார்களோ? எனக்கென்று இந்த ஊரில் நெருங்கிய உறவுகள் யாருமில்லை. என் ஊரில் கூட இப்போது யாருமே இல்லை. நான் குடியிருந்த எனது வீடு என் கண் முன்னாலேயே குண்டு விழுந்து இடிந்து போனது. அன்று தான் நான் உடுத்த உடுப்புடன் என் ஊரைவிட்டுப் பிரிந்த நாள். மாவிட்டபுரம் ஸ்ரீ லங்காப் படையினரின் பாதுகாப்பு வலயத்துக்குள் வருகிறது. அதனால் இன்னும் எனக்குப் புனர் வாழ்வு கிட்டவில்லை. என்னை யாரும் மீளக்குடியமர வரும்படி அழைக்கவில்லை. வீடு இருந்த இடத்தில் வெறும் பற்றைக் காடு மட்டும் தான் இருக்கிறது.

" கல்யாணம் பண்ணிப்பார். வீட்டைக் கட்டிப்பார்" என்பது அனுபவமொழி. எனக்காக ஒரு வீட்டைக் கட்டி முடிப்பதற்கிடையில் என் பெற்றோர் பட்ட சிரமம் எனக்குத்தான் தெரியும். அந்த வீடு ஒரு நொடிப்பொழுதில் இடிந்து பொடிப்பொடியான போது..... அந்த ஏக்கமே அம்மாவும் அப்பாவும் தமது இகலோக வாழ்வை முடித்துக் கொண்டு பரலோகம் செல்லக் காரணமாயிற்று. ஒன்பது வருடங்களாக இன்று ஓர் இடம். நாளை வேறிடம் என்று ஓடி ஓடி என் வாழ்க்கையே நாடோடி வாழ்க்கையாய்ப் போயிற்று. " யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று மனதையும் விரிவாக்கம் செய்து பக்குவப்படுத்திக் கொண்டாயிற்று. இனி ஊன்று கோல் தேடும் காலம் வரை இருக்கும் கால்களே போதும் என்றுமாயிற்று.

ஆனால் என்றோ ஒரு நாள் நான் என் மண்ணைச் சந்திக்க வேண்டும். என் இரு கைகளாலும் அதைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும்.

இப்போது என்னைத் தேடி வந்திருப்பவர் யார் என்று பார்க்க வேண்டும்!

என்னிடம் ஒரு நல்ல பழக்கம் இருக்கிறது. யாருடனும் எதைப்பற்றியும் தயங்காமல் பேசத் தொடங்கி விடுவதுதான் அது. வந்திருந்தவர் ஓர் ஆண் மகன். அவரை நான் இதற்கு முன் பார்த்ததே இல்லை. என்னைத் தேடி அவர் வந்ததன் காரணமும் எனக்குப் புரியவில்லை.

“வணக்கம்” என்று அழகு தமிழில் சொல்லி கரங்குவித்து வரவேற்றேன் நான். அவர் அதைக் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ள வில்லை.

“ என்ரை கதையை நீங்கள் எப்பிடி எழுதலாம்?” வந்திருப்பவர் எடுத்த எடுப்பிலேயே என்னை மடக்கி விட்டார். வம்பை விலைக்கு வாங்குவது என்பது எனக்குச் சர்வ சாதாரணமானது, அது இயல்பாகவே எனக்கு கைவந்த கலையானதும் கூட. இப்போது நான் இருக்கும் இடம் தேடி அது வந்திருக்கிறது. என் முன்னே உள்ள இருக்கையில், அது உட்கார்ந்திருக்கிறது. அவர் தன்கையில் கத்தி, கித்தி, என்று கூரான ஆயுதம் ஏதாவது வைத்திருக்கின்றாரோ என்று மிகக்கவனமாகப் பார்த்தேன் நான். இல்லை. அவரைப் பார்க்கவே தெரிந்தது. அப்படியெல்லாம் கொண்டு வரக்கூடிய மனிதர் இல்லை என்பது.

நான் கதை எழுதத் தொடங்கியது எனது பத்தாவது வயதில். கல்கியின் பொன்னியின் செல்வன், சிவகாமியின்சபதம், எல்லாம் அதற்குள்ளாகவே வாசித்து முடிந்து விட்டது. கல்கி என்ன பெரிய கல்கி? இந்தா பார் நானே கதை எழுதுகிறேன் என்று கதை கதையாக எழுதிக் கொண்டிருந்தேன் நான். எழுதியதை என்ன செய்வது என்று தான் எனக்குத் தெரியவில்லை. என்னைக் கைதூக்கிவிட வேண்டும் என்ற நல்லெண்ணம் வீட்டிலுள்ள பெரியவர் யாருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. அதனால் நானாகவே ஒரு முடிவெடுத்து ஈழநாடு, தினகரன், வீரகேசரி எல்லாவற்றுக்கும் எனது கதைகளை அனுப்பி வைத்துக்கொண்டிருந்தேன். சிறு முத்திரை, என் வலப் உள்ளே எனது சிறு கதைகள் அடக்கமாகி விடும். பத்து வருடங்களாக நான் எழுதி அனுப்பிக் கொண்டிருந்த கதைகள் எல்லாம் கிணற்றில் போட்ட கல்லாக எங்கே போய்ச் சேர்ந்தனவோ நான் அறியேன். என் முதல் கதை பிரசுரமானது என்னவோ எனது இருபதாவது வயதில் தான். அத்தனை காலமும் சலிக்காமல் எழுதிச் சாதனை படைத்த வரலாறு என்னுடையது. வெறும் கற்பனையில் கதைகளைப் புனைந்து புனைந்து எழுதி அனுப்பியும் பலன் கிட்டாத நிலையில் கற்பனையும் கலந்ததோர் உண்மைக் கதை தான் எனக்குக் கைகொடுத்துதவியது. அதன் பின்பு தான் “ வானத்தில் இருந்து ஒரு தேவதை இறங்கி பூமிக்கு

வந்தாள்" என்பதான கற்பனைக்கதைகள் காலத்துக்கு ஒவ்வாதவை என்னும் உண்மையும் எனக்குப் புலனாகியது. அதன் பின்னால் நான் எழுதிய ஒவ்வொரு கதையும் பத்திரிகைகளில் தொடர்ந்து பிரசுரமாகின. அப்போது தொடங்கியது தான் எனது பிரச்சினையும். இப்போது அது தேசத்தின் இனப் பிரச்சினைபோல் தீவிரமாக வளர்ந்து கொண்டு போகின்றது. சமாதானத்துக்கான யுத்தம் போல் இடையிடையே இப்படிப்பட்ட சில பிரச்சினைகளும் வரத் தவறுவதில்லை.

எனது கதைகள் பிரசுரமாகும் நேரமெல்லாம் எனக்கு நேரிடும் அனுபவங்களை வைத்தே இன்னும் பல கதைகள் எழுதி விடலாம் என்றிருக்கும்.

அதனால் என் எழுதும் பணி அதிகரித்துக் கொண்டே போகிறது. எழுதும் கரங்களுக்கு ஓய்வு வேண்டாம் என என் அந்தராத்மாவானது எனது ஜீவாத்மாவுக்குள் புகுந்து நின்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது! அதனால் என் கை எழுதிக் கொண்டே இருக்கிறது!!

இப்படி இருக்கையில், என்னை யாரோ ஒருவர் தேடி வந்து எப்படி அப்படி ஒரு கேள்வியைக் கேட்கலாம்? இந்த மாதிரியே நான் உருவாக்கும் என் கதாபாத்திரங்கள் எல்லாம் என்னைத் தேடிவர ஆரம்பித்தால் என் கதி தான் என்னவாகும்?

"எனக்கு உங்களைத் தெரியாது. இதுக்கு முதல் உங்களை நான் பார்த்தது கூடக் கிடையாது. உங்கடை கதை எனக்கு எப்படித் தெரியும்? என்ன மாதிரி நான் அதை எழுத முடியும்?" நான் வெகு நிதானமாகவே அவரைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

வந்தவர் என்னை நம்பவில்லை என்பது அவர் பார்த்த பார்வையிலேயே எனக்குத் தெரிந்தது. அதனால் "நீங்கள் எந்தக் கதையைப் பற்றிக் கேட்கின்றீர்கள்?" என்று கேள்வியை மாற்றிப் போட்டேன் நான்.

அவர் " வந்தாயா வழிக்கு" என்பது போல் என்னைப் பார்த்தார். "திருமணமாம் திருமணம் கதையைப்பற்றித்தான்" என்றார். சொல்லும் போது அவர் பார்வையில் தெரிந்த வெப்பமே என்னைச் சுட்டுப்பொசுக்கி விடும் போல இருந்தது.

ஓ..... திருமணமாம் திருமணம் அது ஒரு நல்ல கதை. அதை மீண்டும் என் மனதுக்குள் அசை போட்டுப்பார்த்தேன் நான். ஆண், பெண் , திருமணத்தில் சாதகப் பொருத்தத்தைப் பார்க்கும் பெரியவர்கள் வேறு பொருத்தங்களைப் பார்க்கத் தவறி விடுகிறார்கள் என்பதையும், திருமணத்தை சீதனம் கொடுத்து வாங்கும் வியாபாரமாக்குபவர்கள்

ஆண் - பெண் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்கத் தவறி விடுகிறார்களே என்பதையும் வெளிப்படுத்தும் கதை அது.

அப்படி நடந்த ஒரு திருமணத்தினால் அக்குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள் அவிழ்க்க முடியாத முடிச்சுக்களாக மாறி விடுகின்றன. அதனால் கணவன் - மனைவி இருவரும் நீதி மன்றத்தின் உதவியுடன் விவாகரத்துப் பெற்றுக் கொள்கின்றனர். கதையில் வரும் சட்டத்தரணி மிகத் திறமையாக வாதாடி தன் கட்சிக்காரப் பெண்ணுக்கு விவாக பந்தத்திலிருந்தும் விடுதலை பெற்றுக் கொடுக்கிறார். அது எப்படியென்றால்... பெண்ணின் கணவனான எதிர்க்கட்சிக் காரர் மணவாழ்வுக்குப் பொருத்தமில்லாதவர் என்று காரணம் காட்டி. அந்தக் கதையைப் போய்....

"நீங்கள் ஒரு சட்டத்தரணியா?" நான் அவரிடம் கேட்டேன்.

"இல்லை"

"கதையில் வரும் பெண்ணுக்கு அண்ணனா?"

"இல்லை"

"கணவனுக்குத் தம்பியா?"

"இல்லை"

"அப்படியெண்டால் பெண்ணுக்குத் தாத்தாவா?" - அப்பாடா ! வந்தவர் சிரித்து விட்டார். இது போதும் எனக்கு.

"நான் தான் அந்தக் கணவன்" சொன்னவரின் முகம் மீண்டும் இறுகிப்போனது.

எனக்கு ஒரே அதிர்ச்சி. இப்படி ஒரு சிக்கல் என்னைத் தேடி இதுவரையில் வந்ததில்லை. இப்போது வந்து விட்டது. பத்திரிகைச் செய்திகளாக வந்திருந்த அந்த வழக்கு விவரங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்ததில் வந்ததுதான் அந்தச் சிறுகதை. கொழும்பில் நடந்த அந்த வழக்கின் செய்திகள் அங்கிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன. அன்று அந்த விவாகரத்துச்செய்திகள் என் கவனத்தைக் கவர்ந்திருந்தன. இன்று அதன் கதாநாயகனே என்னைத் தேடி வந்திருக்கின்றான்.

"கதை எழுதினனான் தான். இல்லை எண்டு மறுக்கேல்லை. அதுக்காக நான் இப்ப என்ன செய்ய முடியும்?" என்னை நான் சமாளித்துக்கொண்டு அவரிடம் கேட்டேன்.

" முன் பின் யோசிக்காமல் எப்படி அதை நீங்கள் எழுதலாம்?" கடுகடுப்புடன் என்னைத் திருப்பிக் கேட்டார் அவர்.

" நல்லா யோசிச்சதாலை வந்தது தான் அந்தக் கதை"

" இந்த நாட்டில் இப்ப எத்தனை பிரச்சினைகள் இருக்கு. அதுகளையெல்லாம் விட்டுவிட்டு என்ரை கதையை நீங்கள் ஏன் எழுத வேணும்?"

" உங்கடை கதையை நான் எழுதினதாலைதானே இப்ப நீங்கள் என்னை வந்து சந்திச்சிருக்கிறீங்கள்?"

" உங்களை நான் சந்திச்சதாலை எனக்கு என்ன லாபம்?"

"அப்ப நட்டம் எண்டு சொல்லுறீங்களாக்கும்"

" நான் இழந்து போனது என்ரை மன நிம்மதியை. அதை உங்களாலை எனக்குத் திருப்பித் தரமுடியுமா?"

" நீங்கள் நிம்மதியை இழந்ததுக்கு நான் தான் காரணமா?"

" இல்லை உங்களைப் போலையே என் வாழ்விலை குறுக்கிட்ட இன்னுமொரு பெண்"

" உங்கடை வழக்குக்கு கோர்ட்டிலை இருந்து சட்டப்படியான தீர்ப்புக் கிடைச்சிருக்கு. கொழும்புப் பத்திரிகைகளிலையெல்லாம் அதைப்பற்றிய செய்திகள் பந்தி பந்தியா வெளி வந்திருக்கு. நான் கதை எழுதினால் மட்டும் தான் குற்றமாக்கும்."

" குற்றமில்லை.... குற்றமில்லை. நான் ஒரு பிடாரிக்கு தாலி கட்டினன் பாருங்கோ அதுதான் நான் செய்த பெருங்குற்றம். அவரது கண்களில் தெரிந்த சீற்றமே என்னைத் தாக்கி அழித்து விடும் போலிருந்தது.

வாக்கு வாதங்கள் திசைதிரும்பிக் கொண்டன. இது ஒரு புதுத் திருப்பம் என்று எனக்கு என் பகுத்தறிவு இடித்துரைத்தது. நான் இதுவரையிலும் காணாத கோணம் தான் அத்திருப்பம்.

"நான் தகுதியில்லாதவன் எண்டதை கல்யாணத்துக்கு அடுத்த நாளேயெல்லோ அவள் சொல்லியிருக்க வேணும்? என்னோடை எட்டு மாதங்கள் குடித்தனம் நடத்தினாளே பாவி? ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் எண்டது மாதிரி கொஞ்சக்காலம் கழியவே தன்ரை சுயரூபத்தைக் காட்டத் தொடங்கி விட்டாள்.

"உன் இனம் சார்ந்தவளை ஒருவன் உன் கண் முன்னாலேயே இழிவு செய்கிறான். விடாதே ஒரு பிடி பிடி!" என்று என் உள்ளம் பரபரத்தது. ஆயினும் வந்திருந்தவரது வஞ்சமற்ற முகமோ "அப்படிச் செய்யாதே. அது தவறு" என்று என்னைத் தடுத்து நிறுத்தியது.

"நீங்கள் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல் நீதிமன்றத்திலை மேன்முறையீடுசெய்திருக்கலாமே.... கொழும்பில் அதுக்கெல்லாம் வசதி இருக்குதே..."

"ஏன் அப்பீல் செய்ய வேணும்? என்னோடை வாழ்ந்தவளே என்னை இழிவு செய்த பின்னாலை!"

"அதுவும் சரிதான். உங்கடை மனைவியே தன்ரை வாயாலை அப்படிச்சொன்னாளா?"

"இல்லை. அவளுடைய புரொக்டர் தான்"

"அவர் தன்ரை வாதத்தை வலுப்படுத்த அப்படிச் சொல்லியிருக்கிறார். அவர் தன்ரை மனித தர்மத்தை மீறுகிறார் எண்டதை அவருக்கே நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கலாம் தானே"

"சட்டத்தரணி மாருக்கு சத்தியமாவது, தர்மமாவது? அவையள் படிச்சதே பொய்சொல்லுறது எப்படி எண்டதைத்தான். அந்தக் கதை இப்ப தேவையில்லை. நீங்கள் என்ன துணிவிலை என்ரை கதையை எழுதினனீங்கள்?"

"அதை நீங்கள் உங்கட கதை எண்டு எப்பிடி இவ்வளவு உறுதியாய்ச் சொல்லுறீங்கள்?"

"எனக்கும் அவளுக்கும் நடந்த சண்டையைக் கூட அப்பிடியே அதிலை எழுதியிருக்கிறீங்கள்?"

"கூடு விட்டுக் கூடு பாய்பவன் தான் எழுத்தாளன் எண்டதொரு கூற்றே இருக்கிறது பாருங்கோ. இன்னாருக்குள்ளே இன்னது தான் இருக்கும் எண்ட உண்மையை ஒரு எழுத்தாளன் எப்படியோ கண்டு பிடிச்சிடுவான். உண்மையான எழுத்தாளரின்ரை இயல்பே அதுதான்"

"இருந்தாலும் அப்பிடியே துல்லியமாய்.... ரேப்பிலை பதிச்சு வைச்ச மாதிரி எழுதியிருக்கிறீங்களே..."

"இப்ப நீங்கள் என்னைப் பாராட்டுகிறீங்களோ? அல்லது.."

"இல்லை ஆராவது உள் ஆளைக் கேட்டு அல்லது ஆரும் வந்து சொல்லித்தான் எழுதியிருப்பீங்களோ எண்ட சந்தேகம் தான் எனக்கு. அதை அறியத்தான் நான் இப்ப உங்களைத் தேடி வந்ததே!

"ஐயையோ ! உங்கடை பக்கத்து ஆக்கள் ஒருத்தரையும் எனக்குத் தெரியாதே!

"நீங்கள் சொல்லுறதை எனக்கு நம்பமுடியாமல் இருக்கு"

என்னை நீங்கள் தாராளமாய் நம்பலாம். நான் யாரையும் நோகப் பண்ணவோ அல்லது என்ரை சுய லாபத்துக்காகவோ எதையும் எழுதிறதில்லைப் பாருங்கோ"

ஆனால் நான் நொந்து போனன். பனையாலை விழுந்தவனை மாடேறி மிதிச்சது போல, அவள் "டிவோர்ஸ்" எடுக்க நீங்கள் கதை எழுதிப் போட்டிருக்கிறீங்கள். வழக்கு விசாரணையளை பேப்பர்கள் எல்லாம் அப்படியப்படியே "பப்பிளிக்" பண்ணினதாலை வந்த வினை. ஒரு குப்பி விஷம் இருந்தாத் தாருங்கோ. எனக்குப் பெரிய உதவியாய் இருக்கும்" வந்தவர் கோபத்தில் வெடித்தார்!

"உங்கடை கோபம் அநாவசியமானது. நான் சொல்லுறதை அமைதியாய் கேளுங்கோ. நீங்கள் கல்யாணத்துக்கு முந்தியே எல்லாத்தையும் யோசிச்சிருக்க வேணும். சகலத்தையும் விசாரித்துப் பார்த்திருக்க வேணும். கட்டின பிறகு விட்டுப் பிரிகிறது மேல் நாட்டுப் பழக்கம். எங்கட தமிழ்ப் பண்பாட்டுக்குச் சரிவராது"

"என்னிலை குற்றமில்லை. புரோக்கர் சொன்னார் அடக்க, ஒடுக்கமான திறம் பொம்பிளையெண்டு".

"புரோக்கர் சொன்னதை நம்பிவிட்டீங்களாக்கும்"

"அவரிலையும் ஒரேயடியாகக் குற்றம் சொல்ல முடியாது. இப்ப இஞ்ச உள்ள நிலைமை அப்ப இருந்த மாதிரி இல்லைத்தானே. அது தான் அடக்க ஒடுக்கமாய் இருந்தவை கூட தறிகெட்டுப்போய்த்திரியினம். முந்தியெல்லாம் அவள் காலமையில வெறும் கோப்பிதான் குடிக்கிறவளாம். இப்ப கொக்கோகோலா தான் குடிக்கிறாள். அப்ப றேடியோவிலை நல்ல பாட்டுக்கள் மட்டும் தான் கேப்பாளாம். இப்ப ரீவியிலை கண்ட குப்பையெல்லாம் போட்டுப் பார்க்கிறாள். இவையெல்லாம் சின்னச் சின்னக் காரியங்கள் எண்டு ஒதுக்கி விட்டாலும்.... சில நடத்தைகளை என்னாலை சகிக்கவே முடியாமைப் போச்சுது. சீதனம் தந்த தாலை என்னை ஏதோ விலைக்கு வாங்கின நாய்க்குட்டி மாதிரியெல்லோ நினைச்சிட்டாள்!"

"ஓ.... சீதனம் அது எவ்வளவு?"

"காசும் சுண்டுக்குளியில் வீடும், அந்த மாடி வீட்டிலை டான்ஸ் கிளாஸ் வைக்கிறன் எண்டு அவள் ஆடின ஆட்டம்.... பெரிய பயங்கரம். தொம் தொம் எண்டு மேல் வீட்டிலை நிண்டு பெடி பெட்டையள் குதிச்ச குதியில் வீடே இடிஞ்சு விழுந்திடும் போலை அதிர்ந்து போகும். ஒரே தலையிடி எனக்கு. வகுப்பை கீழ் வீட்டில் வைக்க முடியாது எண்டு சொல்லிப்போட்டாள். நான் எதைச் சொல்லுறனோ அதுக்கு எதிராகத்தான் எல்லாம் செய்வாள். இண்டைக்குப் பெண்களையே அடியோட வெறுக்கிற அளவுக்கு என்னைக் கெண்டு வந்து நிறுத்திப் போட்டாள். காலம் போகத் திருந்துவாள் எண்டு நினைச்சிருந்தன். என்ரை வாழ்க்கையையே குலைச்சு அழிச்சுப் போட்டுப்போட்டாள்...."

"அப்படிச் சொல்லக் கூடாது. உங்களுக்கு வந்த பிரச்சினைகளாலை இந்த ஊர் உலகத்திலையே நல்ல பொம்பிளையள் கிடையாது எண்டு ஒரேயடியாய் நீங்கள் முடிவு கட்டக் கூடாது பாருங்கோ. நல்லதொரு பெண்ணைத் தேடிக்கண்டு பிடியுங்கோ. வாறவளோடை வெற்றிகரமாய் வாழ்ந்து காட்டுங்கோ. கோர்ட் தீர்ப்போ என்ரை கதையோ உங்களைப் பாதிக்க முடியாது. பாதிக்கவும் கூடாது"

சொல்லி விட்டு அவர் முகத்தைப் பரிவுடன் பார்த்தேன் நான். என் முகத்தில் பதிந்திருக்கும் அனுபவ முத்திரைகளுக்கு நிச்சயம் அவர் மதிப்புக் கொடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அந்தக் கதையை இனியொரு தடவை சென்று அவர் படித்துப் பார்த்தாரேயானால் அவருக்கு உண்மை புரியும்.

அதிலுள்ள மெய்ப் பொருளை மட்டும் அவர் தனக்குரியதாக எடுத்துக் கொள்வாராக!

சஞ்சீவி

*05.06.1999*

# 12

## இது ஒரு தொடர்கதை

கொழும்பு செல்லும் விமானப்பயணிகள் பழைய யாழ். புகையிரதநிலையத்தின் முன்னேயுள்ள தெருவில் வந்து குழுமியிருக்கின்றனர்! விமானப் பயணத்துக்கும் உருக்குலைந்து போயிருக்கும் அந்தப் புகையிரத நிலையத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கக்கூடும் என்று யாராவது சிந்திக்கக்கூடும். அப்படிச் சிந்திப்பவர்கள் இங்குள்ள நிலைமைகளைச் சரிவரத் தெரிந்திராதவர்களாகவே இருந்திருக்கக்கூடும். இப்போதெல்லாம் கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் உள்ள தொடர்பு போல ஆங்காங்கே பல காரியங்கள் நடந்து கொண்டு தானிருக்கின்றன. அதையெல்லாம் ஆய்வு செய்து கொண்டிருப்பதற்கு யாருக்கும் நேரம் இருப்பதில்லை.

எதையோ யாசிக்கும் நிலைமையில் விமானப் பயணிகள் எல்லோரும், அதிகாலை நேரம் தொட்டு அங்கே காத்திருக்கின்றனர். அன்று பலாலியிலிருந்து மூன்று விமானங்கள் இரத்மலானைக்குப் போகின்றனவாம். மூன்று விமானத்துக்குமுரிய பயணிகளும் ஒரே சமயத்தில் வந்து கூடி விட்டனர். மூன்று விமானங்களும் ஒரே நேரத்தில் பறக்காது என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தது. ஆனாலும்

அவசரம்.... பயணத்தின் அவசியம்.... கோயில் திருவிழா போல் அவர்களை அங்கு கூட்டி வைத்து விட்டிருக்கிறது.

பயணிகள், பயணப்பொதிகள், பயணம் அனுப்பி வைக்க வந்தவர்கள் என்று தெரு வீதி நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. அவற்றை ஊடறுத்துக் கொண்டு தனது மோட்டார் சைக்கிளின் மீது வந்து கொண்டிருந்தார் ஒரு இராணுவ அதிகாரி. அவர்தான் இப்போது நடந்துகொண்டிருக்கும் சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவராம். அனைவரும் பயபக்தியுடன் அவருக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்று கொண்டனர்.

ரவீந்திரன் பெருமூச்சு விட்டான்!

அதிகாலை நேரந் தொட்டு அவனும் தான் அங்கே காத்திருக்கின்றான். தொண்ணூறாம் ஆண்டு ரயில் ஓடியநேரம் அந்தப் புகையிரத நிலையத்தில் வந்து இறங்கியவன் தான் அவன். கொழும்பிலிருந்து வேலை மாற்றம் பெற்றுக்கொண்டு ஊர் திரும்பியிருந்தான் அப்போது. சரியாக ஏழு ஆண்டுகள் கழித்து இப்போது தான் மீண்டும் கொழும்பு போகிறான்.

அரச ஊழியனான அவனுக்கு இந்த ஏழு ஆண்டு காலத்திலும் நியாயமாகக் கிடைத்திருக்க வேண்டிய உத்தியோக உயர்வுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது பற்றியதாய் தனது திணைக்களத்திற்குக் கடிதம் எழுதியெழுதிக் களைத்துப் போயிருந்தான் ரவி. இப்போது சந்தர்ப்பம் கிடைக்கவே நேரில் காரியமாற்றும் எண்ணத்துடன் புறப்பட்டு விட்டான்.

ரவி ஒரு எழுத்தாளன். புனை பெயரில் அவன் எழுதும் சிறுகதைகள் பிரபல்யமானவை. ஆனால் தனது ஆத்ம திருப்திக்காக எழுதும் அவன் தன்னை எங்கேயும் பிரபல்யப் படுத்திக் கொண்டது கிடையாது. எழுத்து அவன் தொழிலல்ல. "இருக்கும் நிலையை மாற்றி அமைக்க ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல் பிறர்க்கு உழைக்கும் எழுத்தாளர் கடமை" என்பதான பாரதிதாசனின் வாக்குக்கமைய அவன் எழுதி வருகின்றான். அவ்வளவே!

எழுத்தாளர் என்போர் ஒரு வகையில் பார்க்கப் போனால் மிகவும் பரிதாபத்துக்குரியவர்களே. அவர்கள் படும் அவஸ்தைகள் இருக்கின்றதே... அவற்றை வார்த்தைகளில் வர்ணிப்பது சிரமம். ஒரு சம்பவத்தைக் கண்ணுறும் சாமானியன் ஒருவனுக்கும் எழுதும் ஒருவனுக்கும் எத்தனையெத்தனை வித்தியாசங்கள்.... நடப்பவற்றையெல்லாம் தன் மூளையில் பதித்து, அவற்றைக் கருவாக்கி உருவாக்கி, உள்ளமதில்

சுமையாகச் சுமந்து, எழுத்தாகப் பிரசவிக்கும் அவனது அந்தப் பொல்லாத பிரசவ வேதனை யாருக்குப் புரியும்?

அப்படியான வேதனையுடன் உணர்வுபூர்வமாய்ப் பெற்றெடுத்த அந்தச் சிசுவை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனரா என்றால்... அதுதான் இல்லை. அடிபடாமல் உதை படாமல் உருப்படியாய் தப்பிப் பிழைப்பதே பெரும் காரியம் என்றாகிப் போகிறது. அதுதான் ரவியும் புனை பெயருக்குள் தன்னைப் புகுத்தி வைத்துக் கொண்டிருக்கிறான்.... ஆனால் பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டு போய்விடுவதில்லை என்பதும் அவனுக்குத் தெரியும்!

ஸ்ரீலங்கா நேரம் காலை ஒன்பது மணியென்றது. அப்போது ஒருவர் ஒரு கையில் ஒலிபெருக்கியுடனும், ஒரு கையில் விமானப் பயணிகளின் பெயர்கள் அடங்கிய பெயர்ப்பட்டியலுடனும் அவர்களை நோக்கி நடந்து வந்தார். வாட்டசாட்டமாக இருந்த அவரின் வருகை... இதுவரையும் உடைந்த ரயில் நிலையப்பக்கமாகவே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தைப் பரபரப்படைய வைத்தது. வந்தவர் தமிழர், சிவில் நிர்வாக உத்தியோகத்தரில் ஒருவர். ஒலிபெருக்கியில் முதல் விமானப் பயணத்துக்குரியவர்களின் பெயர்களை அழைக்கத் தொடங்கினார். அழைக்கப்பட்டவர்கள் எல்லோரும் தடை தாண்டியோடும் விளையாட்டு வீரர்களாக வெற்றிகரமாக ரயில் நிலையம் நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள்.

வந்தவர் போய் விட்டார். ரவிக்குரிய விமானம் இரண்டாவது. அடுத்த தடவை ஒலிபெருக்கியுடன் வருபவர் அழைப்பதில் தான் அவனது கொழும்புப் பயணமே தங்கியிருக்கின்றது. முதல் விமானப்பயணிகளின் பயணப் பொதிகள் தீவிரமாகப் பரிசோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அச்சமயத்தில் இரண்டாவது விமானத்துக்குரிய பயணிகள் பெயர்ப்பட்டியலோடும், ஒலிபெருக்கியோடும் பயணிகள் நிற்கும் இடம் நோக்கி வந்து கொண்டிருந்தார் அந்தத் தமிழ் சிவில் நிர்வாக உத்தியோகத்தர். தன் பெயரையும் எதிர்பார்த்து காதுகளைத் தீட்டிக் கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தான் ரவி.

ஒரு விமானத்தில் நாற்பத்து நான்கு பயணிகள் என்றால்... நாற்பதுக்கும் மேற்பட்ட பெயர்கள் அழைக்கப்பட்டு விட்டன. படபடக்கும் நெஞ்சத்துடன் ரவி. கட்டக்கடைசியாக அவன் பெயரும்.... "சுப்பிரமணியம் ரவீந்திரன்..." ரவி தனது பயணப் பையைத் தோளேற்றி நிதானமாக நடந்து சென்று தனக்குரிய வரிசையில் இணைந்து கொண்டான்.

கொழும்பைப் பார்க்கப் போகிறேன் என்பதை விட, பலாலியைப் பார்க்கப் போகிறேன்..... பலாலி போகும் பாதைகளைப் பார்க்கப் போகிறேன் என்னும் ஆர்வமே அவனிடம் மேலோங்கியிருந்தது. அரச பேருந்தில் பயணம் செய்த வேளையில் பாதையெங்கும் அவன் கண்டது இடிந்து தரை மட்டமான கட்டிடங்களையும், வெறும் பற்றைக்காணிகளையும் தான். குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்து பலாலி வரையும் வீடுகள் ஒன்றும் இல்லை, அதனால் மனிதர்களும் இல்லை!

முன்பு வீடுகள் இருந்த சுவடுகள் மட்டும் ஆங்காங்கே எஞ்சியிருந்தன. இத்தனை வீடுகளிலும் வாழ்ந்திருந்த மனிதர்கள் எங்கே? இனம் மறந்தவர்களாய்... பேசும் மொழி மறந்தவர்களாய்... ஊரின் தொடர்பறுந்தவர்களாய்.... அவர்கள் எல்லோரும் எந்தெந்த நாடுகளில் எப்படியெப்படி வாழ்கிறார்களோ தெரியாது. “இனிமேல் வரலாம்” என்று யாரும் அறிவித்தால் கூட, அதை நம்பி அவர்கள் இங்கு வந்து குடியேறச் சம்மதிப்பார்கள் என்று சொல்ல முடியாது. பொட்டிழந்த விதவைப் பெண்ணின் நெற்றியைப் போல பாழ் நிலமாகிப் போயிருந்தவற்றைக் கண்டு ரவி தன் நெஞ்சம் நொந்தான். தமிழ் மண்ணில் பல பகுதிகள் தரிசு நிலங்களாகிப் போய் விட்டன.....

ரவி நல்ல கறுப்பு நிறம். அது அவனது குற்றமில்லை. பரம்பரைக் கோளாறு. தன் நிறமே தனக்கிப்போது பகையென்று அவன் நினைத்தான். அதனால் தானே அவன் ஒரு அரச ஊழியனாக இருந்துங்கூட குடலையே உருவி வெளியே எடுத்து விடுவது போல அவனைச் சோதனை செய்கிறார்கள். ஊரின் சோதனைச் சாவடிகள் தாண்டுவதென்பதும் சுற்றி வளைப்புக்களில் சிக்குப்பட்டு மீள்வதென்பதும் அவனுக்குப் பெரும் அவஸ்தைகளாகிப் போய்விட்டன.

யாழ். ரயில் நிலையத்தில் வைத்துப் பையைச் சோதித்ததோடு சரி. பலாலியின் தகரக்கொட்டகைப் பரிசோதனையில் கொஞ்சமாய்த் தன் கற்பிழந்து போனான் ரவி. அன்று துரியோதனன் சபையில் துகிலுரியப்பட்ட பாஞ்சாலியின் மனநிலை அவனுக்கிப்போது!

எல்லாம் முடிந்து விமானம் ஏற வந்த சமயம் அவன் மன உணர்வுகளில் மாற்றம் இருந்தது. விமானத்தினுள் ஏறி அமர்ந்து கொண்டபோது இயல்பாகவே தன் உடல் சிலிர்த்தான் அவன்.

ஹரி அண்ணனையும் அவர் மகள் ஆரணியையும்..... நந்தகுமாரனையும் நாகேஸ்வரி ரீச்சரையும்.... இன்னும் குட்டித் தம்பியர், ராசன், கந்தன் என்று ஊரில் எத்தனையோ பேரின் உயிரைப் பலி எடுத்தது இந்த

விமானம்தானே. விடிந்தால் பொழுதுபட்டால் வருமோ, வருமோ என்று ஏங்கி நின்று..... வந்தபின்னால் பங்கருக்குள் பாய்ந்து.... கிடங்குகள் கிடைக்காத பட்சத்தில் வெட்டவெளிப்பொட்டலானாலும் விழுந்து படுத்து.... பறக்கும் அந்த உயிர்க் கொல்லிக் கழுகுகளைக் கண்ட மாத்திரத்தே "ஹார்ட் அட்டாக்" வந்து செத்துப் போனவர்கள்தான் எத்தனைபேர்?

விமானம் புறப்பட்டு சரியாக ஒரு மணி நேரத்தில் இரத்மலானை விமான நிலையம் சென்றடையும் என்று அறிவித்தார்கள். தன் கைக் கடிகாரத்தில் சரியாக அரை மணிநேரத்தை முன் தள்ளி வைத்தான் ரவி. இனியென்ன கொழும்பு தானே..... அங்கே அவன் தன் பழைய நண்பர்களைச் சந்திக்கப்போகிறான். எண்பத்து மூன்றின், இனக்கலவரத்தில் அவனையே குறியாகப் பாய்ந்து வந்தவர்களிடம் இருந்து வியூகம் அமைத்துப் பாதுகாத்த தன் சிங்கள நண்பர்களை அவன் நினைவு கூர்ந்தான்.

கவிதை மழை பொழியும் சில்வா, காதல் மன்னன் குணதாச, தடிக்கழுதை சிறிமான... தடிக்கழுதையென்றால் "லொக்கு மாத்தையா" என்று சிறிமானவுக்கு இவனால் அப்போது விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படி அழைக்கும் போதெல்லாம் சந்தோஷமாய்ச் சிரிப்பது சிறிமானவுக்குப் பழக்கம்.

சில்வாவை ரவி சந்தித்த போது இருவருமே பெரும் உணர்ச்சிப் பெருக்கில் சிறுபொழுது திக்கு முக்காடிப் போயினர். கவிமழை பொழியும் சில்வாவுக்கு இவனுடன் சில மொழிகள் தானும் தொடர்பாக பேசமுடியாமல் போனது. "என் ஆருயிர் நண்பனே..... மீண்டும் உன்னைக் காண்போமா என்றிருந்தோம்! ஏழு வருடங்கள்.... இந்த ஏழு வருடங்களும் யாழ்ப்பாணத்தில் எப்படித்தான் வாழ்ந்திருந்தாயோ..." என்றான் சில்வா.

"பனங்கொட்டைகளோடு விளையாடிக் கொண்டிருந்தேன் சில்வா" சில்வா சிரிப்பான் என்று நினைத்துத்தான் ரவி இதைச் சொன்னான்.

சில்வா சிரிக்கவில்லை. "நன்றாக நொந்து போயிருக்கிறாய்" என்று சிந்தனையுடன் சொன்னான்.

உண்மைதான். துரத்தித்துரத்தி விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. தேடித் தேடி ஷெல் குண்டுகள் வந்து விழுந்து வெடித்தன. வீடுகளை இழந்தோம். உறவுகளைப் பிரிந்தோம். உடைமைகளைத் துறந்தோம். ஆறு மாதங்கள் அகதிகளாக அனைவருமே வீதிகளில் அலைந்தோம். ஆயினும் இப்போதும் உயிர் வாழ்கிறோம்... வெறும் நடைப்பிணங்கள் போல...

ரவி கொட்டி முடிக்கும் வரை காத்திருந்த சில்வா, "யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறுவதாகச் சொல்கிறார்களே" என்று கேட்டான்.

அது அங்கே எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை சில்வாவிடம் விபரித்தான் ரவி.

"தமிழர் பிரச்சினை அன்று தொடங்கி இன்று வரை எப்படி எப்படியெல்லாம் திசை மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன பார்த்தாயா... கடவுள் தான் இதற்கொரு வகையில் நல்ல தீர்ப்பைக் கொடுக்க வேண்டும்... எம்மவர்கள் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை" என்றான் சில்வா.

திடீரெண்டு ஷெல் என்றால் என்ன என்றதொரு கேள்வியையும் கேட்டான் அவன்.

யாரும் எதிர்பாராத நேரங்களில் மனிதருக்கு மேலும் - குடியிருப்புக்கள் மீதும் வந்து விழுந்து வெடிக்கும் வெடிகுண்டு அதுவென்றும், நள்ளிரவு நேரங்களில் வீட்டினுள் உறங்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிலரையும் சந்தையில் கூடியிருக்கும் பொது மக்கள் பலரையும் ஒரே குண்டின் சிதறல்கள் எப்படியெப்படிப் பலிகொள்ளும் என்பதையும் ரவி உருக்கமாய் எடுத்துரைத்தான்.

கலங்கிய கண்களுடன் தனது நாட்குறிப்பேட்டை எடுத்து எதையோ எழுதத் தொடங்கி விட்டான் சில்வா. கவிதைதான் எழுதுவான்... வேறு என்ன தெரியும். அவனுக்கு... அவனை இனிப்பிடிக்க முடியாது. ரவி குணதாசவைத் தேடிப் போனான்.

எண்பத்து மூன்று வரையும் தன்னோடு வேலை செய்த குணதாச இப்போது திணைக்களத்தின் உயர் பதவிக் கதிரையொன்றில் அமர்ந்திருக்கக் கண்டான். தனது பதவி உயர்வு விடயம் பற்றியும் அவனோடு தான் முதலில் பேசிப் பார்க்க வேண்டும் என ரவி தன் மனதுள் தீர்மானித்துக் கொண்டான்.

நல்வரவு சொல்லிக் கை குலுக்கி இவனை வரவேற்ற அவன், "யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரைக்கும் பிரச்சினைகள் தீர்ந்து விட்டது தானே" என்றான்.

ஆம்! தீர்ந்து விட்டது. கடைசியாக நடந்து முடிந்த யுத்தத்தில் எண்பதினாயிரம் வீடளவில் உடைந்து நொறுங்கிப் போய்விட்டன. தெல்லிப்பளையிலிருந்து காங்கேசன் துறை வரைக்கும், புன்னாலைக்கட்டுவனிலிருந்து பலாலி வரைக்கும் காணாமல் போய் விட்ட வீடுகளுக்கும், அங்கு இல்லாமல் போய் விட்ட மனிதர்களுக்கும்

கணக்குகள் எதுவும் இல்லை. ஏதோ வகையில் பிரச்சினையைத் தீர்த்து விட்டால் சரி தானே..." ரவி உணர்ச்சியற்ற குரலில் தான் இதைச் சொன்னான்.

குணதாச மௌனமாய் சில நொடிப்பொழுது தலை குனிந்திருந்தான். பின்னர், " தமிழர்கள் எல்லோரும் கொழும்பை நாடி வந்த சமயத்தில் நீ மட்டும் வேலை மாற்றம் பெற்று அங்கே போக வேண்டிய துர்ப்பாக்கியம் வந்து விட்டது...." என்று மெய்யான வருத்தத்துடன் குறைப்பட்டுக் கொண்டான்.

"இல்லையில்லை... என் மக்களோடு மக்களாக நான் பட்டிருந்த துன்பங்கள் அத்தனையையும் விரும்பி வரவேற்றேன். நான்... இனியும் அப்படியே தான் வரவேற்பேன்... என்னால் செய்யக்கூடியதெல்லாம் அவ்வளவே" என்று அவசரமாய் அவன் கூற்றை மறுதலித்தான் ரவி.

"விரைவில் பிரச்சினைகள் தீர வேண்டும். நாங்களும், நீங்களும் நிம்மதியாய் வாழ வேண்டும், என்னால் சொல்லக்கூடியதும் அவ்வளவே!" என்று பிரார்த்தனைக் குரலில் பதிலுரைத்தான் குணதாச.

இருவருமாய் கன்ரீன் இருந்த பக்கமாய் நடந்து கொண்டிருந்த போது, "உன் காதலிகளின் தொகை இப்போது எவ்வளவு? கூடியிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா...? என்று குறும்பாகக் கேட்டான் ரவி. "சேச்சே... நான் அடக்கமானதொரு குடும்பப் பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்து கொண்டு விட்டேன்.... இரண்டு குழந்தைகளும் இருக்கிறார்கள்..." என்றான் குணதாச.

அப்போது ரவியின் முதுகில் யாரோ ஓங்கி அடித்தார்கள். "முதுகில் குத்துவதென்றால் அது சிறிமானதான்...." என்று திரும்பிப் பாராமலேயே சொன்னான் ரவி. "தடிக்கழுதை என்றால் லொக்கு மாத்தையா என்ன? உனக்கெல்லாம் இந்த அடி போதாது. இன்னும் அடிக்க வேண்டும்" என்று சிங்களத்தில் மொழிந்தான் அவன்.

"எனக்கும் அடிக்கத் தெரியுமடா குட்டிப்பிசாசே" என்று சொல்லித் திருப்பி அவனுக்கோர் அடி கொடுத்தான் ரவி. அடிபட்ட இடத்தைத் தடவிக் கொண்டே, "குட்டிப்பிசாசு?" என்ற கேள்விக்குறியுடன் குணதாசவின் முகத்தைப் பார்த்தான் சிறி.

"குட்டிப்பிசாசு.... ஆ.... ஹொந்தமினியா ...ஹொந்த மினியா..." என்றான் குணதாச.

ரவிக்குச் சிரிப்பு வந்தது. சிறிசேன நம்பாத முகபாவனையுடன் "குட்டிப்பிசாசு..." "குட்டிப்பிசாசு" என்று வாய்க்குள் சொல்லிப்

பாடமாக்கிக் கொண்டிருந்தான். இனி யாரும் நம்பிக்கையானவரிடம் தான் அவன் அதற்கான விளக்கத்தைக் கேட்பான்.

இவர்கள்மூவருடனும்கன்ரீனில்சில்வாவும்வந்துசேர்ந்துகொண்டான். அவன் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. தன் குறிப்பேட்டில் உணர்ச்சி மயமான கவிதை வரிகள் எதையாவது எழுதி விட்டு வந்திருப்பான் போலும்... "முடிவில்லாத போரினால் நாட்டில் மனித குலம் முழுவதுமே துன்பக்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறது" என்று கம்மிய குரலில் சொன்னான்.

"யாரையும் யாரும் நம்பத்தயாராயில்லை. அதனால் அழிந்தொழிந்து போய்க் கொண்டிருப்பது பெறுமதி மிக்க மனித உயிர்களே" என்றான். குணதாச.

"உங்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் சொல்லுங்கள் போரை நிறுத்தி விடும்படி" என்று சர்வசாதாரணமாகச் சொன்னான் சிறிமான.

"உன் தலைக்குள் மூளை இருந்தால் நீ இப்படிச் சொல்லியிருக்க மாட்டாய். போரை நிறுத்துவதும், நடத்துவதும், பிரச்சினையைத் தீர்ப்பதும், தீர்க்காமல் விடுவதும் எல்லாம் உங்கள் கைகளில் தான் தங்கியிருக்கிறது" என்று சொல்லி செல்லமாய் அவன் தலையில் குட்டினான் ரவி.

"சமாதானத்தையே நாம் விரும்புகிறோம்" என்றான் சிறி.

"சமாதானத்தை எதிர்பார்த்து ஏமாந்தவர்கள் நாங்கள்" என்றான் ரவி.

அச்சமயம் அவர்களை நோக்கி அந்தத் திணைக்களத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் வந்து கொண்டிருந்தார். மேலும் எதையோ பேச வாயெடுத்த அவனை நோக்கி, அவன் அங்கு வந்து மிக நீண்ட நேரமாகிப் போனதாகவும் உடனடியாக வெளியே வந்து அவனது அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு அவனைத் திரும்பிச் சென்று விடுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

தான் இதுவரையிலும் கண்காணிக்கப்பட்டு வந்திருக்கிறேன் என்னும் உண்மை ரவியின் நெஞ்சைச் சுட்டது. உள்ளே வருமுன் தனது தேசிய அடையாள அட்டையை வெளியே ஒப்படைத்து விட்டு வந்த போது புரியாதவைகள் எல்லாம் இப்போது அவனுக்குப் புரிந்து போனது!

தினக்குரல்
*16.05.1999*

**கொழும்பு விபவி கலாசார மையத்துக்காகவும் தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து எழுத்தாளர் வ. இராசையா அவர்கள் தமது ஆய்வுக்கு உட்படுத்திய கதை.**

மே 16 ஆம் திகதி

## இது ஒரு தொடர்கதை

-சந்திரா தனபாலசிங்கம்-

இந்த நாட்டு இனப்பிரச்சினையைத் தொட்டு நிற்கும் கதை, இது. இரண்டு இனங்களிடையே யும் ஆழமான பகைமை இல்லை, நண்பர்களி டையே இருந்து வந்த அன்புப் பிணைப்பில் தளர்வு இல்லை. இருபகுதியாரும் சமாதான சக வாழ்வையே விரும்புகின்றனர். ஆனால் அவர் கள் ஒன்றுபடுவதை மூன்றாவது சக்தியொன்று தான் விரும்பவில்லை என்பதை இந்தக் கதை வெகு நுட்பமாகக் காட்டி நிற்கிறது.

ரவி என்னும் அரச ஊழியன் ஒருவன், ஏழு ஆண்டுகள் யாழ்.குடாநாட்டில் பணி புரிந்தபின் கொழும்பு சென்று தான் முன்பு பணிபுரிந்த அலு வலகத்தில் தன் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கிறான். அப்போது, பாதுகாப்பு உத் தியோகத்தன் அங்கு வந்து ரவியை அங்கிருந்து வெளியே அனுப்பி விடுகிறான். இது தான் கதை.

விமானப் பயணம் பற்றி ஆசிரியர் கூறும் விவ ரணங்களும், பாதுகாப்பு உத்தியோகத்தர் என் னும் அந்தப் படிமமும் நமக்கு நிறையவே உணர்த்துகின்றன. தனது சிங்கள நண்பர்களி டையே எழுத்தாளர், கவிஞர் என இவர் உரு வாக்கிக் கொண்ட பாத்திரங்கள், அவர்களி டையே காட்டப்படும் நட்புரிமை, அவர்கள் ஓர் எரியும் பிரச்சினைபற்றி மனத்தை உறுத்தாதபடி பேசிக்கொள்ளும் கருத்துக்கள் இவையெல்லாம்

**-வ.இராசையா-**

இந்தக் கதைக்கருவுக்கு வலுவூட்டுகின்றன. பிசிறு இல்லாத இதமான மொழிநடை, சீரான கதையோட்டம் என்பன நயக்கத்தக்கதாக உள் ளன.

நொய்மையான ஒரு கரு வெகு அவதானத்து டன் கதையிலே பதிக்கப்பட்டிருக்கிறது.

# 13

## திறந்தாய் வாழி

ஏறைன் பாதையால் யாழ்ப்பாணம் போகப் போகின்றேன் என்னும் எண்ணமே அவள் மனதில் இனம் புரியாததோர் புது உணர்வாகப் பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருந்தது. வெள்ளவத்தையில் காலி வீதியில் அவள் முன்னால் வந்து நின்றது, அந்தத் தனியார் பேருந்து. பயணிகளுடன் பயணியாக அவளும் அதில் ஏறிக்கொண்டாள். அந்த வாகனம் அவளது பயணம் முழுவதற்குமாய் யாழ்ப்பாணம் வரை வந்துதவப் போவதில்லை என்னும் உண்மை அப்போது அவளுக்குத் தெரியாது.

அவளுக்கு வசதியாய் ஒரு இருக்கை கிடைத்தது. அவள் அதன் யன்னல் ஓரமாக இடம் பிடித்து இருந்து கொண்டாள். தன் இருக்கையின் பக்க கண்ணாடிகள் இரண்டையும் ஒன்றாக்கி முற்றாக முன்பக்கமாய் தள்ளிவிட்டுக் கொண்டாள். இப்போது முன் பக்கத்து யன்னல் இடைவெளியே இல்லாமல் மூடிக் கொண்டது. இவள் பக்கத்து யன்னல் அகலத்திறந்து கொண்டு விட்டது. ஓடும் வண்டியில் இருந்து யன்னல் வழியே வெளியே பார்த்திருப்பது அவளுக்கு மிகவும் பிடித்தமான காரியமாகும்.

'சர்' என்று ஒரு சத்தம். இவள் தன் பக்கம் இருந்து அனுப்பியிருந்த யன்னல் கதவுகள் முன் பக்கம் இருந்து திரும்பி வந்து விட்டிருந்தன. யார் அந்த வில்லன்? மெதுவாய் எழுந்து நின்று முன் இருக்கையை எட்டிப் பார்த்தாள். பத்து வயதுக்குள் தான் இருக்கும். ஒரு பெடிப்பயல் அங்கிருந்தான். "ஒஹோ நீதானா அந்தப் பயல்?" 'சர்' என்று இன்னுமொரு சத்தம். பின்னால் வந்திருந்த யன்னல் கதவுகளை மீண்டும் முன்னால் திருப்பி அனுப்பி விட்டாள்.

இப்போது பெடிப்பயல் எழுந்து நின்று பின்னால் எட்டிப் பார்த்தான். அவனை அவளும் பார்த்தாள் தடிப்பயலில்லை.... பொடிப்பயல் தானே!

அவளது கைக்கடிகாரத்தில் இரவு நேரம் பத்து முப்பது. இது கொழும்பு நேரம். வண்டியும் புறப்படத் தயாராகி விட்டது. வண்டி ஓடத் தொடங்கிய போது அவளது நினைவுக் குதிரையும் சேணம் பூட்டிக் கொண்டு விட்டது. நினைவுகள் சுகமானவை.... நினைவுகள் சுமையானவை.... சிலுவைகள் ..... சிறகுகள்..... கடந்த காலங்கள்.... நிகழ்காலங்கள்....

ஓ, காலங்கள் மாறும் போது.... எத்தனை மாற்றங்கள்? அவள் பார்வையோடு வானத்துச் சந்திரனும் ஓடி வந்துகொண்டிருந்தான். யன்னல் வழியே சுகமான தென்றல் காற்று உள்வந்து அவள் முகத்தோடு மோதியது.

இப்போது முன்பக்கத்திலிருந்து மெதுவாக மிக மெதுவாக பின் நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருந்தன யன்னல் கதவுகள். முன் சீற் பயலுக்கு மூளை மிக நன்றாகவே வேலை செய்கிறது. கதவுகளை ஒரேயடியாய் பின்னால் நகர்த்துவது தான் பிரச்சனை தரும் விடயம் என்பதை உணர்ந்தேயிருக்கிறான். தன் பக்கத்துக் கதவும் அவன் பக்கத்துக் கதவும் நடுநாயகமாக ஒன்றாய்ச் சேர்ந்து வந்து நிற்பதே பிரச்சினைக்குரியதான தீர்வு என்பது இவளுக்கும் புரியாமல் இல்லை. அதனால் நகரும் கதவுகளைக் கண்காணித்தபடியே மௌனமாய் அமர்ந்திருந்தாள் அவள்.

இரு பக்க இடைவெளிகளும் சம வெளிகளாய் வந்தபொழுது, தன் கைகளை முட்டுக்கொடுத்து நகரும் கதவுகளைத் தடுத்து நிறுத்தினாள். அதன்பின்பு ஒரு சிறு போராட்டம். அவன் தன் பக்கத்து இடைவெளியைக் கூட்டிக் கொள்ள முயற்சித்தான். இவள் தன் பக்கத்து இடைவெளியைக் காத்துக்கொள்ள முயற்சித்தாள்.

வண்டி தன் பாட்டில் ஓடிக் கொண்டிருந்தது. பொடிப்பயல் களைத்திருப்பான் போல.... யன்னல் கதவுகள் அப்படியே அசையாமல் நின்றிருந்தன. ஒரு வேளை நித்திரையாகி இருப்பானோ? எட்டிப்

பார்த்தாள்! இல்லை பயல் தூங்கவில்லை. அவன் கையில் சாப்பாட்டுப் பார்சல் இருந்தது. ஒன்றரை லீற்றர் அளவுள்ள 'நெக்டோ' சோடாப் போத்தலும் ஒன்றிருந்தது. அவனது வலது கை உணவை வாய்க்குள் கொண்டுபோய்ச் சேர்த்தது. இடதுகை சோடாவை அதே வாய்க்குள் ஊற்றியது. ஆம்! அவன் இரவு உணவை உண்டு கொண்டிருந்தான்!!

விடியும் நேரம் வவுனியா தாண்டி ஓமந்தையடியில் வந்து நின்றது எங்கள் பேருந்து. "எங்களுக்கு மேற்கொண்டும் பயணம் செய்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதனால் நீங்கள் கொழும்பில் கொடுத்த எழுநூறிலை நானூறை நாங்கள் திருப்பித் தரப்போறம். நீங்கள் எப்படியாவது போய்ச் சேருங்கோ" என்று ஒரு அறிவித்தல் கொடுத்தார் அந்த வண்டியின் நடத்துனர். அவர் யாரிடம், எப்போது, எப்படி அனுமதி கோரி, அது கிடைக்காமல் போனது என்ற விபரம் எதையும் சொல்லவில்லை. யாருமே அவரிடம் இதுபற்றிக் கேட்கவுமில்லை.

அந்தநேரம் சொல்லி வைத்தாற்போல் ஒரு சிறு வாகன உரிமையாளர் அங்கு வந்து நின்றார். "எங்கடை வான் யாழ்ப்பாணம் போகுது, விரும்பியவை வரலாம். ஆளுக்கு எழுநூறுரூபாய் தந்தால் போதும். அவரவரை அவரவர் வீடுகளிலேயே கொண்டு போய் இறக்கிவிடுவம்" என்றார். சிலர் உடனடியாகவே வண்டியை விட்டிறங்கி சிறுவாகனம் நோக்கி நடையைக் கட்டினர். எத்தனையோ தூரம் பின் தள்ளி நின்றது அந்த வாகனம். பொதி சுமக்கும் கழுதைகள் போல் அதை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர்... தத்தமது பயணப்பொதிகளுடன் பயணிகள் சிலர். அந்தச் சிலருள் அவளும் இருந்தாள். அந்தப் பயலும் இருந்தான்.

பத்துப்பேர் மட்டும் அமரக்கூடிய பின்னிருக்கைகளைக் கொண்ட அந்த 'டொல்பின்' வான் உள்ளே பதினான்குபேர் அடைக்கப்பட்டனர். அத்தனை பேரின் பயணப் பொதிகளும் ஓர் ஓரமாய்க் குவித்து வைக்கப்பட்டன. இருவர் இருக்கக்கூடியதான இருக்கையில் மூவர் இருந்தனர். இப்போது இவளுக்கு அருகிலேயே அந்தத் தம்பிப் பயலும் அமர்ந்திருந்தான். இவளைப் பார்த்து மிக அந்நியோன்யமாய் ஒரு புன்னகைகூடப் புரிந்தான்.

அந்தப்பயல் கையில் இப்போதுதிருந்தது ஒன்றரை லீற்றர் அளவுள்ள ஒரு 'கொக்கோ கோலா' சோடாப் போத்தலாகும்.

'எட்டு அப்பிள் நூறு ரூபாய்.... அப் பிள்.... அப்பிள்..." கண்டி வீதியோரம் அப்பிள் பழ வியாபாரிகள் அறை கூவிக் கொண்டு திரிந்தனர். ஒரு கிசு, கிசுப் பையில் போட்டுக் கட்டப்பட்டிருந்தவை எட்டு

அப்பிள்களாகும். அதில் ஒரு அப்பிள் பையை தம்பிப் பயல் வாங்கினான். பையின் முடிச்சை அவிழ்த்தான். ஒரு பழத்தை அதில் இருந்து எடுத்தான்.

அந்தப் பயல் தன் முற்பிறப்பில் நிச்சயமாய் ஒரு முயற்குட்டியாகவே இருந்திருப்பான். அவனது முன்வாயின் மேற்பற்கள் முயற் பற்கள் போலவே இப்பிறப்பிலும் அதிசயமாய் வந்து வாய்த்து விட்டிருந்தன. அவன் தன் பற்களால் அப்பிள் பழங்களை 'நறுக், நறுக்' எனக் கடித்துச் சாப்பிடத் தொடங்கினான். இடையிடையே கொக்கோகோலாவையும் குடித்தான்.

நீண்ட நேரக்காத்திருப்பு, வாகனங்கள் நகரும் அறிகுறிகள் இல்லை. "எட்டரை மணிக்குத் தான் அவையள் துலாவைத் தூக்குவினம்" என்றார் வாகன உரிமையாளர். நேரமோ பத்தரையையும் தாண்டி விட்டிருந்தது. இப்போது தான் வாகனங்கள் மெல்ல மெல்ல ஊரத் தொடங்கியிருந்தன. இப்போது பயலின் கையில் இருந்தது ஒரு முழு 'செவன் அப்' சோடாப் போத்தல்.

"ஆராவது பற்றரிகள் ஏதாவது வைச்சிருந்தால் ஒளிச்சுப்போடுங்கோ. இல்லையோ செக்கிங்கிலை பறிகுடுப்பீங்கள்" என்றார் வாகன ஓட்டுநர். அவரது எச்சரிக்கைக் குரல்யாரையும் பாதித்தாக இல்லை. ஆனால் தம்பிப்பயல் மட்டும் தன் தாயாரைப் பார்த்து திருட்டு விழி விழித்தான். அவனது 'திரு திரு' விழிகளைக் கண்டு, "தம்பி ஏதோ வைச்சிருக்கிறார்..... உதாலை எங்கடை பயணமே தடைப்படப்போகுதடா தம்பி" என்றார் வான் ஓட்டுபவர். " இருக்கிறதையெல்லாம் தூக்கி எறியடா மோனை, நாங்கள் நேர காலத்தோடை ஊர் போய்ச் சேருவம்" என்றார் இன்னுமொருவர்.

தம்பி முதலில் தன் காற்சட்டைப் பையில் இருந்து நான்கு சிறிய பற்றரிகளை எடுத்தான். அதன் பின்பு ஷேர்ட் பொக்கற்றிலிருந்து, தாயின் கைப்பையிலிருந்து, பயணப்பையின் ஓரத்திலிருந்து..... பற்றரி பற்றரியாக வெளியே எடுத்து விட்டுக்கொண்டிருந்தான் அவன். இது கார் ஓட, இது கரடிப்பொம்மைக்கு, இது பிளேனுக்கு, இது பொக்கற் ரேடியோபாட" எடுக்க எடுக்க அவன் தன் வாயால் விளக்கமும் சொல்லிக்கொண்டிருந்தான். ஒன்றா இரண்டா மறைத்து வைக்க?

"ஒப்பந்தம் எதற்காக? அப்பிள் பழம் தின்பதற்காக!" வண்டிக்குள் இருந்து யாரோ பகிடி விட்டார்கள்.

"அம்மா எனக்கு எப்ப பதினெட்டு வயது முடியும்?"

தம்பிப்பயல் தன் தாயிடம் கேட்டான்!

சங்குநாதம்

*15.07.2002*

# 14

## யோசிக்க வேண்டியுள்ளது

"உன்னைப் போலவே உன் அயலவரையும் நேசி" என்பது பைபிள் வாசகம். என்னை மிகவும் கவர்ந்த வாசகம் இது. ஆயினும், நான் நேசித்தாலும் என் அயலவன் என்னை நேசிப்பதாக இல்லை. தன் எல்லைக் கதியால்களை அடிக்கடி என் காணிப்பக்கமாகத் தள்ளித் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறான். என்னைத் தன் அயலவனாக ஏற்று அவன் என்னை நேசிக்காத பட்சத்தில் நான் மட்டும் அவனை எப்படி நேசித்துக் கொண்டே இருப்பதென்று எனக்குத் தெரியவில்லை.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றது. சிறு வயதில் நானும் என் சகோதரர்களும் ஒரு மாமரத்தைச் சுற்றி ஓடிப்பிடித்து விளையாடுவது வழக்கம். அந்த மரம் எனது அயலவரின் வேலியோரமாக எங்கள் வளவிற்குள் நின்றிருந்தது. சில காலம் என் படிப்பு விடயமாக நான் வெளியூர் போய் வந்த பின் பார்த்தால், அந்த மாமரத்தைச் சுற்றி ஒரு எறும்பு கூட ஓட முடியாமல் அது அந்த அயலவனின் வேலியோடு ஒட்டிக் கொண்டு நின்றிருந்தது.

அம்மாவிடம் நான் இது பற்றி விசாரித்தேன். அதற்கவள் வருடா வருடம் அவன் எல்லைக்

கதியால் போடுகின்றான் என்றும், இனி ஒரு சமயம் மாமரம் அவனது வளவிற்குள்ளேயே போய்விடக்கூடுமென்றும் இதற்குத்தான் செய்யக் கூடியது என்ன? என்றும் கேள்வி எழுப்பினாள். உண்மைதான். அம்மா வெறும் நோஞ்சான். பூஞ்சை உடம்பு.... யாரையும் எதிர்த்துப் போராடும் தைரியம் இல்லை.

அப்பாவைக் கேட்டால் அவர் ஒரு தத்துவ ஞானி போல தத்துவ மழை பொழிகிறார். வரும் போது கொண்டு வந்ததும் ஒன்றுமில்லையாம். போகும் போது கொண்டு போவதும் எதுவுமில்லையாம்!! இருக்கும் போது எல்லோருடனும் சமாதானமாக வாழ்வதே நல்லதாம்.

இப்படியே போய்க்கொண்டிருந்தால் ஒருகாலத்தில் எமது வீட்டின் முற்றத்தில் அவன் வேலி வந்து நின்றாலும் நிற்கும்.... இதற்கு நான் என்ன செய்வது என்று யோசித்தேன். யோசித்து யோசித்து என் தலையில் சூடேறியதுதான் மிச்சம். அதனால் அப்பா சொன்ன சமாதான வழியில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடிந்தால் நன்றாக இருக்கும் என நினைத்தேன். அது ஒரு நல்ல யோசனையாக எனக்குத் தென்பட்டாலும், அடுத்த பிரச்சினை என் முன்னே பூதாகரமாக உருவெடுத்து நின்று என்னைப் பயமுறுத்தியது. பூனையின் கழுத்தில் மணி கட்டுவது யார்?

பக்கத்து வீட்டு மாமாவைப் பார்த்தசாரதியாக்கி என் அயலவனிடம் தூது போக வைக்க முடியுமா என ஆராய்ந்து பார்த்தேன். அதில் உள்ள சிக்கல் எதுவென்றால், நான் அறிந்த மட்டில் மாமாவுக்கு இதுவரையிலும் சகுனி வேலை செய்து மட்டும் தான் பழக்கம். கௌரவமாய் இதுவரையில் அவர் எந்தவொரு காரியமும் செய்தது கிடையாது. இருந்தாலும், முயற்சி செய்து பார்ப்பதென்று முடிவு செய்துவிட்டேன்.

மாமாவைப் பிடித்து வைத்து பிரச்சினையின் சகல அம்சங்களையும், பல பரிமாணங்களிலும் வைத்துத் தெளிவுபடுத்தினேன். இனிமேல் இப்படியான எல்லை விரிவாக்கம் செய்யும் செயல்களைச் செய்யவேண்டாம் என்றும், இது கடவுளுக்கே அடுக்காத செயலாகும் என்றும் என் அயலவனிடம் எடுத்துக் கூறுமாறு அவரிடம் வேண்டிக் கொண்டேன். ஒரே ஊர், ஒரே இடம் என்று வாழும் நாங்கள் இப்படியான செயல்களின் காரணமாய் பிரிந்து வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விடுவோம் என்பதை அவனுக்குப் புரியும் படி செய்யுமாறு கேட்டுக்கொண்டேன்.

மாமா வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டார். பிரச்சினைக்கு தீர்வாக இரண்டிலொன்று இன்றே ஒரு கை பார்த்து விடுவதாகக் கூறிக்கொண்டு புறப்பட்டு விட்டார். அவரைப் பார்த்தால் சமாதானமாகப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்புறப்பட்டவராகத் தெரியவில்லை.

போன மாமாவைக் காணவில்லை. எனது அயலவன் வீட்டிலிருந்து பூசை பண்ணும் ஐயரின் சகஸ்ரநாம அர்ச்சனை போல் ஒரு சத்தம் மட்டும் இடைவிடாது கேட்டுக்கொண்டு இருந்தது. உற்றுக் கேட்டதில் அயலவனின் மனைவி யாரையோ திட்டிக் கொண்டிருக்கிறாள் என்பது மட்டும் எனக்கு விளங்கியது. எனது பாட்டன், பூட்டன், கொப்பாட்டன் காலத்தைய என் மூதாதையரெல்லோரையும் இழுத்து வைத்து வசைபாடிக்கொண்டிருந்தாள் அவள். என்றோ ஆவிகளாகப் போய் விட்டிருக்கும் அவர்கள், அவளுக்கு என்ன தீங்கு செய்திருக்கக் கூடும், என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

காலையில் அவர்கள் வீட்டுக்கு சமாதானத் தூதுவனாகச் சென்ற மாமா மாலையில் தான் மீண்டும் என்னைத் தேடி வந்தார். அயலவன் வீட்டிலிருந்து நேராகக் கசிப்புக் காய்ச்சும் கந்தப்பன் வீட்டுக்கு ஒரு அலுவலாகத் தான் சென்று விட்டதாகவும், அதன் காரணமாகவே தன்னால் உடனடியாக அவனை வந்து சந்திக்க முடியாமல் போனதாகவும் சொன்னார். கந்தப்பன் வீட்டுக்கு அவர் என்ன அலுவலாகச் சென்றிருப்பார் என்பதை நானே ஊகித்துக்கொண்டேன்.

மாமா தனது முன்னாள் ஜகதலப்பிரதாபங்களையெல்லாம் முழக்கியடித்து விட்டு, இந்நாள் தூது விபரத்தையும் வெளியிட்டு வைத்தார். இனிமேல் எல்லையை விஸ்தரிக்கும் வகையில் கதியால்கள் எதையும் நாட்டக் கூடாதென்றும், மீறினால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அவர்களுக்குத் தான் எப்படி எடுத்துரைத்தேன் என்ற தன் சாமர்த்தியத்தையும் என்னிடம் அளந்து கொட்டினார்.

அவர் சொன்னது போல் எப்படி, எத்தனையாம் பிரிவுச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க முடியும் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. சட்டத்தரணிகளுடான பழக்கம்கூட யாதொரு வகையிலும் எனக்குக் கிடையாது. அதனால், சமாதானமாகப் பேசவே நான் அவரை அங்கு அனுப்பியிருந்தேன் என்பதை அவருக்கு நினைவூட்டினேன். அதற்கவர், சண்டை மூலமும், சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்று சொன்னார்.

காற்றுடன் கலந்து விட்ட என் மூதாதையரெல்லோரையும் என் அயலவள் திட்டித் தீர்த்ததின் மர்மம் எனக்கிப்போது துலங்கி விட்டது. மாமாவின் சமாதான முயற்சியும் அன்றே சமாதியாகிப் போனது.

சில நாட்கள் கழித்து என் அயலவன் வேலிப்பக்கமாக நின்றிருந்த பச்சைப்பசேலென்றே எனது மாமரம் பட்டுக்கொண்டு வந்தது. அதன்

காரணம் எதுவென்று எனக்குப் பிடிபடவில்லை. எனது சிறுபராயம் தொட்டு என் உணர்வுடன் இரண்டறக் கலந்து போயிருந்த அந்த மரம் காய்ந்துகொண்டு போவதையிட்டு பரிதவித்துக் கொண்டிருந்தேன் நான். அது முற்றிலும் காய்ந்து போனபோது அதை விறகுக்காக வெட்டி எடுப்பதற்கான முயற்சிகள் வீட்டில் நடந்து கொண்டிருந்தன.

சிறு வயதில் அம்மாமரத்தில் தான் அனேகமாய் என் பொழுதெல்லாம் கழிவது வழக்கம். மரத்தில் ஏறி இருந்து கொண்டு அங்கு வாழும் உயிரினங்களையெல்லாம் ஆராய்ந்து கொண்டிருப்பேன். ஒரு மரத்தில் எத்தனை வகை வகையான உயிரிகள் வாழ்க்கை நடத்துகின்றன என்பது எனது அப்போதைய பிரமிப்புகளில் ஒன்றாகும்.

அதிலும், கடும் சுறுசுறுப்பாக ஓடித் திரியும் 'முசுறு' இருக்கிறதே. அது பற்றியதானஅதிசயம்தான், எனக்கு அப்பொழுது பெரிய உலக அதிசயமாக இருக்கும். அதை என் கையில் ஏறவிட்டுக் கடிக்கும் வரை காத்திருப்பேன். என்னைக் கடித்த கையோடு அது செத்துச் சுருண்டு போய்விடும். எனது பாட்டியிடம் தான் இந்த முசுறு விடயம் பற்றியதான சந்தேகத்தை என்னால் கேட்க முடிந்தது. என் பாட்டியிடமிருந்து பல வகையான பேய்க் கதைகளை நான் கேட்டிருக்கிறேன். பயமாக இருந்தாலும் அவற்றைக் கேட்பதில் எனக்கொரு தனி ஆனந்தம். வழுக்கியாற்று நீளத்துக்கு இரவில் கொள்ளிவாய்ப் பிசாசுகள் நடந்து திரிவதிலிருந்து, இளம் பெண்ணுக்கு பேய் பேன் பார்த்த கதைபோல பல் பேய்க்கதைகளை பாட்டியின் வாயிலிருந்து வரவழைத்து கேட்டிருக்கிறேன்.

முசுறு பற்றியும் பாட்டிக்குத் தெரிந்திருந்தது. முசுறு ஒரு தடவை கடவுளைக் கண்டு விட்டதாம். தன்னிடம் ஒரு வரம், ஒரே ஒரு வரம் கேட்கும் படி கடவுள் அதனிடம் சொன்னாராம். முசுறு அவசரத்தில் நாக்குழறி 'மனிதனைக் கடித்தால் நான் செத்துவிட வேண்டும்' என்று கேட்டு விட்டதாம். ஆனால், அது கேட்க நினைத்தது நான் கடித்தால் மனிதன் செத்து விட வேண்டும் என்பது தானாம்.

நல்ல வேளை முசுறுக்கு நாக்குழறிப் போனது என்று அப்போது நான் நினைத்துக் கொள்வேன். இல்லையென்றால் எத்தனை மனிதர்கள் செத்துப்போயிருப்பார்கள்.

பட்ட மரத்தை விறகுக்காக வீட்டவர்கள் வெட்டி எடுத்து விட்டனர். மரத்தை வெட்டியவர்கள் கர்ம சிரத்தையாக அதன் வேரையும் அகழ்ந்தெடுத்துத் தந்து விட்டிருந்தனர். அந்த இடத்தில் இப்போது

ஆட்லறி ஷெல் ஒன்று விழுந்து வெடித்த அளவு பெரிய பள்ளம் உருவாகியிருந்தது.

பிறிதொரு நாளில் நான் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து என் அயலவன் புதிதாக வேலி போட்டிருந்தான்.

வேலியின் சில எல்லைக் கதியால்கள் அந்த மாமரம் இருந்த பள்ளத்தினுள்ளேயும் போடப்பட்டிருந்தன.

என்னால் பொறுக்க முடியவில்லை. இந்தத் தடவை தூது எதுவும் இல்லாமல் நானே அவனிடம் சென்று அவன் தவறினைச் சுட்டிக் காட்டினேன்.

தான் எதையும் எப்போதும் எங்கேயும் சரியாகவே செய்வது வழமையென்று அவன் வாதாடினான்.

தொண்ணூற்றி ஐந்தில் வலிகாமத்தை விட்டு இடம் பெயர்ந்து நடந்து கொண்டிருந்தபோது..... என் அயலவனும் எங்களோடு வந்து கொண்டிருக்கிறானா என்று தான் நான் கண்காணித்துக்கொண்டிருந்தேன். நான் போய் அவன் அங்கிருந்தால் எங்களுக்கென்று ஒரு குழி நிலம் கூட எஞ்சியிருக்காதே என்ற கவலைதான் எனக்கு. நல்ல வேளை கூடவே வந்து விட்டான். எங்களுடன் கூடவே நடந்து வந்து.... சாவகச்சேரியில் எங்கள் கொட்டில் அருகிலேயே அவனும் கொட்டில் போட்டு குடியிருந்த பின்னர் தான் நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

அங்கு எல்லைக் கதியால் போடும் வேலை இல்லையென்பதால் இருபகுதியினரும் ஒற்றுமையாகவே கொட்டில்களில் குடியிருந்தோம். ஆறு மாதங்கள் கழித்து வலிகாமம் திரும்பலாம் என்ற நிலை வந்ததும் எப்படியோ என் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு எனக்கு முதல் நாளே அவன் குடும்பத்துடன் ஊர் திரும்பி விட்டான்.

எங்கள் வீட்டிலிருந்த விலையுயர்ந்த பாத்திர பண்டங்களெல்லாம் அவன் வீட்டுக்கு இடம் மாறி விட்டன. நாங்கள் வீடு திரும்பிய நேரம் நல்லவன் போல எங்களை வரவேற்று உபசரித்தான். எங்கள் பெரிய வானொலிப் பெட்டி அவன் வீட்டில் பாடிக்கொண்டிருந்ததைக் கண்டும் காணாதவன் போல் நான் இருந்தேன்.

அயலும், தாயும் ஒன்று என்று என் தாயார் அடிக்கடி சொல்வதுண்டு. ஒரு தாய் குற்றம் செய்யும் போது பிள்ளை அதைப் பெரிது படுத்திக் கொண்டிருப்பதில்லை!

சாவகச்சேரியில் குடியிருந்த அந்த ஆறு மாத காலங்களிலும் என் அயலவர்களுக்கு ஏதோ ஒரு வகையிலான ஞானம் பிறந்திருந்தது என்றுதான் நினைக்கிறேன். அந்த நேரம் அவன் அடிக்கடி என்னிடம் "எங்கடை தமிழ்ச்சனங்களின்ரை குணமே சரியில்லை தம்பி.... அதாலைதான் இவ்வளவு தொல்லையும். போட்டியும், பொறாமையும்.... சேட்டையும், பகிடியும் வலுத்துப்போச்சுதடா. வயல் வரம்பை வெட்டித் தள்ளிப் போடுறதும்.... அடுத்தவன்ர காணிக்குள்ளை எல்லையைப் போட்டு காணி பிடிக்கிறதும்..... உந்தக் கேடுகெட்ட வேலையாலைதான் எல்லாத்தையும் இழந்துபோய் இப்படி வந்து அலையுதுகள். ஒற்றுமையாக இருந்திருந்தால் எப்பவோவெண்டு தள்ளியிருப்போமே" என்று சொல்வான்.

அவனை இந்த இடப்பெயர்வு திருத்தி எடுத்து விட்டதென்றும் இனிமேல் அவன் ஊர் திரும்பினாலும் எல்லைப் பகுதிக் காணிகளைக் கவர ஒருபோதும் நினைக்க மாட்டான் என்றும் அப்போது நான் போட்டது தப்புக்கணக்காகி விட்டது.

இப்போது அவன் பக்கத்தில் ஒன்றிரண்டைத் தவிர மீதியுள்ள எல்லைக் கதியால்கள் எல்லாம் அழிந்து போய்விட்டிருந்தன. அதுவே அவனுக்குப் பெரும் வாய்ப்பாகப் போய்விட்டிருந்தது. மீண்டும் அவன் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டான்.

இந்தத் தடவை நான் மிகவும் விழிப்புடன் இருந்தேன். ஏற்கனவே எமது வீட்டுக் காணியை அளந்து நில அளவையாளரைக் கொண்டு வரைந்து வைத்திருந்த வரைபடத்தைக் கொண்டுபோய் அவனிடம் காட்டினேன். அதில் எனது காணியின் பரப்பளவுகள் மிகத் துல்லியமாக பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அளவில் குறைவு ஏற்படுமிடத்து பழி அவன் மீதே வந்து விழும் என்றும் அவனை எச்சரித்தேன். வருடா வருடம் எல்லைக் கதியால் போடும் செயலைக் கைவிட்டு விடும்படியும் ..... ஒரே தடவையில் அவை உய்யுமாறு சரிவரப் போடும்படியும் அவனுக்கு அறிவுறுத்தினேன். அயலவன் நியாயமாக நடந்துகொள்ளாத பட்சத்தில் சமாதானமாக வாழ்வதில் அர்த்தம் எதுவும் இல்லையென்றும் அவனுக்கு இடித்துரைத்தேன் நான்.

அதற்கவன் நான் அதுபோல் எத்தனை படங்களைக் கீறி வைத்திருந்தாலும் தனக்கு கவலையில்லையென்றும், வேலியோரம் எமது பக்கமாக பாரிய நிழல் மரங்கள் நிற்பதாகவும், அதனால் தான் தன்னால் போடப்படும் சிறு தடிகள் உய்வதில்லை என்றும், அவற்றையெல்லாம் வெட்டி எடுத்து விடுமாறும் எனக்கு ஆலோசனை சொன்னான்.

அவன் சொன்னதில் உள்ள உட்கருத்து என்னைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அப்படியே செய்தால் அதன் விளைவுகள் எவ்வகையினதாக இருக்கும் என்னும் பயங்கரம் எனக்குப் புரிந்தபோது..... இனி மேலும் நான் என் அயலவனை நேசிப்பது பற்றி யோசிக்கத் தொடங்கினேன்!

தினக்குரல்
*30.03.2003*

# 15

## யோகினி

தன் அன்னையின் மடியில் அவள் வந்துதித்த பொழுதில் இவ்வுலகில் பெரும் அதிசயங்கள் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. அவள் வரவு பற்றியதான எதிர்வுகூறல்கள் எதனையும் தேவதூதர்கள் வானில் தோன்றி அறிவிக்கவுமில்லை. நல்லதோர் குடும்பத்தில், ஒரு நற்குணப் பெற்றோருக்கு, நடுமகளாக வந்து பிறந்தாள். அவள்தான் நடுநிலை தவறாத நல்ல பெண் மகளான பாமினி.

"புத்தம் புது மலரே குறுநகை புரியும் வெண்ணிலவே" அவள் வரவில் மகிழ்ந்து அன்னையவள் அவளுக்காய்ப் பாடிய தாலாட்டு இது. பாமினி வளர வளர அவளது அன்னையின் தாலாட்டின் வடிவங்களும் மாறுபட்டன. தேவாரமாக, திருவாசகமாக, கிறிஸ்தவ கீதங்களாக, நாட்டுப் பாடல்களாக பல வழிகளிலும் அவளுடன் இசையால் மொழி பேசினாள் அவள் அன்னை.

பாமினி குழந்தைப் பருவத்தைக் கடந்தாள். அச்சமயத்தில் அம்மாவின் இசையுடன் கதையும் வந்து இணைந்து கொண்டது. கதைகள் மூலம் நல்லுணர்வுகளையும், உணவுடன் சேர்த்து

ஊட்டினாள் அம்மா. புராண இதிகாசங்கள், மகான்களின் வாழ்க்கை வரலாறுகள் எல்லாம், அவளுக்கு பாடங்களாகப் போதிக்கப்பட்டன. உபகதைகள், உலக நீதிக் கதைகள் பல அவளுக்கு உபதேசங்கள் ஆயின. பழங்கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் என்பன அவளது நெஞ்சில் பதியப்பட்டன.

நிழல் போல் எந்நேரமும் தன்னையே சுற்றி வந்த தன் பிரதிப் பெண்குழந்தைக்கு, அவள் அன்னையால் உவந்தளிக்கப்பட்ட நற்பிரசாதங்கள் அவையாகும். அதன் காரணமாக மொட்டாக இருந்த அவளது அறிவுத் தாமரையானது அழகாக மலர்ந்து மணம் வீசியது.

அவள் வளர்ந்தாள். அவளது அறிவும் வளர்ந்தது.

அ-ம்-மா என்று அவள் எழுத்துக் கூட்டிப் படிக்கத் தொடங்கிய காலத்திலேயே அவளது நூல் வாசிப்பும் ஆரம்பமாகி விட்டது. பாமினி தன் கையில் கிடைக்கும் நல்ல புத்தகங்கள் எதனையும் விட்டுவைக்க மாட்டாள். அத்தனையும் வாசித்து விடுவாள்.

அன்றாடம் புதினத்தாள்களையும் தவறாமல் வாசிப்பாள். நல்ல வானொலி நிகழ்ச்சிகள், செய்திகள் என்பனவற்றையும் கேட்பாள். நல்ல திரைப்படங்கள் அப் படங்களின் பாடல்கள் என்பனவும் அவளது இரசனைக்குரியதானது. அதனால் நாளுக்குநாள் அவளது பொது அறிவு வளர்ச்சிபெற்று வருகிறது.

பாடசாலையிலும் பாமினி தன் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிவுள்ள நல்ல மாணவியாக இருக்கின்றாள். சக மாணவிகளுடன் வீண்வார்த்தைகள் எதனையும் பேசி அவள் நேரத்தை வீணடிப்பதில்லை. மிகவும் புத்திசாதுர்யமாகப் பாடங்களைக் கற்பாள். அதனால் வகுப்பில் முதல் மாணவி அவள் தான். பாடசாலையின் விளையாட்டு நிகழ்வுகள் அனைத்திலும் அவள் தவறாமல் பங்குபற்றுவாள். அவளது அறிவுத்தாகத்துக்கும், உடலாரோக்கியத்துக்கும் உறுதுணையாயிருப்பது அவளின் பள்ளிக் கல்விதான்.

பாமினியின் வீட்டருகே ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. காலையில் கோயிலின் பூசைக்கான ஆயத்தமணி ஒலித்ததுமே பாமினி அங்கு பிரசன்னமாகிவிடுவாள். ஆலயக் குருக்களுக்குப் பூசைக்கான பூக்களை ஆய்ந்து கொடுத்தும், கோயிலில் உள்ள குப்பைகளைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்தும் இறைபணியாற்றுவாள். அழகு தமிழில் தேவார திருவாசகங்களை ஓதி இறைவணக்கம் செய்வாள். பூசை முடிந்ததும்

குருக்களின் கையால் விபூதிப் பிரசாதம் பெற்றுத்தான் அவள் வீடு திரும்புவாள்.

ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளையில் தனது துயில் நீங்கி எழுந்து விடுவாள் பாமினி. எழுந்தவுடன் தன் அன்னையையும், தந்தையையும் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்குவாள். அவர்களின் ஆசி பெற்ற பின்னால் தான் தனது அன்றாடக் கடமைகளையெல்லாம் அவள் செய்யத் தொடங்குவாள். இந்த நல்ல பழக்கம் அவள் சாயி நிலையமொன்றில் கற்றுவரும் பாலவிகாஷ் கல்வியினால் வந்ததாகும். இந்த பாலவிகாஷ் கல்வித்திட்டம் என்பது பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவினால் இயற்றப்பட்ட கல்வித் திட்டமாகும். உலகின் அனைத்துக் குழந்தைகளுக்கும் உரியதாக அவரால் தயாரிக்கப்பட்ட மனித மேம்பாட்டுக்குரியதான கல்வித்திட்டம் இதுவாகும்.

"ஓம் பூர் புவஸ்வஹ

தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்"

எனும் காயத்திரி மந்திரத்தாள் அவளது ஆன்மீகக் கல்விக்கு வழி காட்டுகிறாள். இந்த ஆன்மீகக் கல்வியானது பாமினியை சிறந்ததோர் நிறை மகளாகவும், சமூகநலன் பேணும் நற்பண்புள்ள ஒரு யோகினியாகவும் வளர்த்தெடுக்கும் என்பது திண்ணம்.

வைரப்பனைமரம்
2008
(பாமினி)

# 16

## ஞானோதயம்

அன்னை மண் தன் துயில் நீத்தாள். "பொல பொல" வென்று புதிய பொழுதொன்று வந்து புலர்ந்தது. "தக தக" வென்று தன் தங்கப் பொற்கிரணங்களை அள்ளி வீசிக்கொண்டு உதயசூரியன் கிழக்கே வந்துதித்தான். நீர்நிலைகளின் தாமரை மொட்டுக்கள் அவன் வரவு கண்டு மகிழ்ந்து "கல கல" வென்று தம் இதழ் விரிக்கத் தொடங்கின. பல நறுமண மலர்களும் "கம கம" வென்று மணம் பரப்பி மலர்ந்து கொண்டிருந்தன. மரங்களின் பச்சை இலைகளில் ஒட்டிக் கொண்டிருந்த பனித்துளிகள் எல்லாம் "பள பள" வென்று வெண் முத்துக்களாய் மின்னி ஒளி வீசிக் கொண்டிருந்தன. ஆலய மணிகள் எல்லாம் "ஓம் ஓம்" என முழங்கி ஓங்கார நாதம் எழுப்பின. இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று புள்ளினங்கள் எல்லாம் "சள சள" வென்று கதை பல பேசிப் பறந்தன.

இவையெல்லாம் இப்பூவுலகில் புது உயிர் ஒன்று வந்து பிறக்கப் போகிறது என்பதைக் கட்டியம் கூறும் மங்கல நிகழ்வுகள் போலவே தோன்றின.

அன்றுதான் பிறந்திருந்தது அந்தச் சின்னப் பூச்சியும்! அது பிறந்த விதம் யாருக்கும் தெரியாது. தனது சிறு மண்ணளவு கண்களை அகல விரித்து இவ்வுலகைப் பார்த்தது பூச்சி.

பரந்து கிடந்த பூமியும் விரிந்து கிடந்த ஆகாயமும், அகன்று கிடந்த கடற்பரப்பும், அடர்ந்து கிடந்த கொடுங்காடும், உயர்ந்து கிடந்த மலைத் தொடர்களும், எல்லாமே அதன் கண்களுக்குத் தெரிந்தன. இன்னும் பச்சைப்பசேல் என்றிருந்த வயல்வெளிகளும் மரம் செடி கொடிகளும் அதன் கருத்தினைக் கவர்ந்தன.

"இவையெல்லாம் யாருக்காக? எனக்காகத்தானே?" எனச் சொல்லி இளநகை செய்து இறும்பூதெய்தியது அந்தச் சின்னப் பூச்சி.

தன் ஈரச் சிறகுகள் காயும் வரை காத்திருந்த அது, மெல்ல நகர்ந்து.... நிலத்தில் ஊர்ந்து.... பின் எழுந்து பறந்தது. அன்று மலர்ந்த மலர் ஒன்றின் மீது வந்து அமர்ந்தது. அந்தப் புத்தம் புதிய மலரில் நிறையவே தேன் ஊறியிருந்தது. தேனைக் கண்ட பூச்சியின் சிறு நாவிலும் நீர் ஊறியது. அதைக் குடிப்பதற்காக ஆசையுடன் அது தன் சிறு கொம்புகளை நீட்டியது. அந்தநேரம் பார்த்து தேனீ ஒன்று திடீரென்று அவ்விடம் வந்து சேர்ந்தது.

"யார் அது?"

பூச்சியின் காதுகள் செவிடுபடும்படியாக கத்திச் சத்தமிட்டு அதட்டியது தேனீ.

"நான் தான்" என்றது சின்னப் பூச்சி.

"நான் தான் என்றால்.... நீயென்ன இந்த நாட்டுக்கே அரசனோ?"

"அரசனுமில்லை ஆண்டியுமில்லை!"

"வேறு யார்?"

"நான் ஒரு சின்னப்பூச்சி"

"இங்கே உனக்கு என்ன வேலை?"

"என் பசி போக்க இந்தப் பூவில் தேன் குடிக்க வந்திருக்கிறேன்!"

"பூ எனக்குரியது. உடனடியாக இவ்விடம் விட்டுப் போய்விடு"

"இயற்கையின் படைப்பு எல்லோருக்கும் சொந்தமானது.

"பூக்களின் தேன் எல்லாம் தேனீக்கே சொந்தமானது அறிந்துகொள் அற்பபூச்சியே!"

"தேனீக்கு மட்டும்தான் தேன் சொந்தமானதென்று சாசனம் எழுதி வைத்தவர் யார்?"

"என்னைப் படைத்த இறைவன்!"

"என்னையும் அவர்தானே படைத்தார்?"

"இருக்கலாம்..... ஆனால் பூ என் உடைமையானது."

"எனக்கும் அதில் உரிமை உண்டு."

"ஒன்றும் இல்லை. இக்கணமே இவ்விடம் விட்டு ஓடிவிட்டால் உயிர் பிழைப்பாய். இல்லையோ இருந்த இடம் தெரியாமல் தொலைந்து போவாய்!"

"............................"

சின்னப் பூச்சி மௌனமாகியது.

தேனீயுடன் நேருக்கு நேர் நின்று போராடி வெல்லும் உடல் வலிமை தனக்கு இல்லை என்பது அதற்குத் தெரிந்திருந்தது. அதனால் மெல்ல அப்பூவை விட்டு விலகிச் சென்று, ஒரு புல் நுனியின் மேல் அமர்ந்து கொண்டது. "இந்த வானமும், பூமியும் - காடும், மலையும் - கடலும், வயலும் - பூவும், கனியும் எதுவுமே எனக்குச் சொந்தமானதில்லையா?" இப்படி அது தன்னைத்தானே கேட்டுக் கொண்டது. தன் நிலை குறித்து அது மிகவும் வேதனையடைந்தது. நெடுநேரமாய் தலையைக் குனிந்திருந்தபடி நீண்ட சிந்தனையில் ஆழ்ந்திருந்தது அந்த சின்னப் பூச்சி.

தேனீ வெற்றிக்களிப்புடன் பூவைச் சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரமிட்டது. பின்பு பூவின் மேல் போய் இருந்தது. தன் இரு கொம்பையும் நீட்டி தேன் அருந்தத் தொடங்கியது.

அந்த நேரம் பார்த்து அவ்விடம் நோக்கி எங்கிருந்தோ ஒரு சிட்டுக்குருவி பறந்து வந்தது. யாரும் எதிர்பாராதவிதமாய் தேனீயைப் "பட்" என்று கௌவிப் பறந்துபோனது.

சின்னப்பூச்சி இவற்றையெல்லாம் கண்கொட்டாமல் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தது.

"ஓ..... என்ன விந்தை இது? எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும் என்னும் உண்மையிதாமோ? மின்னல் போல் வந்து மறையும் இவ்வுலகின் உயிர்வாழ்வில் யாருக்கும் எதுவும் சொந்தமானதில்லை, இவ்வுலகில் எவருமே நிலையாக உயிர் வாழ்ந்ததுமில்லை, இப்படி தனக்குள்தானே சொல்லித் தெளிந்து கொண்டது அந்தச் சின்னப் பூச்சி.

சத்தியதரிசனம்
*2002*

# 17

## கல்லும் கதை சொல்லும்

**நா**ன் ஒரு கல். கல் என்றால் சாதாரணமான கல் அல்ல. உயரமான பெரியதொரு உருண்டைக் கல். என் தோற்றம் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது. என் வளர்ச்சி பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. ஆனாலும் யாராலும் அசைக்க முடியாத அளவுக்கு உருண்டு திரண்டு போயிருந்தேன்.

" புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி

பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி

கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்"

என்பது சிவபுராணம். அந்த வகையில் என் தோற்றமும் இறைவன் திருவருளால் நிகழ்ந்திருக்கக் கூடும் என்று தான் நான் நம்புகின்றேன். என் தோற்றமும் வாழ்வும் தமிழ் மண்ணில் தான் என்பதில் தனிப்பெருமை எனக்குண்டு. தலைசிறந்த தமிழ்ப் பண்பாடுள்ள மூன்று தலைமுறை மனிதர்களோடு கூடி வாழ்ந்திருந்தேன். இன்னும் பல தலைமுறை மனிதர்களோடும் கூடி வாழ்ந்திருப்பேன்.

தங்கம்மா அப்பாச்சியை உங்களில் யாருக்காவது தெரியுமோ? தெரியாது தானே! ஆனால் எனக்குத் தெரியும். வெறும் கல்லாக இருந்த என்னை உபயோகமானதோர் உரக்கல்லாக மாற்றி எடுத்துவிட்ட பெருமை அந்தத் தங்கம்மா அப்பாச்சிக்கேதான் உரித்தாகும்.

ஆயிரத்து எண்ணூறாம் ஆண்டுகளின் பிற்பகுதிக் காலம் அது. பதினெட்டு வயது இளம் பெண்ணாக இருந்தாள் தங்கம்மாள். அவள் வீட்டின் பின் வளவில் நின்றிருந்தது ஒரு விளாத்தி. அந்த விளாமரத்தின் கீழே தான் நான் தோன்றியிருந்தேன்.

"கல்லிலே கலை வண்ணம் கண்டான்" என்று பாடினான் ஒரு கவிஞன். அதுபோல என்னிலும் ஒரு வண்ணம் காண நினைத்தாள் தங்கம்மாள். அதனால் என்னையும் ஒரு சிற்பி மூலம் செதுக்கி எடுத்துவிட்டாள். "கோயில் சிலையாக" என்று நினைக்கிறீர்களா? இல்லை! நெல் குற்றும் உரல் கல்லாக!!

எப்போது நான் ஒரு உரல்கல்லாக மாறினேனோ அப்போதிருந்து தங்கம்மாள் நெல் குற்றி எடுப்பது என்னிடம் தான். கருங்கல் உரலில் நெல் குற்றுவது ஒன்றும் பெரிய சாதனையல்ல. ஆனால் என்னைப்போல ஒரு வெறும் கல் உரலில் நெல்லைக் குற்றி அரிசி எடுப்பது என்பது பெரும் சாதனையல்லவா!

சுமார் அறுபது சென்ரிமீற்றர் உயரத்தில் நூற்றியிருபது சென்றிமீற்றர் பருமனில் நான் இருந்தேன். மஞ்சளும், மண்ணிறமும் கலந்த வண்ணம் என்னுடையது. அதிலே சிக்கல் இல்லாமல் சிதைவுகள் இல்லாமல் கோதி எடுக்கப்பட்டிருந்தது உரல் குழி. என்னைக் கண்டவர் எல்லோருமே வியந்துபோயினர்.

உரிய பருவத்தில் திருமணம் செய்து கொண்டாள் தங்கம்மாள். ஏழு குழந்தைகள் அவள் வயிற்றில் வந்து பிறந்தனர். அவர்களுள் தன் கடைக்குட்டி மகன் மீதுதான் அவளுக்குப் பாசம் அதிகம். அதனால் அவனுக்கே என்னையும், தன் வீட்டையும் அன்பளிப்பாகக் கொடுத்து விட்டு இறையடி சேர்ந்தாள். அந்த மகன் தனக்குப் பிடித்த மகள் ஒருத்திக்கு என்னையும், வீட்டையும் கொடுத்து விட்டு மறைந்தார். அரும்பொருளான நான் அவர்கள் வீட்டு முற்றத்திலேயே காலம் காலமாக குடியிருந்து வந்த கதை இதுதான்.

காலச் சக்கரம் சுழல்கின்றது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தியெட்டு. வெள்ளையர்கள் எங்கள் நாட்டை விட்டுப் போய்விட்டார்கள். இலங்கைக்கும் சுதந்திரம்

கிடைத்தது. ஆனால் அதன் பின்பு உள்நாட்டு யுத்தம் தொடங்கிவிட்டது. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைந்து போனது. பழைய காலத்தில் இருந்த நிம்மதியும், சந்தோஷமும் பறிபோய்விட்டது. அந்தக்காலம் மீண்டும் வருமா? இந்த ஏக்கம்தான் பாருங்கோ எனக்கு!

நாட்டில் நடந்துகொண்டிருக்கும் யுத்தம் மனித உயிர்களைப் பலி எடுத்துக்கொண்டிருக்கிறது. முடிவில்லாமல் தொடரும் கொடுமையான யுத்தம் காரணமாக மக்கள் தம் உயிர்களோடு, உடைமைகளையும் இழந்துகொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் பாரம்பரியங்களும், பழம்பெருமைகள், பண்பாட்டுக்கோலங்கள் என்பனவும் அழிந்துகொண்டே போகின்றன.

போர்க்கால வன்முறைகள் என்பது முதலில் குலைப்பது குடும்ப அமைப்புக்களைத்தான். அடுத்ததாக அது ஊரைக்கெடுக்கும். பின்பு நாடெங்கும் பரவும். இதுவே தொடரும் போது அந்த வன்முறைகள் என்பது இந்த உலகெங்கும் பரவிவிடும். பின் ஒருநாளில் அதுவே இந்த முழு உலகமும் அழிந்துபோய்விடக் காரணமாகிவிடும்.

ஆகவே தான் நான் சொல்கிறேன். புதியதோர் உலகம் வேண்டும். அங்கே புற்களும், கற்களும் கூட நிம்மதியாக வாழவேண்டும் என்று.

உலகத்தின் தூக்கம் கலையுமா - கல்லின்
உள்ளத்து ஏக்கம் தொலையுமா?

யுகமாயினி
*01.10.2007*

# 18

## யுக அவதாரன்

ஸ்ரீராம் சிறந்ததோர் சாயிபக்தனாவான். அவன் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் நிலையம் ஒன்றில் ஒரு சேவாதளத் தொண்டனாகப் பணி புரிகிறான். தன் சேவைகள் தேவைப்படும் நேரங்களில் எல்லாம் அனைவருக்கும் முன்வந்து உதவுவது அவனது வழக்கமாக இருந்தது.

சத்யம் - தர்மம் - சாந்தி - பிரேமை - அஹிம்சை என்னும் சாயி தத்துவங்களில் அசையாத நம்பிக்கை கொண்டவன் ஸ்ரீராம்.

ஸ்ரீராமுக்கு தான் ஒரு தடவை புட்டபர்த்திக்குச் செல்லவேண்டுமென்றும், அங்கு போய் சாயி நாதனை நேரில் தரிசனம் செய்ய வேண்டுமென்றும், பெருவிருப்பொன்று மனதில் இருந்தது. ஆனால் அதற்குரியதான பொருள்வசதி அவனிடம் இல்லை.

அதனால் ஒவ்வொரு நாள் இரவிலும் நித்திரைக்குப் போகமுன்னர் அவன் பகவானை வேண்டிப் பிரார்த்திப்பான். "பகவானே! உங்களை நான் நேரில்

கண்டு தரிசிப்பதற்கு எனக்கு அருள் செய்ய வேண்டும்" என்று மனமுருகிக் கேட்பான்.

பகவானின் கருத்துக்கு இவன் பிரார்த்தனை எட்டியது. ஸ்ரீராம் தன் பக்தனாக இருப்பதற்குத் தகுதி பெற்றவன்தானா என்பதைப் பரிசோதிக்க அவர் விரும்பினார். அதனால் ஒருநாள் அவன் கனவில் வந்து தோன்றினார். இதுவரையிலும் படங்களில் மட்டுமே அவரைக் கண்டுவந்த ஸ்ரீராம் கனவில் முழு உருவாய்க் கண்டபோது பயந்து போய்விட்டான். அதனால் பதறிப்போய் அலறிவிட்டான்.

"ஏன் மகனே அலறுகிறாய்?" பகவான் கேட்டார்.

"எனக்குப் பயமாக இருக்கிறது சுவாமி!" ஸ்ரீராம் சொன்னான்

"ஏன் நான் உனக்குப் பூச்சாண்டி காட்டுகின்றேனா"

"என்னைக் கோபமாகப் பார்க்கிறீர்கள் சுவாமி!"

"இல்லையே! நான் உன்னை அன்பாகத்தானே பார்க்கிறேன்!"

"எனக்கு அப்படித் தெரியவில்லையே சுவாமி!"

"உன் பார்வையில் கோளாறு இருக்கிறது!"

"என் கண்பார்வை நன்றாகவே உள்ளது!"

"உன் மனதில் குற்றம் இருக்கிறது!"

"என் மனம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது சுவாமி!"

"பக்தர்களின் மனதை மட்டும் தான் நான் பார்க்கிறேன் மகனே"

"அவர்களின் வடிவங்கள் உங்கள் கண்களுக்குத் தெரிவதில்லையா?!"

"உருவங்களை விட நல்ல உள்ளங்களே உயர்வானவை!"

"உள்ளத்தால் மட்டும் உங்களைத் தொழுதால் போதுமா சுவாமி?"

"ஆம் உண்மையான இறைஞ்சுதலுடன் எனது நாமத்தை ஒரு தரம் நீ

"உச்சரித்தாலே என் அனுக்கிரகம் உனக்குக் கிடைக்கும் ஸ்ரீராம்"

"காணிக்கைகள், பழங்கள், மலர்கள், பிரசாதங்கள்...."

"நிறுத்து, நிறுத்து. அழுகிப்போகும் கனிகளையும் வாடி உதிரும் மலர்களையும் மதிப்பற்ற காசுகளையும் உன்னிடம் கேட்டுப் பெறுவதற்கு நான் இங்கே வரவில்லை தெரிந்துகொள்!"

"வேறு எதைப் பெற வந்தீர்கள் சுவாமி?"

"பளிங்கு போன்ற நிர்மலமான நீர் நிரம்பிய உனது மனம் என்னும் தடாகத்தில், மலர்ந்து மணம் பரப்பும் உன் உள்ளுணர்வு என்னும் கமலமலரைப் பெறவே வந்திருக்கிறேன் மகனே!"

"என் சேவைகள் உங்களுக்குத் தேவையற்றனவாய்த் தோன்றுகின்றதா சுவாமி?"

"தூய்மை - கட்டுப்பாடு - நன்னடத்தை எனப்படும் நற்கனிகளையே நீ முதலில் எனக்கு சமர்ப்பிக்க வேண்டும் ஸ்ரீராம்"

"உங்களை என் கனவில் கண்டு பேசிய அற்புதத்தை நாளை நான் அனைவருக்கும் அறிவிக்கலாமா சுவாமி?"

"அற்புதங்கள் எனது இயல்புகள். என்னில் ஒரு பகுதி அவை. என் அமானுஷ்யத் தன்மையை விளக்கும் நிதர்சனங்கள். மனிதர்களால் அதன் மர்மத்தைப் புரிந்து கொள்ள முடியாது"

"அற்புதமான விளக்கம் சுவாமி"

"உன் பாராட்டு எனக்கு வேண்டாம் ஸ்ரீராம்!"

"வேறு எதனை நான் தரவேண்டும் சுவாமி?"

"உன் அன்புதான் எனக்கு வேண்டும்"

"அதனை நான் எப்படி உங்களுக்குத் தருவது சுவாமி?"

"அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு காட்டு. அது என்னையே வந்தடையும்.

"நான் உங்களை வந்தடைய என்ன வழி சுவாமி?"

"நான் என்பது என்ன?"

"என் உடல் என்று நினைக்கின்றேன்"

"அதேதான். அழியப்போகும் உடல் பெரியதா? அழிவில்லாத ஆத்ம ஞானம் பெரியதா?"

"ஆத்மாவே உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பது"

"நல்லது. சத்தியம் என்றால் என்ன சொல் பார்ப்போம்?"

"என்றும் அழிவற்ற இறைசக்தியே சத்தியம்!"

தர்மம் என்றால் என்ன?"

"மனித வாழ்வில் அறநெறியே தர்மம் எனப்படும்"

"சாந்தி என்பது?"

'பரிபூரணமான அமைதியே சாந்திநிலையாகும்!"

"பிரேமை என்றால்?"

"அன்பு"

"அன்பு என்றால் என்ன?"

"அஹிம்சையாகும்!"

'என்னை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாயே ஸ்ரீராம். இனியும் நீ என்னைப் புட்டபர்த்தி வந்துதான் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறாயா?"

"ஆம் உங்களை பிரசாந்தி நிலையத்தில் கண்டு தரிசிக்க வேண்டும் சுவாமி!"

" என் ஸ்தூல சரீரத்தைப் பார்க்க விரும்புகிறாயா?"

" ஆம் சுவாமி!"

" என் உடல் என்பது நானா?" என் மனித உருவம்தான் நான் என்னை உனக்கு அறிவிக்கும் சாதனமா?"

இல்லை. சனாதன சாரதி நூல்தான் உங்கள் அவதார மஹிமையை உலகுக்கே அறிவிக்கும் சாதனம் சுவாமி?"

" தவறு விடாதே ஸ்ரீராம். என் வாழ்க்கைதான் என்னை இவ்வுலகுக்கு அறிவிக்கும் சாதனமாகும்! அதுதான் நான் மனிதகுலத்துக்கு வழங்கும் செய்தியுமாகும்.

" நீங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர் சுவாமி?"

" நான் அனைத்து மதங்களையும் சார்ந்திருக்கிறேன்;!"

" ஒரு தனிமனிதனை வழிநடத்த அத்தனை மதங்களும் தேவைப்படுகின்றனவா சுவாமி?"

"நதிகள் பலவானாலும் சங்கமம் கடலில்தான், பாதைகள் பலவானாலும் உயர்ந்த ஞானஜோதியை அடையுமிடம் ஒன்றேதான். ஒரு மனிதன் ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தாலே போதும்!"

" எத்தனை தடவைகள் பாதைகள் மாறலாம்?"

"ஒரு தடவையும் மாறக்கூடாது. ஒருவன் பிறக்கும் போது எந்த மதத்தில் பிறந்தானோ - இறக்கும் வரை அந்த மதத்திலேயே இருக்கக் கடமைப்பட்டவன்!"

வேறு மதம் ஒன்று உயர்வென்று தோன்றினாலும் கூடவா சுவாமி?

மதங்களில் உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பேதங்களுக்கே இடமில்லை அனைத்து மதங்களும் போதிப்பது ஒரு வழியைத்தான் அறிந்து கொள் ஸ்ரீராம்!

"அது எந்த வழி?"

"அன்பு வழி?"

"உங்கள் முன்னைய அவதாரம் எது சுவாமி?"

"ஷீரடி சாயி"

"அடுத்த அவதாரம் என்ன சுவாமி?"

"பிரேம சாயி"

"அது எங்கே நடக்கும்?"

"கர்நாடகா மாநிலத்தில் - மைசூர் மாவட்டத்தில்!"

"அப்போதும் ஈஸ்வராம்பாதான் உங்கள் அன்னையாக இருப்பாரா?"

"அப்போதும் கூட என் அன்னையை நானே தான் தேர்ந்தெடுத்துக் கொள்வேன்"

"தந்தையார் பெத்தவெங்கப்பராஜீவேதானா?"

"தந்தையும் என்னால் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்"

"அத்துடன் உங்கள் அவதார மகிமைகளை முடித்துக்கொள்வீர்களா சுவாமி?"

"இல்லை. தர்மத்தை நிலைநாட்ட, சத்திய வடிவாக, காலங்கள் தோறும் மீண்டும் - மீண்டும் யுகம் யுகமாய் இவ்வுலகில் நான் வந்து அவதரிப்பேன்!"

"எங்கள் அன்பான யுகஅவதாரன் நீங்கள் தான் சுவாமி!"

"நல்லது. எல்லா உலகங்களும் இன்புற்று வாழட்டும்!"

(லோகாஸ் ஸமஸ்தாஸ் சுகினோ பவன்து)

சத்தியதரிசனம்

*2002*

# 19

## அணில் முதுகில் கோடுகள்

அன்று பௌர்ணமி தினம். வானத்து வெண்ணிலவு இரவைப் பகலாகக் காட்டியது. முத்தம்மாப் பாட்டி முற்றத்து மணலில் தன் கால்களை நீட்டி அமர்ந்திருந்தாள். பாட்டியைச் சுற்றி அவளது பேரக்குழந்தைகள் எல்லாம் இருந்தன. நிலாக்கால இரவுகளில் வீட்டு முற்றத்தில் வைத்தும் மற்றும் சமயங்களில் வீட்டின் உள்ளே வைத்தும் தன் பேரப்பிள்ளைகளுக்குக் கதைகள் சொல்லி மகிழ்விப்பது பாட்டியின் வழக்கம்.

இன்று தான் ஒரு கதை சொல்லப் போவதாகப் பாட்டியின் மூத்த பேரன் தமிழ்மாறன் அறிவித்தான். பாட்டியும், "சொல்லடா சொல்லு...... நாங்கள் உன் கதையைக் கேட்கிறோம்" என்று தமிழ்மாறனை ஊக்குவித்தாள்.

"வேண்டாம் பாட்டி. அண்ணாவுக்கு உங்களைப் போல நன்றாக கதைசொல்லத் தெரியாது. நீங்களே கதை சொல்லுங்கோ பாட்டி" என்று சிணுங்கின மற்றைய பிள்ளைகள் எல்லாம்.

“இல்லையில்லை தமிழ்மாறனே கதை சொல்லட்டும். அப்புறம் நான் சொல்கிறேன்” என்று முடிவாகச் சொல்லிவிட்டாள் பாட்டி.

தமிழ்மாறன் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான்.

“பாட்டி, பாட்டி அணில் முதுகில் மூன்று கோடுகள் இருப்பது ஏன் என்று தெரியுமா பாட்டி?” என்று பாட்டியிடம் கேட்டான் தமிழ்மாறன்.

“ஏனாம்?” என்று கேட்டுக்கொண்டே உரலில் இடித்த பாக்கு வெற்றிலையை அள்ளி எடுத்து வாயில் போட்டு மெல்லத் தொடங்கினாள் பாட்டி.

“இதோ சொல்கிறேன் கேளுங்கள்” என்று சொல்லி தன் நண்பன் தனக்குச் சொன்ன, “அணில் முதுகில் கோடுகள்” என்னும் கதையைச் சொல்லத் தொடங்கினான் தமிழ்மாறன்.

முன் ஒரு காலத்தில் நாட்டில் கடும் தண்ணீர்ப் பஞ்சம் ஒன்று வந்ததாம். நீண்ட நாட்கள் மழை பெய்யாத காரணத்தால் கிணறுகள் யாவும் வற்றிப்போய்விட்டனவாம். கொடுமையான வரட்சி காரணமாய் உயிரினங்கள் எல்லாம் ‘தண்ணீர்....தண்ணீர்’ என்று தவித்துப் போய் நின்றனவாம். அவை கடவுளிடம் தம் துன்பத்தை முறையிட்டு அழுதனவாம். அப்போது கடவுள் அவர்கள் முன் தோன்றினாராம்.

“உங்களுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் புதிய கிணறு ஒன்றைத் தோண்ட வேண்டும்” என்றாராம். பின்னர் அக்கூட்டத்தில் நின்றிருந்த அணில் பிள்ளை ஒன்றையும் புலுனிக்குஞ்சு ஒன்றையும் தன்னருகே அழைத்தாராம். அவற்றிடம் கிணறு தோண்டும் பணியை ஒப்படைத்துவிட்டு மறைந்து போனாராம்.

கடவுளின் கட்டளையை மதித்து புலுனிக்குஞ்சு கஷ்டப்பட்டு கிணறு வெட்டியதாம். அணிலோ அலட்சியமாக மரங்களிலே தாவி ஏறிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்ததாம். கிணறு வெட்டி முடிந்ததும் அதைக் கடவுளிடம் சொல்வதற்காக புலுனிக்குஞ்சு போனதாம். அதை முந்திக் கொண்டு அணில்பிள்ளை அங்கே ஓடிப்போய்விட்டாராம்.

அவர் எப்படிப் போனார் தெரியுமோ? கிணறு வெட்டி வந்திருந்த சேற்றுநீரில் உருண்டுபுரண்டு தன்னை அழுக்காக்கிக் கொண்டு..... ஆனால் புலுனிக்குஞ்சு கடவுளைப் பார்க்கப் போகிறேனே என்று நன்றாகக் குளித்து முழுகி சுத்தமாகத் தான் போயிருந்ததாம்.

கடவுள் இரண்டு பேரையும் பார்த்தாராம். அணில்தான் கிணறு வெட்டிக் களைத்துப்போய் வருகிறது என்று நினைத்தாராம். அணில்

முதுகில் அன்புடன் வருடிக் கொடுத்தாராம். அது திருநீற்றுக்குறிகள் போல் மூன்று வெண்குறிகளாக அதன் முதுகில் படிந்துபோய் விட்டதாம்.

பின்பு புலுனிக்குஞ்சைப் பார்த்து, "நீ என் கட்டளையை மதித்து நடக்கவில்லை.... கிணற்றை வெட்டவில்லை. அதனால் தத்தித் தத்தி நடப்பாயாக!" என்று சாபமிட்டாராம் என்று மூச்சுவிடாமல் கதை சொல்லி முடித்தான் தமிழ்மாறன்.

"போடா போ. பொய்க் கதையெல்லாம் சொல்லாதே! கடவுளை யாராவது ஏமாற்ற முடியுமா?" என்றான் இளமாறன். இதைக் கேட்டு குழந்தைகள் எல்லாமே "பொய்க் கதை.... பொய்க்கதை" என்று சொல்லி கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்துவிட்டன.

தமிழ்மாறனின் முகம் வாடிப்போய் விட்டது.

"யார் உனக்கு இந்தக் கதையைச் சொன்னார்கள்?" என்று மாறனிடம் கேட்டாள் பாட்டி.

"என் நண்பன் அறிவழகன் தான் சொன்னான் பாட்டி" என்றான் தமிழ்மாறன்.

"சரி இருக்கட்டும். கதை என்றால் கற்பனையும் இருக்கும். உண்மையும் இருக்கும். இன்னும் எத்தனையோ பல விடயங்கள் ஒரு கதைக்குள் பொதிந்திருக்கும். அவற்றைப் பகுத்தறிந்து பார்க்கும் திறமைதான் எமக்கு வேண்டும். அணில் முதுகில் கோடுகள் எப்படி வந்தன என்ற இன்னுமொரு கதை உண்டு. அதை நான் இப்போது உங்களுக்குச் சொல்லப்போகிறேன்." என்று சொல்லி, அந்தக் கதையை சொல்லத் தொடங்கினாள் முத்தம்மா பாட்டி.

"உங்களுக்கு நான் இராமாயணக் கதைகள் எல்லாம் சொல்லியிருக்கிறேன்தானே. அதிலே வரும் கதை நாயகன் ஸ்ரீராமனையும் நீங்கள் அறிவீர்கள் தானே. இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒன்பது அவதாரங்களில் அவரும் ஒரு அவதாரம் என்பதும் உங்களுக்குத் தெரியும் தானே." பாட்டி தன் பேரப்பிள்ளைகளிடம் கேட்டாள்.

"தெரியும் பாட்டி தெரியும்" என்று ஒரே குரலில் சொல்லின பிள்ளைகள் எல்லாம்.

"ஓம். இறைவன் தானே நேரில் வந்து அருள் செய்ய முடியாத காரணத்தினால் தான் அவதாரங்களைப் படைத்தார். மனித உருவில் தோன்றிய அந்த இறைதூதர்களும் தமக்குரிய அவதாரப் பணிகளை அந்த

ஆண்டவனின் கட்டளைப்படி நிறைவேற்றிச் செல்வார்கள். இராமர் இவ்வுலக அவதாரம் செய்ததன் முக்கிய காரணம் இராவணனை வதம் செய்வதற்காகவே"

"வதம் என்றால் என்ன பாட்டி?" குழந்தைகள் கேட்டன.

"வதம் என்றால் தீமையை இல்லாமல் ஒழிப்பது என்று பொருள்" என்ற பாட்டி தொடர்ந்தும் கதை சொல்லலானாள்.

"இராமர் சீதையை சிறை மீட்டுச் செல்ல இலங்கை வந்தாரல்லவா? அப்போது தனது போர்ப் படைகளை கடல் மார்க்கமாகவே அவர் இங்கு கொண்டுவர வேண்டியிருந்தது. அதற்காக கடலில் பாலம் ஒன்றைக் கட்டுவித்தார் இராமர். இந்த மண் அணையின் பெயர் "சேதுபந்தனம்" என்பதாகும். அவர் சேது அணையைக் கட்டுவித்துக்கொண்டிருந்தபோது ஒரு சிறு அணில் கூட அவருக்கு உதவியதாம். அதன் காரணமாய் அவர் அணில் முதுகில் பரிவுடன் வருடிக்கொடுத்ததே, அங்கே அழகான மூன்று கோடுகளாகப் பதிந்து போய்விட்டதாம்" என்று சொல்லி முடித்தாள் பாட்டி.

"அணில் எப்படி அணை கட்டும் பாட்டி?" என்று கயல்விழி கேட்டாள்.

"இராவணனை வெல்வதற்காக ஒரு சிறு அணில் கூட இராமருக்கு உதவியது என்பதையே இந்தக் கதையின் கருப்பொருள் விளக்குகிறது. மற்றும்படி அணில் அணை கட்டுமா..... கட்டாதா என்ற கேள்விக்காக ஏற்பட்ட கதையல்ல இது" என்று கயல்விழிக்கு விளக்கம் சொன்னாள் பாட்டி.

"சரிதான்... சரிதான்" என்று தம் தலைகளை ஆட்டி பாட்டி சொன்ன விளக்கத்தை திருப்தியுடன் ஏற்றுக் கொண்டன அனைத்துக் குழந்தைகளுமே.

"ஆனால் இராமரோடு சண்டை செய்த இராவணனுக்குப் பத்துத் தலைகளாமே பாட்டி! அது எப்படி? அந்தப் பத்துத்தலைக் குழந்தையை இராவணனின் அம்மா எப்படி தன் வயிற்றில் சுமந்து பெற்றாள்?" இளமாறன் தன் நீண்ட நாள் சந்தேகத்தை பாட்டியிடம் கேட்டான்

"தமிழில் 'உவமை அணி' என்று ஒன்று உண்டு. தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை விளங்க வைக்க இவ்வணி உபயோகிக்கப்படுகிறது. 'பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்' என்று குனித்த புருவமும் எனத் தொடங்கும் தேவாரத்தில் ஒரு வரி வருகின்றதல்லவா? அதற்கு என்ன அர்த்தம் என்று தெரியுமா? பவளம்

போன்ற சிவந்த மேனியில் பால் போன்ற வெண்மை நிறமான திருநீறு இருப்பது போல என்பதுதான். அதேபோலத்தான் இராவணனின் பெரும் ஆற்றலைக் குறிக்கும் வகையில் 'பத்துத் தலை' உள்ளவனாக அவன் அறிமுகம் செய்யப்படுகின்றான். இங்கே பத்துத்தலை என்று வருவது உவமை அணியைச் சேர்ந்ததாகும்." என்று இளமாறனின் கேள்விக்கு அழகாக விளக்கம் சொன்னாள் பாட்டி.

குழந்தைகள் எல்லாமே அந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு விட்டன.

"பாட்டி, அவதாரங்களை எங்களிடம் அனுப்பி வைத்தவர் இறைவன் என்றால், அந்த இறைவன் எங்கே இருக்கிறார் பாட்டி" என்று ஆவலுடன் கேட்டாள் கனிமொழி.

"இது ஒரு நல்ல கேள்வி" என்று கனிமொழியின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்னும் உண்மைதனை விளக்க ஆரம்பித்தாள் பாட்டி.

"இந்த உலகம் இயங்குவதற்கான காரணம் பஞ்சபூதங்களின் செயற்பாடுகளாகும். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பவையே இப் பஞ்சபூதங்களாகும். இவற்றுள் நிலம், நீர், நெருப்பு, ஆகாயம் என்பவற்றை நாம் கண்களினால் காண முடியும். ஆனால் காற்றை மட்டும் காணவே முடியாது. மரங்கள், இலைகள் என்பன அசைவதன் மூலமே காற்றின் இயக்கத்தை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் அந்தக் காற்று இல்லாமல் எங்களால் உயிர்வாழவே முடியாது. அதுபோலவேதான் கடவுளும், நம் வாழ்வில் உண்டாகும் நிகழ்வுகள் மூலமாக நாம் கடவுளை உணர்ந்து கொள்ள முடியும். இந்துசமயத்தில் இறைவனை பல வடிவங்களில் காணலாம். அதில் நாம் விரும்பும் ஒரு வடிவத்தைத் தெரிவு செய்து, அந்த இறைவடிவத்தின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, வணங்கி வழிபாடு செய்து வந்தால் பலன் உண்டு. அப்படி வணங்கும் போது உண்மை, நேர்மை, உயிர்களிடத்தில் அன்பு என்னும் நற்பண்புகளையும் நாம் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். காற்று எப்படி நம் கண்ணுக்குத் தெரியாமலே நம்மை வாழ வைக்கிறதோ அப்படியேதான் கடவுளும்" என்று சொல்லி முடித்தாள் பாட்டி.

" அப்படியானால் சிலர் கடவுளே இல்லை என்கிறார்களே பாட்டி" என்று கேட்டாள் தமிழினி.

"ஓமோம்! அப்படிப்பட்டவர்களும் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் தான். அவர்களின் அறியாமை தான் அதற்கான காரணமாகும். அவர்களை

'நாத்திகர்' என்று சொல்வார்கள். கடவுளின் பெயரால் பொய்யும் புரட்டும் செய்து கொண்டும், மூட நம்பிக்கைகளைக் கடைப்பிடித்துக் கொண்டும், உயிர்களை வதைத்துக் கொண்டும், போலி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் பொய்யான மனிதர்களைப் பார்த்து வெறுத்துப் போனவர்களே 'கடவுளே இல்லை' என்ற முடிவுக்கு வருகிறார்கள். சமயப் பற்றுள்ள குடும்பத்தில் பிறந்தவர்கள் கூட மேற்கூறிய காரணங்களினால்தான் நாத்திகராக மாறி விடுகிறார்கள். அதே சமயம் இவர்களில் சிலர் தமது நற்குண நற்செயல்களினால் அன்புள்ள நல்ல மனிதர்களாக வாழ்ந்து காட்டுவதும் உண்டு. 'அன்பே சிவம்' என்று வழங்குவது இதன் காரணமாகத்தான்."

இனிய தமிழில் தேவாரப் பாடல்களைப் பாடிய நாயன்மார்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்போரும் - தேன் தமிழில் திருவாசகம் பாடியவரான மாணிக்கவாசகரும் எதற்காக அவற்றைப் பாடி வைத்தார்கள்? இறைவனின் அற்புதங்களை அவர்கள் உணர்ந்த காரணத்தினால்தான் அவர்களால் அவற்றைப் பாடமுடிந்தது! வெறும் கல்லைப் பார்த்து இத்தனை உயிரோட்டமுள்ள பக்திப்பாடல்களை யாராவது பாடுவார்களா என்ன?

திருமூலரின் திருமந்திரத்திலிருந்து - திருவள்ளுவரின் திருக்குறள் வரையும் அவர்களின் ஆக்கத்திறனுக்கு அருள்புரிந்தவர் ஆண்டவனே! கடவுள் தன் இருப்பை உணர்த்துவதற்காக காலத்தால் அழியாத கருவூலங்களையெல்லாம் இப்படிப்பட்டவர்களைக் கொண்டு படைப்பித்து வைத்திருக்கின்றார் என்பது தான் உண்மைத் தத்துவமாகும்.

இன்னும் இராமலிங்கவள்ளலார், ரமணமகரிஷி, சுவாமி ராகவேந்திரர், இராமகிருஷ்ணபரமஹம்சர் போன்ற மகான்களும் இறையருளால் தோன்றிய மனிதப் பிறவிகள் தான். இறைவனின் கருணையைப் பெற்றவர்களே, இறைவனின் இருப்பையும் உணர்ந்து கொள்கிறார்கள்! "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று சொல்கிறது சிவபுராணம்..... என்று சொல்லிக்கொண்டே தன் பேரக்குழந்தைகளின் முகங்களை நிலவொளியில் உற்றுப் பார்த்தாள் முத்தம்மாப் பாட்டி.

அனைவரின் முகங்களும் 'நம்பிக்கை ஒளி'யுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

வைரப்பனைமரம்

*2008*



பெற்ற தாயும்

தாய்த்திருநாடும்

உற்ற தெய்வமும்

ஒன்றெனச் சேரும்

பொழுது புலர்ந்தது

புதுயுகம் பிறந்தது...

ISBN 955444010-4
9789554440104

Harikanan, Jaffna.